வெளியீடு 31-1-2007

Issued 31-1-2007

756
13.08.07
13/08/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஆகஸ்ட் 9, 2006—தொகுதி 9—எண் 1

Wednesday the 9th August, 2006 —Volume 9—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V 21, 3 : 'P06
P06 . 9 . 1
227422

[Price Rs. 3.00

## 9-8-2006

## உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-viii

Governor and Council of Ministers ix-xiii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv-xvii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xix-xxix

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-22

**2. தகவல் கோரல்—**

(அ) உணவு விடுதி நடத்த அனுமதி வழங்கிய கோப்பு—முன்னாள் பேரவைத் தலைவர் பத்திரிகைக்கு அளித்துள்ள செய்தியும், உண்மை நிலையும் 23-29

(ஆ) புதிய வீராணம் திட்டச் செலவு பற்றி இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் 35-41

**3. உரிமை மீறல் பிரச்சினைகள்—**

(அ) மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் 8-8-2006 அன்று தெரிவித்த சில கருத்துகள் 30-34

(ஆ) உறுப்பினர் திரு. கோ. அரி, பேரவைத் தலைவரை விமர்சனம் செய்துகொண்டே வெளிநடப்புச் செய்த செயல் 34-35

| | பக்கங்கள் |
|---|---|
| **4. கவன ஈர்ப்பு—** | |
| மேக்கோடு, ஒட்டலிவிளை, ஆதி திராவிட மக்கள் அனுபவித்து வந்த நிலத்தின் பட்டா வேறு சிலருக்கு வழங்கப்பட்டதால் ஏற்பட்ட நிலை | 42-47 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 25—உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிர்வாகம் | 48-210 |
| (ஆ) கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை | |
| * மாண்புமிகு திரு. கே.என். நேரு | 48,59, 90-91, 98-105, 109-110,142, 168, 169-170, 177-193 |
| * திரு. இரா. விசுவநாதன் | 91-102, 104-111 |
| திரு. கே.பி. இராமசுவாமி | 107, 111-121 |
| திரு. மா. தண்டபாணி | 80, 121-130, 206 |
| * திரு. த.அ. மேகநாதன் | 130-137 |
| * திருமதி ஜி. லதா | 137-141 |
| * திரு. கே. உலகநாதன் | 51, 73-74, 142-145, 194, 204 |
| * திரு. டி. செங்குட்டுவன் | 145-155 |
| திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 155-163 |
| திரு. வே. செந்தில் பாலாஜி | 166-177 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 211 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்று கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

227422
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

D
V21,3;1'N06
N06 9.1

**13. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**19. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**23. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**25. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

**26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

**28. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**29. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**30. கதர்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister – The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

**2. Minister for Finance – The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

**3. Minister for Electricity and Rural Industries – The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

**4. Minister for Rural Development and Local Administration – The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste land Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

17. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment

18. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

19. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

20. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

21. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

22. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

23. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



24. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

25. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Home.

26. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

27. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

28. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

29. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

30. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள்#

திரு. ப. ரங்கநாதன்
திரு. துரை சந்திரசேகரன்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. தி. வேல்முருகன்
செல்வி கே. பாலபாரதி
திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. - குழு அலுவலர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயல..ளர் (பதிப்பாளர்)

திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். - துணைச் செயலா ளர்

திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திரு. கோ. தேவராசன், பி.ஏ. - சார்புச் செயலாளர்



திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. - தலைமை நிருபர்

திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன், எம்.ஏ. - தலைமை நிருபர்

திரு. து. சீனிவாசன், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. ம. பன்னீர் செல்வம் - தலைமை நிருபர்

திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராயநகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி
108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)



133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு கு. - திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)
177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை



179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்
200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்

| | | |
|---|---|---|
| 201. | ராஜா, திரு. என்.கே.கே.பெ. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | - மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. இரா. விடுதலை | .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 24, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 9, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு."

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

16—

### வட்ட அலுவலகம்

***183—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு வட்ட அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற ஆட்சி எல்லை இறுதியாக வெளியிடப்படும் வரை, 15–2–2004 நாளில் உள்ள ஆட்சி எல்லையை மாற்றம் செய்யக்கூடாது என ஆணையிடப்பட்டுள்ளதால், நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு வட்ட அலுவலகம் அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் ஒன்றியம், குடவாசல் ஒன்றியம் ஆகிய இரு ஒன்றியங்களை உள்ளடக்கிய தொகுதி குத்தாலம் தொகுதி. அதில் குடவாசல் ஒன்றியத்திற்குத் தனியாக வருவாய் வட்டம் செயல்பட்டு வருகிறது. தொகுதியின் தலைநகரான குத்தாலம் அனைத்துத் தகுதிகளைப் பெற்றிருந்தும் இன்னும் வருவாய் வட்டத் தலைமையிடமாக ஆக்கப்படவில்லை. எனவே, வருவாய் வட்டம் அமைய, தொகுதி வரையறைப் பணி முடிந்தவுடன் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, தொகுதி வரையறை, எல்லை வரையறை முடிந்தவுடன் நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்கின்ற ஓர் அறிவிப்பு குறித்து சீக்கிரம் அரசு முடிவெடுக்கும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு புரட்சிகரமான சிந்தனையை வெளியிட்டிருக்கின்றார்கள். சென்னை மாநகரைப் பொறுத்தவரையிலே மிகப் பெரிய மாவட்டமாக சென்னை மாவட்டம் இருந்துகொண்டிருக்கின்றது. அந்த மாவட்டத்தைப் பிரிக்கின்ற முயற்சியில் அரசு ஈடுபடுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக, மாவட்டங்களைப் பிரிப்பது பற்றிய விளக்கத்தை இந்த அவையிலே தந்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட எல்லையை மாவட்டமாக அறிவிப்பது குறித்தும் முடிவு செய்ய இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, நிச்சயமாக வருகின்ற காலத்திலே நிறைவேற்றப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து ஏறக்குறைய 4 ஆண்டுகள் முடிந்துவிட்டன. தருமபுரி மாவட்டத்திற்கு ஒரே ஒரு வருவாய்க் கோட்டாட்சியர் மட்டுமே உள்ளார். 5 வட்டங்களுக்கு ஒரே ஒரு வருவாய்க் கோட்டாட்சியர். பாப்பிரெட்டிப்பட்டி—அரூர். அரூரைத் தலைமையிடமாகக் கொண்டு அரூரிலே ஒரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்தினால் 150 கிலோ மீட்டர் தூரம் செல்லும் பழங்குடி மக்கள், இதர மக்கள் சென்று வருவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அரூரிலே ஒரு கோட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பினால், அந்த எல்லையை எல்லாம் வரையறுத்து அதற்கேற்றாற்போல் எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகம் போதிய இட வசதியின்றி உள்ளது. புதிய பெரிய அலுவலகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் அளவுக்கு ஏறத்தாழ 8 புதிய வட்ட அலுவலகங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த அரசு அதை நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியிலுள்ள திருமருகல் ஒன்றியத்தில் வட்ட அலுவலகம் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அடுத்த நிதியாண்டிலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியில் திருப்போரூரில் வட்ட அலுவலகம் ஒன்று துவக்கப்படுமா என்று அரசு விளக்க வேண்டும்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனி வினா போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**17—**

## கட்டட வசதி

***630—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வடபூதனம் கிராமத்திலுள்ள கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வடபூதனம் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலகம், புதிய கட்டடம். 2004 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாலும், தற்போது நல்ல நிலையில் உள்ளதாலும், மேற்படி கட்டடம் புதிய கட்டடம் என்பதாலும், அதனைப் புதுப்பிப்பதற்கோ, அல்லது சீரமைப்பதற்கோ அவசியமில்லை. (ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதி, வடபூதனத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அதிலே சுருக்கி போடாமல், மின்சார விளக்கு போடாததன் காரணமாகத்தான் இந்த வினா கேட்கப்பட்டிருந்தது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நம்முடைய வருவாய்த் துறைமூலமாக—ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து போடப்பட்டது; அதை வருவாய்த் துறையில் நிதி இருந்தால் போடலாம் அல்லது வேறு ஏதாவது வழியில் போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேல்தளமும், மின் விளக்கு வசதியுமில்லை என்று சொல்கின்றார்கள். அது குறித்து அவர்கள் தனியாக வினா எழுப்பினால், அதற்குப் பதில் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊர்களில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டியும், அங்கே கிராம நிர்வாக அலுவலர்கள் வந்து பணிகளைச் செய்வதில்லை. அதைச் சீர் செய்கின்ற வகையிலே, அவர்கள் எல்லாம் அந்தக் கட்டடங்களிலே வந்து பணி செய்ய வேண்டிய நிலை உருவாக்கப்படுமா? அவர்கள் அங்கேயே தங்கியிருந்து பணி செய்யக் குடியிருப்புகள் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே பல்வேறு இடங்களிலே கிராம நிர்வாக அலுவலர்கள் குடியிருப்பதற்கு வீடுகள் இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகள் எல்லாம் இல்லாத இடங்களிலே வருகின்ற காலத்திலே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1996–2001, மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, தருமபுரிக்கு அமர்வு நீதிமன்றம் ஆரம்பிப்பதற்காக உத்தரவிடப்பட்டது. ஆனால், இன்று வரை அந்த அமர்வு நீதிமன்றம் ஆரம்பிக்கப்படாமலே உள்ளது. ஆகவே, ஆரம்பிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் ஏராளமாக மூடிக் கிடக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இப்போது அந்த அலுவலகங்களிலே மின் வசதி இல்லை என்றும், அதேபோன்று, நிறைய இடங்களில் பொது மக்களைச் சந்திக்கிறபோது அவர்களுக்காகக் கழிவறைகள் எல்லாம் இல்லை என்ற ஒரு குறையும் இருக்கிறது. அக்குறைகளையெல்லாம் நீக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் முயலுமா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் வசதி இல்லை, கழிப்பட வசதி இல்லை என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை அரசின் கவனத்திற்குத் தற்சமயம் கொண்டு வந்திருக்கின்றீர்கள். நிச்சயமாக அவற்றின்மீது அரசு கவனம் செலுத்தும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலருக்கான கட்டடம் பற்றிய கேள்வியோடு, கிராம நிர்வாக அலுவலர்கள் பற்றிய ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். நமது தமிழகத்தில் 2,500–க்கும் மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று அறிகிறேன். அந்த இடங்களை நிரப்புவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா? அப்படி மேற்கொள்கிறபொழுது, கிராமப் பணியாளர்களாக, பட்டம் பெற்றவர்கள், தகுதி உள்ளவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்களை அந்த இடத்திற்குப் பணி உயர்த்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள், ஏறத்தாழ 2,600 இடங்கள் தற்சமயம் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதே சமயத்தில், அவர், அங்கே பணியாற்றுகின்ற உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

முற்பகல் 9–40

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று ஒரு list எடுக்கிறார்கள். அதிலே ஏற்கெனவே உள்ள list–ஐ அப்படியே கொடுப்பதாக எனக்கு ஒவ்வொரு நாளும் காலையிலே தொலைபேசிமூலமாகத் தகவல் சொல்கிறார்கள். அந்த list–ல் யார் வறுமைக் கோட்டிற்குக் கீழே—ஏற்கெனவே தவறாக எடுக்கப்பட்டிருந்தவர்களில் நீக்கப்பட்டவர்கள் யார், புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள் யார் என்ற விவரத்தைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்களா? நிச்சயமாக, உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் அந்த list–லே இடம் பெறுவதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், கிராம ஊராட்சிகளிலே, தற்சமயம் தேதி நிர்ணயம் செய்யப்பட்டு, அங்கே அவர்கள் தொடர்புகொண்டு, சேர்க்கப்படவில்லை என்றால், அங்கேயே தெரிவிக்கலாம். கிராம சபைக் கூட்டம் நடத்தினால், அப்போது எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது உள்ளாட்சித் துறையிலே அந்த நடவடிக்கையும் சேர்த்து நடந்துகொண்டிருக்கிறது. அதனால், அப்படி விடுபட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்கள் சேர வேண்டும் என்றால், அங்கே உள்ளாட்சி மன்றத்திலே கணக்கெடுப்பிலே தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்.

18—

## புதுப்பித்தல்

•530 திரு. கு. சீனிவாசன்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பூங்கா நகர் 45—வது வட்டம், கேசவ பிள்ளை பூங்கா அருகிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். நடப்பு நிதியாண்டிற்கு இந்தத் திட்டப் பகுதியில் 7.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், முழுமையான detailed estimate கோரப்பட்டுள்ளது. அந்த மதிப்பீடு வந்தவுடன்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார் என்று நேற்றையதினம் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது தெரிவித்தேன்—எஞ்சிய பகுதிகள் அந்த நிதியிலிருந்து எடுத்துச் செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஆகஸ்ட் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. சீனிவாசன்.

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன், 18-5-2006 அன்று அப்போது குடிசை மாற்றுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், சென்னை மாநகர எல்லையிலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை ஆய்வு செய்து, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, 30 ஆண்டு காலம் ஆகியிருந்தால், அவற்றின் நிலையை அறிந்து, இடித்து, புதிதாகக் கட்டித் தரப்படும் என்று கூறியிருக்கிறார். இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், நான் கேள்வி எழுப்பிய கேசவ பிள்ளை பூங்கா குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு 24 ஆண்டுகள் ஆகின்றன. அதன் நிலையை இன்று பார்த்தால், ஜன்னல்களில் மரச் சட்டங்கள் மட்டும்தான் உள்ளன. கதவுகள் கிடையாது. குடியிருப்புகளின் உட்புறச் சாலைகள் பல்வேறு காலகட்டங்களிலே மேன்மேலும் போடப்பட்டு, அவை உயர்ந்துள்ளன. தரைத் தளத்திலுள்ள வீடுகள் பள்ளமாக இருக்கின்றன. அதன் காரணமாக, தரைத் தளத்திற்கு உள்ளே செல்ல வேண்டும் என்றால், மாடிக்குச் செல்லும் படிகளின் landing தலையில் இடித்துவிடும். அந்த அளவிற்கு 3-1/2 அடி, 4 அடி உயரம்தான் இருக்கிறது, உள்ளே போகிற வழி. அதனால், அதனுடைய சீர்கேடுகளைக் களைந்து, 30 ஆண்டு காலம் என்பதை, அந்தந்தக் குடியிருப்புகளின் சீர்கேடுகளை ஆராய்ந்து, அறிந்து, குறைந்தது 25 ஆண்டு காலமாகி இருந்தால்கூட, புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, 1982-83 ஆம் ஆண்டில் இது கட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டுள்ள வீடுகளை எல்லாம் இடித்து விட்டுப் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொன்னாலும், இப்பொழுது முழுமையாக மாண்புமிகு முதலமைச்சருடைய அந்த அறிவுரைக்கேற்ப, அனைத்து வீடுகளும் பொறியாளர் குழு அமைக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அந்த ஆய்வு அறிக்கையைப் பார்த்ததற்குப் பிறகுதான் முடிவு செய்யப்படும். தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முதலாகக் கொண்டு வந்து

அறிமுகப்படுத்தியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். துவக்கக் காலத்திலே கட்டிய கட்டடங்கள் நன்றாக இருக்கின்றன. இடைக்காலத்திலே கட்டிய சில கட்டடங்கள் சரியில்லை என்பதும் கண்டறியப்பட்டு வருகிறது. இருந்தாலும், முழுமையாகத் தொழில்நுட்ப அறிக்கை வந்ததற்குப் பிறகு, எந்த ஆண்டிலே கட்டப்பட்டது என்ற விவரங்களைப் பார்த்து, எந்தெந்தக் கட்டடங்களை இடிப்பது, என்பது பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ், நகரப் பேரூர்ப் பகுதிகளிலே வசிக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு மறுகுடியமர்வு (rehabilitation) திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதியிலே இருக்கின்றவர்களை—அதாவது, ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்றவர்களை உள்ளிட்டு அகற்றிவிட்டு, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் எந்த நிலையில் உள்ளது? நாமக்கல் நகரம், சங்ககிரி, தேவூர், அரசிராமணி, என் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் இந்தக் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்திற்கு அரசிடம் கருத்துரு உள்ளதா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-வது நிதிக் குழுவில் சென்னையில் இப்போது மூன்று இடங்களில் தேர்வு செய்யப்பெற்று, 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் பிற பகுதிகளுக்கு நிதி ஆதாரங்கள் திரட்டப் பெற்று, நிதி கிடைக்கின்றபோது, அவையெல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக, திருப்பத்தூரிலே 800 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவர்கள் நிர்ணயித்த





தொகையை 15 ஆண்டு காலத்திலே கட்டச் சொன்னார்கள், அதைக் கட்டி முடித்துவிட்டார்கள். ஆனால், அந்தப் பயனாளிகளுக்கு இதுவரை பத்திரம் வழங்கப்படவில்லை. அந்தப் பத்திரங்களையெல்லாம் வழங்குவதற்கு துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கேள்வி, குடிசை மாற்று வாரியமா அல்லது வீட்டு வசதி வாரியமா என்று தெரிவித்தால், அதற்கேற்ற பதிலைத் தங்கள்மூலம் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரப் பகுதியில் சற்றேறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகளிலே மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அமைச்சர் அவர்களோடு இது பற்றிப் பேசி, குடிசை மாற்று வாரியத்தினுடைய நிர்வாக இயக்குநரைத் திருப்பூருக்கு அனுப்பி, அவர் அந்த இடங்களையெல்லாம் ஆய்வு செய்து வந்திருக்கின்றார்கள். ஆகவே, திருப்பூர் பகுதியிலேயும் இதுபோன்று குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்கு மாடி வீடுகளோ, அல்லது குடிசைப் பகுதி மக்களின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கையோ எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் திருப்பூர் பகுதி, பிற மாவட்டங்களில் இருந்து தொழிலை, பிழைப்பை நாடிச் செல்லுகின்ற நகரம், வளர்ந்து வருகின்ற நகரம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நாங்கள் கலந்து பேசியிருக்கிறோம். குடிசை மாற்று வாரியத்தில், வீடுகளுக்கான இடம் தேர்ந்து, விலைக்கு வாங்குவதற்கு விதிகள் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இடத்தை—அரசாங்கப் புறம்போக்கு இடமோ, தனிப்பட்ட பெரிய தொழிலதிபர்களிடம் நன்கொடையாகவோ பெற்றுத் தந்தால், அந்த இடத்தில் உடனடியாகக் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க தலைவர்

அவர்களுடைய அரசு நிச்சயமாக முன் வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18-5-2006 அன்று ஆர்.கே. நகர் தொகுதியில் ஒரு ஆய்வினை மேற்கொண்டு, 25 ஆண்டுகள், 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட, பழுதடைந்திருக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் கட்டித் தருகின்ற முயற்சி மேற்கொள்ளப்படும் என்றார், நல்ல முயற்சி. அதே நேரத்தில், அந்தப் பகுதியிலே பல ஆண்டு காலமாக—10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று அந்தப் பகுதியைச் சுற்றிச் சிறு, சிறு குடிசைகளில் குடியிருந்து வாழ்ந்து வருபவர்களுடைய குடும்பங்களின் எண்ணிக்கையைக் கணக்கிலே கொண்டு, அவர்களுக்கும் புதித்தாகக் கட்டப்படுகின்ற வீடுகளிலே அதிக அளவு கட்டி, ஓதுக்கீடு செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் ஒரு கேள்விக்கு விரிவான பதிலைத் தெரிவித்தபோது, சென்னை மாநகரத்தில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 151 குடிசை வீடுகள் கட்டப்படும்; 2007-லிருந்து 2011-க்குள் கட்டி முடிக்கப்படும்; எந்தெந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குடிசைகள் எல்லாம் அதிலே வரவிருக்கின்றன என்பதை நேற்றையதினமே தெரிவித்திருக்கிறேன். அந்தப் பதில் இந்தக் கேள்விக்கும் பொருந்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் பல்லவர்மேடு பகுதி மயிலம் மடத்திற்குச் சொந்தமானது. அங்கு மக்கள் 40 ஆண்டு காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கே மடத்தைச் சேர்ந்தவர்கள், அந்த வீடுகளைக் காலி செய்ய வேண்டும், இல்லையென்றால் கிரயம் கொடுத்து, வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த மடத்தினுடைய சொத்துக்களை பட்டா போட்டுக் கொடுக்க முடியுமா என்று வினா எழுப்புகின்றேன்.





**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா போடுவது என்பது வருவாய்த் துறைக்கு உரியதாகும். எனவே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்.

**19—**

## குடியிருப்புகள்

**•2261—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர், கார்கில் நகரில் குடிசை மாற்று வாரியம்மூலம் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி திருத்தப்பட வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய அனுமதியோடு, கேள்வியில், சுனாமியால் பாதிக்கப்பட்ட கார்கில் நகர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கார்கில் நகர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியல்ல. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் கார்கில் நகரிலே உள்ள 15 ஏக்கர் நிலப்பரப்பில் குடியமர்த்தப்பட்டார்கள். அதன் பிறகு பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அங்கு நீர் சூழ்ந்தது. நீர் வடிந்தவுடன் மீண்டும் அங்கே குடியமர்த்தப்பட்டார்கள். மீண்டும் ஒரு சில திங்கள்களில் அது தீப்பற்றி எரிந்தது. அவர்களை இப்போது பாதுகாப்பாக ஒரு சமுதாயக் கூடத்திலே கொண்டு போய் வைக்க இருக்கின்றார்கள். இந்தத் தகவலை அறிந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஓர் உத்தரவிட்டார்கள். அந்த கார்கில் நகர் பகுதியிலேயே முதலில்

வீடு கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய பொறியாளர் குழுவிற்கு, இந்த இடம் வீடு கட்டுவதற்கு லாயக்குள்ளதா என்று ஆய்ந்து, ஆய்வறிக்கை அனுப்புமாறு துறையின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அங்கே அவர்கள் துளைப் படக் கருவியின்மூலம் துளை போட்டுச் சரிபார்த்ததில், அங்கு வீடு கட்டுவதற்கு லாயக்கில்லை, உகந்ததில்லை என அண்ணா பல்கலைக்கழகம் சான்றிதழ் வழங்கியிருக்கிறது. எனவேதான், அதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு போய், வேறு ஓர் இடம்–All India Radio–வுக்காக ஒதுக்கப்பட்ட ஓர் இடம், மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையின்பேரில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், நான், வருவாய் நிருவாக ஆணையர், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் எங்களுடைய துறை அதிகாரிகள், அத்தனை பேரும் போய் அந்த இடத்தைப் பார்வையிட்டோம். அது 3.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடமாகும். அதில் 81 கோடி ரூபாய் செலவில், 5,400 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு, உலக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உலக வங்கியும் ஒப்புதலை வழங்கிவிட்டது. ஆனால், இப்போது அந்தக் கோப்பு 50 கோடி ரூபாய்க்கு மேலே வருகின்ற காரணத்தினால், மத்திய சுற்றுப்புறச் சூழல் துறைக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. அதற்கு முன்னோட்டமாக, வரவிருக்கின்ற 18 ஆம் தேதி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அந்த இடத்திலே வீடு கட்டுவது பற்றி, மக்களுடைய கருத்துகளைக் கேட்பதற்காக, ஒத்திசைவைப் பெறுவதற்காக, மாவட்ட ஆட்சியர் அவர்களால் கூட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டம் முடிந்து, அவர்கள் பதிலைப் பெற்று, டெல்லிக்கு, சுற்றுப்புறச் சூழல் துறைக்கு அதை அனுப்பி வைக்கவுள்ளோம். நிச்சயமாக அனுமதி பெறப்படும். அனுமதி பெற்றவுடன், Administrative Sanction—நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி ஆகியவற்றைப் பெற்று, உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் அந்தப் பணிகளைத் தொடங்குவதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஒரு விரிவான விளக்கத்தினை இங்கே தந்தமைக்கு நன்றியைத்



தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்குக் காலதாமதம் ஆகும் என்பதால், சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட, வேறு எங்காவது கட்டப்படுகின்ற இடத்தில் குடியமர்த்துகின்ற கருத்துரு ஏதேனும் துறையின் ஆய்வில் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அருகில் Hindustan Lever நன்கொடையாக 5 ஏக்கர் நிலத்தைத் தந்திருக்கிறார்கள். அதில் 960 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்கு அருகிலே திலகர் நகரில் 432 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 2 அல்லது 2½ மாதகால அளவிற்குள் அந்த வேலை முடிந்துவிடும். இவர்களை அங்கே குடியமர்த்துவது பற்றிப் பரிசீலிப்பதில் ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. சென்னை மாவட்ட ஆட்சியரும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரும் கலந்து பேசி, யாரெல்லாம் சுனாமியால் உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பட்டியல் அவாகளிடத்திலே இருக்கிறது. அந்தப் பட்டியலில் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற நபர்கள் எல்லாம் யார், யார் வருகிறார்களோ, அவர்களைக் குடியமர்த்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே ஏழை, எளியோருக்கு இருக்கின்ற தொகுப்பு வீடுகள்போல, திருத்தணி போன்ற நகர்ப்புறங்களிலே ஏழை, எளியோர் பயனடைகின்ற வகையிலே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு உறுப்பினர் இனாமாக இடம் பெற்றுத் தந்தால், அது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத்.

[2006 ஆகஸ்ட் 9

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி, அதன் அருகினில் ஓலைக் குடிசை கட்டி' என்ற பாட்டிற்கேற்ப, நாம் சட்டமன்றத்திற்கு வரும் வழியிலேயே போர்ட் டிரஸ்ட்டுக்குப் பக்கத்திலேயே நிறையக் குடிசைகள் இருக்கின்றன. அதற்கும் குடிசை மாற்று வாரியம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் அப்புறப்படுத்துவதற்காகத்தான் நேற்றையதினம் என்னுடைய பதிலுரையில் விரிவாகத் தெரிவித்திருக்கிறேன். அந்தக் கட்டடப் பணி முடிந்தவுடன், இவர்கள் எல்லாம் அங்கு கொண்டு போய்க் குடியமர்த்தப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுகிற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுடைய எண்ணிக்கைக்கும், கட்டப்படுகிற வீடுகளின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, கட்டப்படுகிற வீடுகள்போக, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் வீடுகள் கிடைக்க, குடிசை மாற்று வாரியம்மூலமாக வீடுகள் கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கட்டப்படுகின்ற வீடுகள் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படுகின்ற வீடுகள் அல்ல. எனவே தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான் தொகுதியைச் சார்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 30, 40 வீடுகளுக்கு மேலாகத் தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீர் செய்து தர முடியுமா என்பதைத் தெரிந்துகொள்வதோடு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்படுகின்ற வீடுகள் மிகவும் குறைவான



2006 ஆகஸ்ட் 9]

விகிதத்தில் உள்ளன. அவற்றை அதிகரித்துத் தர முடியுமா என்பதனையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தேவையில்லாத கேள்விகளைக் கேட்டு, இந்த அவையினுடைய நேரம் வீணாகக்கூடாது என்பதற்காகத்தான் நேற்றையதினம், என்னென்ன பணிகள், எந்தெந்தத் துறையிலே நடைபெறுகின்றன, கிராமப்புறங்களிலே உள்ளாட்சித் துறையின்மூலமாகவும், ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலேயும், நடைபெறுகின்றன என்று நேற்றே சொல்லியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் துறையினுடைய அமைச்சர்களை அணுகி, தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளுமாறு தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னைப் பகுதியிலே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் கார்கில் நகரிலே குடியமர்த்தப்பட்டதுபோல, தென் சென்னையில் பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் கண்ணகி நகரிலே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அங்கும் லேசாக மழை பெய்தால்கூட வாழ முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கண்ணகி நகரிலே இருக்கக்கூடிய மக்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகி நகரில் அங்கே புதிதாக அடுக்கு மாடிக் கட்டடங்கள் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் மூன்று முறை பார்வையிட்டிருக்கிறேன். அந்த வீடுகளைப் போய்ப் பார்வையிடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

20— [2006 ஆகஸ்ட் 9

## பட்டா மாற்றம்

***1543—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை மீண்டும் கோயில் பெயரிலேயே பட்டா மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–00

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாகல்பட்டி அருள்மிகு சென்றாய சாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாகக் கீழ்க்கண்டவாறு நிலங்கள் உள்ளன: செல்லப்பிள்ளை குட்டை கிராமத்தில் 30.35 எக்டேர் நிலமும், பாகல்பட்டி கிராமத்தில் 31.32 எக்டேர் நிலமும், ஆக 154.17 ஏக்கர் நிலம். மேற்படி நிலங்கள் அனைத்தும் அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் பெயரிலேயே பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, 1900 மற்றும் 1925 ஆம் ஆண்டுகளில் பரம்பரை அறங்காவலர் குடும்பப் பாகப் பிரிவினைப் பத்திரங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட கிராமங்களிலுள்ள நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளன: அவை ஆறு கிராமங்களில் அதுபோல் நடைபெற்று இருக்கிறது. பச்சணம்பட்டி கிராமத்தில் 19.91 சென்ட் நிலமும், கோட்ட மேட்டுப்பட்டியில் 6.65 சென்ட் நிலமும், கோட்டக்கவுண்டன்பட்டியில் 6.83 சென்ட் நிலமும், சிக்கம்பட்டியில் 38.84 ஏக்கர் நிலமும், வெள்ளக்கல்பட்டியில் 9.44 ஏக்கர் நிலமும், ஓமலூரில் 1.75 ஏக்கர் நிலமும், ஆக 83.42 ஏக்கர் நிலங்கள் தவறான முறையில் தனியார்கள் பெற்ற பட்டாவை ரத்துச் செய்யவும், விடுபட்ட நிலங்களைக் கண்டறியவும், தேவையான தகவலைக் கொண்ட ஆவணங்களைக் கேட்டும், சேலம், இணை ஆணையரால், மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதப்பட்டு, தொடர் நடவடிக்கை



2006 ஆகஸ்ட் 9]

எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா மாற்றம் குறித்து ஒரு விரிவான தகவலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியினைச் சொல்லிக்கொள்கிறேன். அதே வேளையிலே, சேலம், அரசினர் பொறியியல் கல்லூரி — இன்றைக்கு இருக்கின்ற பல்கலைக்கழகத்திற்கு முன்பாக, சுமார் 4 ஏக்கர் நிலம்—ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த நிலத்தை, இதைப்போன்ற தனியார் சேலம், கே. சத்தியமூர்த்தி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திருக்கிறார். அது குறித்து, இந்த வினாவிலே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கு சொல்லியிருக்கிறார். ஆனால், ஒரு வருட காலத்திற்கும் மேலாகியிருக்கிறது, உத்தரவிட்டு. உடனடியாக மேட்டூர், கோட்டப் பொறியாளர் அவர்களுக்கு 15 தினங்களுக்குள் இந்த பட்டா மாற்றம் செய்யவேண்டுமென்று Commissioner அவர்கள் — அந்த அதிகாரிகள் உத்தரவிட்டும், அது நடைபெறவில்லை. எனவே, அந்த உத்தரவின்படி உடனடியாக இந்த அரசு பட்டா மாற்றம் செய்து வைக்க வேண்டுமென்று நான் மீண்டும் பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில், யாரும் தவறான முறையில் அவற்றை அபகரிக்க முடியாது. அப்படித் தற்காலிகமாக அவர்கள் அபகரித்திருந்தாலும், உரிய சட்ட முறைகளின்படி அவை மீண்டும் கையகப்படுத்தப்படும் என்பதைத் தங்களின்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய பல திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன. அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றி, கோயிலுக்குச் சொந்தமாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றது முதல் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதிலே கடும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், தேவைப்படுகின்ற இடங்களில், நீதிமன்றங்களில் சிறப்பு வழக்கறிஞர்களைக் கொண்டு அந்த வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகாசி

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், வரகூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கோயில்களில், புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் 33 திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்றன. அவற்றில், குறிப்பாக சிறுகுடல், சித்தளி, அனைப்பாடி போன்ற கிராமங்களில் திருப்பணிகள் நடைபெற்றன. அந்த வேலைகள் நடைபெற்றும், வேலை செய்தவர்களுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். அதற்கு அதிகாரிகள், மேலேயிருந்து உத்தரவு வரும். வந்தால்தான் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு எப்போது உத்தரவு வரும் என்றும், மேலும், கீழுமத்தூர், புதுவேட்டக்குடி கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டும், அங்கு திருப்பணிகள் நடைபெறவில்லை என்றும் இந்த மன்றத்தில் கூறி, அந்தப் பணிகள் எப்போது நடக்கும் என்றும் சபாநாயகர்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கேட்கின்ற எந்தக் கேள்விக்கும் விடையளிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால், மூலக் கேள்வியோடு தொடர்புடைய கேள்விகளாகக் கேட்டால், தற்போது பதில் சொல்ல இயலும். ஆகவே, உறுப்பினர் அறிய விரும்புகின்ற தகவல்களுக்குத் தனியாகக் கேள்வி எழுப்புமாறு உங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.



2006 ஆகஸ்ட் 9]

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுக்க இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில்களுடைய நிலங்களைச சில தனி நபர்கள், கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களைத் தங்களுடைய பெயர்களுக்கு பட்டா மாற்றம் செய்திருக்கிறார்கள். அதேபோல, குறிப்பாக, கடலூர் மாவட்டத்தில், என்னுடைய பண்ருட்டி பகுதியிலே இருக்கின்ற, நான் வாழ்கின்ற என்னுடைய சொந்தக் கிராமத்தில் இருக்கின்ற கோயிலுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை, பரம்பரை அறங்காவலர் என்ற பெயரில், பல நபர்கள், தங்களுடைய சொந்தப் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள்; பட்டா மாற்றம் செய்திருக்கிறார்கள். அதேபோல, பண்ருட்டி நகரிலே இருக்கின்ற பெரும்பான்மையான பகுதிகளில், இன்றைக்கு நம்முடைய பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர், நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்தச் சொத்துக்கள் எல்லாம் தனி நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய பொன்னான திட்டமான உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக, அந்த உழவர் சந்தைக்கான இடம் தேர்வு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று, அந்த இடத்தைப் பார்வையிட்ட பிறகும், நாங்கள் வேறு இடத்தில் சென்று அதைத் தடுத்துவிட்டோம் என்று கூறி, அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை பட்டா மாற்றம் செய்தவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அருகில் நின்று, அந்த இடத்தைத் தேர்வு செய்து poclain இயந்திரம்மூலமாகப் பணி நடந்துகொண்டிருக்கும்போதே நிறுத்துகின்ற ஒரு நிலைமை இந்த அரசில் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் களைவதற்கு, மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், மயிலாடுதுறை இணை ஆணையருடைய கட்டுப்பாட்டில் வருகின்ற, கடலூர் மாவட்டம் முழுவதும் இருக்கின்ற இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களெல்லாம், கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு நபர்களுக்குக் குறைந்த விலையில், 100 ரூபாய், 200 ரூபாய்க்கு, கோடிக்கணக்கான சொத்துக்கள் விடப்பட்டிருப்பதையெல்லாம் மறு சீரமைப்புச் செய்து, அரசும், இந்து அறநிலையத் துறையும் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், நஞ்சையும், புஞ்சையும் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள அளவிலே சொத்துக்கள் திருக்கோயில்களுக்கு இருக்கின்றன; துறைக்கு இருக்கின்றன. ஆகவே, அது சம்பந்தப்பட்ட வழக்குகள், ஏதோ இந்த ஆட்சி வந்த பிறகு உருவானவை அல்ல. ஏறத்தாழ 100 ஆண்டுகள், 150 ஆண்டுகள் கால வழக்குகள் எல்லாம் நிலுவையிலே இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு வழக்கையும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அந்த வழக்குகள் பற்றி, நிலங்களைப் பற்றிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். பொதுவாக, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்படி, அனைத்து வழக்குகளையும் துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்க்ள் எவையேனும் அபகரிக்கப்பட்டுத் தனியார் வசம் இருந்தால், அவை அனைத்தும் மீட்கப்பட்டு, துறைக்கு வர வேண்டும் என்பது அவர்களுடைய கட்டளை. அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளை முடுக்கிவிட்டிருக்கின்றோம். விரைவில் நல்ல தீர்வுகள் கிடைக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள திரு. அண்ணாமலையார், உண்ணாமுலையம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான இடங்கள், நிலங்கள், தலைநகர் சென்னை உட்பட, தமிழகத்திலே பல்வேறு இடங்களில் தனியார் வசம் உள்ளதாகத் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட இடங்களையும், நிலங்களையும் இந்த அரசு மீட்டு, திருக்கோயில்மூலமாக அரசு நிர்ணயிக்கின்ற தொகைக்கு மீண்டும் குத்தகைக்கு விடுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்றுச் செயல்படுவோம் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.



**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உணவு விடுதி நடத்த அனுமதி வழங்கிய கோப்பு— முன்னாள் பேரவைத் தலைவர் பத்திரிகைக்கு அளித்துள்ள செய்தியும், உண்மை நிலையும்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Speaker Sir.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஒரு உறுப்பினரை அழைத்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கூப்பிடுகிறேன், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3–8–2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, இன்னோர் உறுப்பினர் எழுந்து நிற்கக்கூடாது, உட்காருங்கள். திரு. மணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3–8–2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, முன்னாள் பேரவைத் தலைவராக இருந்த திரு. காளிமுத்து அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் நடத்தப்பட்டு வருகிற உணவு

விடுதிக்கு ஒப்பந்ததாரர்கள் கோருகின்ற நேரத்தில் ஒப்பந்ததாரர் கோரிய ஒப்பந்தத் தொகையைவிடக் குறைவாக விடப்பட்டிருக்கிறது என்ற உண்மைச் செய்தியை இம்மாமன்றததிலே சொன்னார்கள். ஆனால், இன்று முன்னாள் பேரவைத் தலைவராக இருந்த திரு. காளிமுத்து அவர்கள் இப்போது நாட்டு மக்கள் மத்தியிலே ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்; செய்தியாக மக்கள் மத்தியிலே இன்று பேசப்பட்டு வருகிறது. என்னவென்று சொன்னால், இன்று ஆட்சி, அதிகாரம், கோப்புகள் எல்லாம் முதலமைச்சர், அரசு கையிலே இருக்கிறது. அவர்கள் எப்படி வேண்டுமானாலும் கோப்புகளைத் திருத்திக்கொள்ளலாம். அதிலும் குறிப்பாக, இரண்டாயிரம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருந்ததை, அந்த இரண்டாயிரத்தோடு இரண்டு சுழி சேர்க்கப்பட்டு இரண்டு இலட்சம் என்று எழுதிக்கொண்டார் என்று முதலமைச்சர்மீது ஓர் அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். அதிலும் இன்றைய சூழ்நிலையில் மட்டுமல்ல, கடந்த காலந்தொட்டு, தமிழ்நாட்டு மக்களாலே, இந்தியத் திருநாட்டில் உள்ள மூத்த தலைவர்களாலே இந்திய நாட்டின் தலைசிறந்த முதலமைச்சர்கள் வரிசையில் முதல் இடத்திலே இருக்கிற ஒருவர், நிர்வாகத் திறன் மிக்க முதலமைச்சர் என்று சொல்லப்பட்ட கலைஞர் அவர்கள்மீது சொல்லப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு. ஆகவே அவர் சொன்னது உண்மைதானா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்தின் வாயிலாக நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

• **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் நலமில்லை. இருந்தால் நீண்ட நேரம் விளக்கம் அளிக்க முடியும். இருந்தாலும், குறிப்பாக உணர்த்த விரும்புகின்றேன். கடந்த காலத்தில் இதே அவையில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது என்மீது ஒரு குற்றச்சாட்டை அன்றைய அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் சுமத்தினார். பெரியகுளம் இடைத் தேர்தலின்போது, நான் நமமுடைய கம்பம் நடராஜன அவர்களுடைய தோட்டத்தை விலைக்கு வாங்கி, அங்கே என்னுடைய துணைவியாரோடு குடிபோய்விட்டேன், அந்த இடத்தை எனனுடைய மகன் அழகிரிக்கு எழுதி வைத்துவிட்டேன் என்றெலலாம் சொன்னார். அதை இந்த அவையிலும் சொன்னார். அப்போது இரண்டு முறை நான் மௌனமாக இருந்தேன். பிறகு அவரே சொன்னார், கருணாநிதி அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மௌனமாக இருப்பதிலேயிருந்து நான் சொல்வது உண்மையாகிறது என்றார். அதன் பிறகு நான் எழுந்து, நான் இப்போது மௌனமாக இல்லை, பேசுகிறேன், நீங்கள் சொல்வது உண்மைக்கு மாறானது; அப்படி ஒரு நிலத்தை கம்பம் நடராஜனுடைய தம்பி இராமகிருஷ்ணனுடைய பெயரால் அங்கு இருக்கிற அந்தத் தோட்டத்தை யாரும் வாங்கவும் இல்லை, என் மகன் அழகிரி பெயருக்கு எழுதி வைக்கவும் இல்லை, நிரூபிக்கத் தயாரா என்று கேட்டேன். நான் நிரூபிக்கிறேன். நிரூபிக்க முடியாவிட்டால் மந்திரி பதவியை ராஜிநாமா செய்கிறேன் என்று சொன்னார். நான் அதை அறைகூவலாக ஏற்றுக்கொண்டு, நானும் நிரூபிக்கிறேன் இல்லை என்பதை; நிரூபிக்க முடியாவிட்டால், என்னுடைய அரசியலிலேயிருந்து துறவறம் கொள்ளுகிறேன் என்று சொன்னேன். இவை அனைத்தும் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேராக இதே அவையிலே நடைபெற்ற விவாதமாகும்.





*முற்பகல் 10–15*

அதன் பிறகு, அன்றைக்கு அவைத் தலைவராக இருந்த திரு. இராஜாராம் அவர்களிடத்திலே இதை முறையிட்டு, நீங்கள் விசாரித்து உண்மையைச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அவர் அது பற்றி எனக்கும், அமைச்சர் குழந்தைவேலுவுக்கும் தாக்கீது பிறப்பித்தார்; உங்களிடம் இருக்கிற ஆதாரங்களைத் தர வேண்டுமென்று என்று. குழந்தைவேலு சில ஆதாரங்களைத் தந்திருப்பதாக சபாநாயகர் அறையிலே வைத்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அங்கே அழைத்தார் இராஜாராம் அவர்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களும் அங்கே சென்று, குழந்தைவேலு தந்த ஆதாரங்களைப் பார்த்தபோது, எல்லாம் போலி ஆதாரங்கள்; அழகிரி பெயரால் forgery கையெழுத்துக்கள் என்பதை இராஜாராம் கண்டுபிடித்து, பிறகு அவர் இந்த அவைக்கு வந்து, தான் கண்டுபிடித்த உண்மையைச் சொல்லி, இதில் கருணாநிதி சொன்னதுதான் சரி, அமைச்சர் குழந்தைவேலு சொன்னது சரியல்ல என்பதை இந்த அவையிலே எல்லோர் முன்னிலையிலும் வெளிப்படுத்தினார். நான் குழந்தைவேலுவினுடைய ராஜிநாமாவை வற்புறுத்தவில்லை. அவைக்கு உண்மை தெரிந்தது, நாட்டுக்கு உண்மை தெரிந்தது என்ற திருப்தியோடு இருந்துவிட்டேன்.

ஏன் சொல்கிறேன் என்றால், இப்பொழுதுகூட, நான் அன்றைக்கு எடுத்துக்காட்டிய கோப்பு, பேரவையினுடைய முன்னாள் தலைவர் திரு. காளிமுத்து அவர்களுடைய கையெழுத்து அடங்கிய கோப்பு—இரண்டு கோப்புகள்; ஒரு கோப்பு, இந்த ஆட்சிக்கு வந்திருக்க வேண்டிய தொகை, பல இலட்சம் ரூபாயை இழக்கிற அளவுக்குக் கையெழுத்திடப்பட்ட கோப்பாகும். நான் இங்கே அதைப் படித்துக்

காட்டியிருக்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலேயுள்ள அண்ணா உணவகத்தை நடத்தி வரும் கே.வி.ஆர். மணி என்பவர், அந்த உணவகம் நடத்த வழங்கப்பட்ட ஒப்பந்தக் காலம் 3-2-2002 உடன் முடிவுற்றதால், அந்த உணவகத்தை உடனடியாகக் காலி செய்து ஒப்படைக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு, கே.வி.ஆர். மணி என்ற அந்த அண்ணா உணவகத்தின் உரிமையாளர், அந்த உணவகத்தை ஒப்பந்த அடிப்படையில், வருடத் தொகையாக 2 இலட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய் செலுத்தி நடத்தி வருவதாகவும், அந்த உணவகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி தருமாறும், அதற்கு அதே ஒப்பந்தத் தொகையை, 2 இலட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய், வருடத் தொகையைச் செலுத்தி விடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கோப்பில் முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள் 16-2-2002 அன்று தன் கைப்படப் பிறப்பித்த ஆணையில், கே.வி.ஆர். மணி அவர்களுக்கே ஓராண்டு காலத்திற்கு அனுமதிக்கலாம் என்றும், மாத வாடகையாக ரூ.2,750 நிர்ணயிக்கலாம் என்றும் எழுதியிருந்தார். கே.வி.ஆர். மணி, அவராகவே தர முன் வந்து எழுதிய தொகை ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய். திரு. காளிமுத்து அவர்கள் பிறப்பித்த ஆணையில், மாதம் ஒன்றுக்கு 2,750 ரூபாய் வீதம் ஆண்டொன்றுக்கு 33 ஆயிரம் ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டால் போதும் என்பதாகும். இதுதான் திரு. காளிமுத்து அவர்களுடைய கையெழுத்தோடு கூடிய அந்தக் கோப்பில், file-ல் காணப்படுகின்ற வாசகமாகும். அதைத்தான் நான் இங்கே அன்றைக்குப் படித்துக் காட்டியிருக்கிறேன்.

அவர்கள் பூஜ்ஜியத்தோடு இன்னொரு பூஜ்ஜியம் போட்டிருக்கலாம் அல்லது பூஜ்ஜியத்தை அழித்திருக்கலாம் அல்லது பூஜ்ஜியத்தைப் புதிதாகப் போட்டிருக்கலாம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இது பூஜ்ஜிய விவகாரமே கிடையாது. கைப்பட எழுதப்பட்டிருக்கிறது. திரு. காளிமுத்து அவர்கள் தன்னுடைய கைப்பட எழுதியிருக்கிறார். இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபாய் என்று அவருடைய கைப்படவே எழுதியிருக்கின்றார். அந்தக் கோப்பு என்னிடத்திலே இருக்கின்றது. எழுத்தால்—எழுத்தாலே எழுதியிருக்கிறார். எண்ணால் அல்ல, எழுத்தாலே எழுதியிருக்கின்றார்.

அதைப்போலவே இன்னொன்று. 11 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கேட்டவருக்கு ஒப்பந்தப்புள்ளி, காளிமுத்து அவர்கள் வழங்குகிறார். அதற்கும் எவ்வளவு என்றால், அவர் கேட்டது 11 இலட்சம். ஆனால்,



இவர் 11 இலட்சத்தைப் புறக்கணித்துவிட்டு—ஆண்டொன்றுக்கு 11 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வருவதைப் புறக்கணித்துவிட்டு—மாதம் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம், 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஆண்டொன்றுக்குக் கிடைக்கத்தக்க வகையில், அதற்கு அனுமதி கொடுக்கிறார். 11 இலட்சம் ரூபாய் தருவதாகக் கடை வைப்பவர் கேட்கிறார் — உணவுக் கடை வைப்பவர் கேட்கிறார். இவர் 60 ஆயிரம் ரூபாய் போதும் என்று அதற்கு உத்தரவிடுகிறார். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 11 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய், நான்காண்டுக்கு இந்த அரசுக்கு அப்போது 44 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இவற்றை நான் எடுத்துச் சொன்னது பொது நலனைக் குறித்தேயல்லாமல், தனிப்பட்ட ஒருவரைத் தாக்க வேண்டும் என்பதற்காக அல்ல. நான் இதை ஏதோ, உண்மைக்கு மாறான ஒன்றைச் சொன்னதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தலைவர் அவர்களே, இதோ, அந்த இரண்டு கோப்புகளும் என்னிடத்திலே இருக்கின்றன. அவற்றை உங்களிடத்திலே ஒப்படைக்கின்றேன். தாங்களே தங்களுடைய அறையில் வைத்து, இங்குள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து, உங்களுடைய ஆட்சிமன்ற அவையில் அவர்களிடத்திலே இவற்றைக் காட்டி, நான் சொன்னது உண்மையா, அல்லவா என்பதை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி. (குறுக்கீடுகள்) அவர் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) அவர் பேசியிருக்கிறார் இல்லையா? அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதற்கு அடுத்ததாகப் பேச விடுகிறேன். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

[2006 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேச விடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் முடித்துவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அரை நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சத்தம் போடாதீர்கள், நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரிவான அறிக்கையைச் சொல்லிவிட்டார்கள். திரு. மணி, வேறு என்ன கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**•மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. காளிமுத்து அவர்கள் சார்பாக விளக்கம் சொல்ல, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கோ, கொறடாவுக்கோ உரிமை உண்டு. அவர்களைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**• திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய ‹ பை நடவடிக்கைகள், மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய subject குறித்துப் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உரிமையையும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, (குறுக்கீடுகள்) அவையின் மாபை மீறினால் நடவடிக்கை எடுப்பேன். திரு. அரி, இந்த மாதிரியான செயல்களில் எல்லாம் ஈடுபடாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.



2006 ஆகஸ்ட் 9]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நேற்றையதினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருடைய நடவடிக்கைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதல்வர் சொன்னதற்குப் பதில் சொல்வதாக இருந்தால் பேசுங்கள். அடுத்த Subject.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, நான் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். அதைப் பற்றித்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அப்புறம் பார்ப்போம். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, அதற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, என் பிரச்சினைக்கு நம்முடைய அவைத் தலைவர் பதில் சொன்ன பிறகு, உங்களுடைய பிரச்சினையை எழுப்பலாம். நீங்கள் என்னுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசப் போகிறீர்கள் என்று கருதியிருந்தேன். அதனால்தான் உங்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று அவைத் தலைவரைக் கேட்டுக்கொண்டேன். நீங்கள் வேறு பிரச்சினையைத்தான் பேசப் போவதாக இருந்தால், அதைப் பற்றி நான் ஒன்றும் கவலைப்படவில்லை. என்னுடைய பிரச்சினைக்கு முதலில் சபாநாயகர் தீர்ப்புக் கூறுவார் என்று எதிர்பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த காலத்தில் சட்டமன்ற விடுதியில் இருக்கின்ற உணவகம் வாடகைக்குக் கொடுத்தது சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் என்னுடைய அறையிலே வந்து எப்போது வேண்டுமானாலும் பார்த்து, நீங்கள் அதனுடைய முடிவைத் தெரிந்துகொள்ளலாம் என்று நான தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அனுமதி கொடுங்கள்.

[2006 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். நான் அனுமதி கொடுத்ததற்குப் பிறகுதான் எழுந்திருக்க வேண்டும். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

## 3. உரிமை மீறல் பிரச்சினைகள்

### (அ) மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் 8-8-2006 அன்று தெரிவித்த சில கருத்துகள்

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய சபை நடவடிக்கையில், மாண்புமிகு வருவாய்த் துறையினுடைய அமைச்சருடைய நடவடிக்கை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய உரிமையினையும், இந்த அவையினுடைய உரிமையினையும் மீறுவதாக நான் குறிப்பிட்டு உங்களிடம் உரிமை மீறல் பிரச்சினை கடிதம் கொடுத்திருக்கிறேன்.

அவைக்குச் சம்பந்தமில்லாத பிரச்சினை குறித்து, அவையில் வேண்டுமென்றே திட்டமிட்டு, சபைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில், ஒரு அமைச்சர், அவர் அமைச்சர் என்ற முறையில் உறுதிமொழி எடுக்கின்றபோது, "ஒருசார்பு இல்லாதவராகவும், ஒருதலைப்பட்சமாக இல்லாதவராகவும், விருப்பு, வெறுப்புகளை அகற்றி நான் நடந்துகொள்வேன்" என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகு, நான் அரசினுடைய சிக்கன நடவடிக்கை பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றபொழுது, அரசுக்குச் சம்பந்தமில்லாத ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, இது சிக்கன நடவடிக்கையா என்று கேட்பது, மாண்புமிகு அம்மாவினுடைய உரிமையையும், அவை உரிமையையும் மீறிய செயலாகும் என்பதனை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சட்டப் பேரவைத் தலைவரிடத்திலே உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். அதை எழுப்புவதற்கு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



2006 ஆகஸ்ட் 9]

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா? (குறுக்கீடுகள்) பொறுங்கள். அவரும் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை குறித்து வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்மீது விதி 220-ன்கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வெளியே இருக்கிற தனிப்பட்ட பிரச்சினைகளை நேற்றையதினம் பேசுகின்ற நேரத்தில் பேசி, அவைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. அது நீக்கப்பட வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியும் அது நீக்கப்படவில்லை. அதைப் பற்றி ஒழுங்குப் பிரச்சினை ஒன்று இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை என்பதே, சபை நடந்துகொண்டிருக்கும்போது, விவாதம் திசை மாறிப் போகின்ற நேரத்திலே அது ஒழுங்கு தவறிப் போகின்றபோது, அதை எடுத்துச் சொல்வதுதான் ஒழுங்குப் பிரச்சினையே தவிர, எழுதிக் கொடுத்துக் கேட்பது அல்ல. மூத்த உறுப்பினர், நீண்ட காலம் உறுப்பினராக இருந்தவருக்கு இதுகூடத் தெரியவில்லையென்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் கேளுங்கள். நீங்கள் உங்களுடைய தவறைத் திருத்திக்கொண்டு சொல்லுங்கள், அவ்வளவுதான். ஒழுங்குப் பிரச்சினை வராது அதிலே. நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை என்றீர்கள். கொடுத்திருப்பது உரிமை மீறல் பிரச்சினை, சொல்வது ஒழுங்குப் பிரச்சினை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார், அவரும் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறார். அவர் அவையில் இல்லை. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய கொறடா மாண்புமிகு திரு. செங்கோட்டையன் அவர்கள் ** இங்கே ஒரு கருத்தை எடுத்துப் பேசியிருக்கிறார். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் சொன்ன அந்த ** என்கின்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) நான் இது சம்பந்தமாக என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் முதலிலே. உங்களுடைய subject–ஐ இங்கே பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. ஜெயக்குமார் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறார். அவர் அவையில் இல்லை. என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலிலே உட்காருங்கள். உட்கார்ந்தால் என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) என்ன வேண்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் பிரச்சினை என்ற தலைப்பில் மாண்புமிகு உறுப்பினரோ அல்லது கட்சித் தலைவரோ ஒரு வேண்டுகோளை உரிமை மீறல் என்ற அடிப்படையில் அவைத் தலைவரிடத்திலே தருவாரேயானால், அவைத் தலைவர்தான் தீர்ப்பை வழங்க வேண்டும். இடையிலே மற்றவர்கள் எல்லாம் பேசுவதற்கு அதிலே அவசியமும் இல்லை, இடமும் இல்லை. ஒரு வேளை, உரிமை மீறல் பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால், அப்படி எடுத்துக் கொண்டதற்குப் பின்னர் அவையிலுள்ள அத்தனை கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம். ஆகவே, முதல் தீர்ப்பாக, prima facie இருக்கிறதா என்ற அடிப்படையில் அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்க நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 220–ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன் மற்றும் திரு. ஜெயக்குமார் ஆகியோர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



8–8–2006–ல் மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் குறிப்பிட்ட ஒரு சில வார்த்தைகள் குறித்து ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்துவிட்டு, அவர் இன்று அவையில் இல்லை. இருந்தாலும், சட்டமன்றத்தில் உரையாற்றுவோர் பயன்படுத்தும் சில வார்த்தைகள் அவை மரபுகளுக்கு ஒவ்வாததாகவும், மீறியதாகவும் அமையும்போது, அச்சொற்கள் அவைக் குறிப்பில் இடம் பெறாது நீக்கப்பட வேண்டுமென்று பேரவைத் தலைவரோ அல்லது உறுப்பினர்களில் எவருமோ அதைச் சுட்டிக்காட்டும்போது, அது ஏற்கப்பட்டு, அச்சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. உதாரணமாக, பொய், அறியாமை, ஆணவம், பேதமை, அடத்தம், முட்டாள்தனம், பித்தலாட்டம், கழுதை போன்ற சொற்களெல்லாம் அவை மரபுகளுக்கு உகந்தது அல்ல என்று கருதப்படுகின்றன. உண்மையில் மேற்கூறிய சொற்கள் எல்லாம் தடை செய்யப்பட்ட சொற்கள் அல்ல. மாறாக, அச்சொற்கள் அவையில் இடம் பெற்றுள்ள அமைச்சர்களையோ, பிற கட்சியினரையோ, கட்சித் தலைவர்களையோ, குறிப்பிட்டுப் பேசும்போது, கருத்தில் இடம் பெற்று, அவர்களை குறைப்படுத்துவதாகவோ? இழிவு செய்வதாகவோ இருத்தலாகாது என்பதுதான் — அந்தச் சொற்கள் அவை மரபை மீறல் என்பதாகும். நேற்று 8–8–2006, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது பேசிய சொற்கள் எந்தவிதத்திலும் அவையினர் எவரையும் குறைபடுத்துவதாக அமையவில்லை என்பதால், இந்த அவை உரிமை மீறல் முன்னறிவிப்பிற்கு அனுமதி மறுக்கிறேன்.

முற்பகல் 10–30

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்)

நான் தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகு எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) பேரவைத் தலைவருடைய தீர்ப்பின்மீது விவாதம் கிடையாது. உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி ஞானசேகரன்:** மைக் கொடுங்கள் சார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒருதலைபட்சமாகத் தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். உறுப்பினர் திரு. கோ. அரி பேரவைத் தலைவர் அருகில் 'சர்வாதிகார சபாநாயகர் ஒழிக' என்று கோஷமிட்டுக்கொண்டே வெளியேறினார்.)

(ம.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த மாமன்றத்தில்...

(அவையை விட்டு வெளியேறிய உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கே லாபியில் நின்று சத்தம் போடக்கூடாது. அவைக் காவலர்கள், முதலில் எல்லோரையும் வெளியேற்றுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

## (ஆ) உறுப்பினர் திரு. கோ. அரி, பேரவைத் தலைவரை விமர்சனம் செய்துகொண்டே வெளிநடப்புச் செய்த செயல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் யார் எந்தப் பிரச்சினையை எழுப்பினாலும், அதற்கு நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு, அவர்கள் வெளியேறுவதோ, அல்லது விளக்கம் கேட்பதோ, அதை நீங்கள் அனுமதிக்கலாம். ஆனால், நீங்கள் உங்கள் தீர்ப்பைக் கொடுத்ததற்குப் பிறகு, உங்களைப் பார்த்து திருத்தணி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோ. அரி அவர்கள், 'சபாநாயகர் ஒழிக' ஒழிக' என்று கோஷம் போட்டுக்கொண்டே போகிறார். இந்த அவைக்குத் தலைமையேற்றிருக்கின்ற நீங்கள் ஒரு மாண்புமிகு இடத்திலே இருக்கின்றீர்கள். உங்களை 'ஒழிக' என்று சொன்ன திரு. அரி அவர்கள்மீது இந்த அவையின் சார்பாக நான் ஓர் உரிமை



மீறல் பிரச்சினையை எழுப்புகிறேன். உரிமை மீறல் குழுவிற்கு அதை அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 226-ன்கீழ் இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-35*

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) புதிய வீராணம் திட்டச் செலவு பற்றி இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடுகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த மாமன்றத்தில் மார்ச் 31, 2005 உடன் முடிந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கை வைக்கப்பட்டது. அந்த C. & A.G Report-ஐப் படித்துப் பார்த்ததில், எங்களுக்கெல்லாம், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் ஒரு பேரதிர்ச்சி. கடந்த கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் புதிய வீராணம் திட்டத்தில் மட்டுமே அரசாங்கத்தினுடைய நடவடிக்கையால் 295.21 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டிருக்கிறது என்கிற அந்த அறிக்கை உண்மையிலேயே தமிழ்நாட்டு மக்களை மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. காரணம், இந்த வீராணம் திட்டம் முதலிலே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்டு, அதற்காக நிலம் எல்லாம்கூடக் கையகப்படுத்தப்பட்டது. அதற்காக சில உபகரணங்கள், பைப்புகள் போன்றவை எல்லாம்கூட வாங்கப்பட்டன. பிறகு, அந்தத் திட்டம் வீணான திட்டம் என்றெல்லாம் சொன்னவர்கள், பின்னால் அதே திட்டத்தைக் கையில் எடுத்து, அதற்குப் புதிய வீராணம் திட்டம் என்றெல்லாம் பெயர் கொடுத்து, அவர்கள் அதை நிறைவேற்றுகிறபோது, ஒரே திட்டத்தில் 295.21 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே சொல்லுகிறபோது, குறைவான வட்டி வீதத்தில் இதர கடன்கள் கிடைக்கப் பெறும் வாய்ப்பு இருந்தபோதிலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல், ஒரு கடனில் அடுத்து வரும் தவணையைப் பெற்றிட எடுக்கப்பட்ட முடிவால் 82.43 கோடி ரூபாய் கூடுதல் பொறுப்பு ஏற்பட்டது என்றும், இழப்பீட்டுத் தொகை வழங்கினால்,

வட்டி வீதத்தைக் குறைத்துக்கொள்ள ஆயுள் காப்பீட்டுக் கழகம் இசைவு தெரிவித்தபோதிலும், வட்டி செலுத்துவதன்மீதான இலாபம் ரூபாய் 1.68 கோடியைப் பெறுவதற்கு சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் தவறியது என்றும், அதேபோல, ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்வதிலும், பணியைத் தொடங்குவதிலும் ஆன காலதாமதத்தால் ரூபாய் 246.25 கோடி, ஒப்பந்தப்புள்ளிக் குறிப்பீடுகளை எந்த ஒரு சந்தேகமும் ஏற்படாத விதத்தில் வரையறை செய்யத் தவறியதால் ரூபாய் 11.59 கோடி, பணியின் தரம் பாதிக்கப்படாமல் ஒரு சிக்கனத் தேர்வைக் கருத்தில் கொள்ளத் தவறியதன் விளைவாக, தேவைக்கு அதிகமாக உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தியதால் ரூபாய் 7.95 கோடி, ஒப்பந்த நிபந்தனைகள் பூர்த்தியாவதை உறுதி செய்திடத் தவறியதன் விளைவாக ரூபாய் 20.43 கோடி, தேவை இல்லாமல் 15 குழாய்க் கிணறுகள் அமைத்ததாலும், கைவிடப்பட்ட புதிய திட்டம்மீது செய்யப்பட்ட முன் திட்டச் செலவால் ரூபாய் 8.99 கோடி, ஆக, இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 295.21 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டிருக்கிறது என்று அறிக்கை கூறுகிறது.

இந்த ஒப்பந்தப்புள்ளியை அவர்கள் வரையறை செய்யத் தவறியது, அதேபோல, பணித் தரம் பாதிக்கப்படாமல் அல்லது ஒரு சிக்கனத் தேர்வைக் கருத்தில் கொள்ளாமல் தவறியதன் விளைவு, அதேபோல, சந்தேகம் ஏற்படாத விதத்தில் வரையறை செய்யத் தவறியது என்றெல்லாம் கூறுகிறபோது, இதிலே பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இதிலே அந்த டெண்டரை confirm பண்ணுவதற்கு, அவர்கள் இறுதி செய்வதற்கே காலதாமதம் ஆக்கினார்கள் என்று சொன்னால், ஏதோ எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்த காரணத்தாலேதான் இந்தத் திட்டம் தள்ளிப் போய், இன்று பல பிரச்சினைகள் ஏற்பட்டு, கூடுதல் செலவையெல்லாம் உருவாக்கி இருக்கிறது. இப்படி 295 கோடி ரூபாய்க்கு மேலே இந்த அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி இருக்கிற அந்த அதிகாரிகள், அதற்குப் பொறுப்பானவர்கள் யார், யார் என்பதை அரசு அறியுமா? இப்படித் தவறு செய்தவர்கள்மீது தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, இந்த இழப்புக்கு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்து, சரியானதொரு தண்டனை வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி. (குறுக்கீடு)



**•திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர் பேரமைப்பின் நான்காம் ஆண்டு மாநாடு நடைபெற இருக்கிறது. இது எந்த ஒரு அமைப்பையும் ஆதரித்து நடைபெறுகின்ற மாநாடு இல்லை. ஆனால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், வேறு ஒரு subject பேசிக்கொண்டிருக்கிறபோது, இடையிலே எழுந்திருக்காதீர்கள். உட்காருங்கள். அடுத்து உங்கள் subject-ஐ எடுக்கலாம். திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் உங்களிடத்திலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மருத்துவர் ஐயா அவர்கள் கடுமையான கண்டனத்தை, ஆட்சேபத்தைத் தெரிவித்தார்கள். அதேபோல, இந்த மாமன்றத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பல முறை வீராணம் திட்டம், இது வீணான திட்டம், இந்தத் திட்டத்திலே பல்வேறு முறைகேடுகள் நடைபெற இருக்கின்றன என்பதை அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்தோம். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தலைவர் அவர்களாலும், மற்றவர்களாலும் கடுமையான கண்டனக் குரல் எழுப்பப்பட்டது. இந்த மாமன்றத்திலேகூட இன்னாள் அமைச்சராக இருக்கிற மாண்புமிகு வேலு அவர்கள் உறுப்பினராக இருந்த நேரத்தில் இங்கே கண்டனத்தை, உண்மைகளை எடுத்துச் சொன்னார்கள். அதைப்போல, காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் இந்தக் குறைபாடுகளையெல்லாம் அவ்வப்பொழுது சுட்டிக்காட்டினர்.

இப்படிப் பல்வேறு குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டியும்கூட அன்றைய முதலமைச்சராக இருந்தவர் பல முறை எங்களையெல்லாம் எடுத்தெறிந்து, உதாசீனப்படுத்திப் பேசிவிட்டு, இந்தத் திட்டம் மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டம், இது ஏற்புடையதுதான், இதிலே எவ்வித முறைகேடும் இல்லை என்று ஆணித்தரமாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர் பேசிய உரையைக்கூட நான்—பல நாட்கள், ஒரு நாள் அல்ல, பல கூட்டத் தொடர்களில் பல நாட்கள் பேசியவற்றை இங்கே ஆதாரத்தோடு கொண்டு வந்திருக்கிறேன். நாங்கள் பேசிய பேச்சு, கண்டனக் குரல், அதற்கு அன்றைய முதலமைச்சர் அம்மையார் அவர்களாலே சொல்லப்பட்ட பதிலையெல்லாம் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதிலேகூட,

எங்கள் மனம் புண்படும்படியாக, கடுமையான வார்த்தைகளைக்கூடப் பயன்படுத்திப் பேசினார்கள். ஆகவே, அப்படி எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற போக்கில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

முற்பகல் 10–40

அதிலேகூட நாங்கள் சொல்வது, வல்லுநர் குழுவே இந்தத் திட்டம் தேவையற்றது என்று கைவிடப்பட்டதாகவும் சொல்லியிருக்கிறது. ஆகவே, வல்லுநர் குழுவாலே ஆய்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டம் வேண்டாம் எனக் கைவிடப்பட்ட நிலையில் அந்தத் திட்டத்தை மீண்டும் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதனுடைய திட்ட மதிப்பீடு மொத்தம் ரூ. 750 கோடி. அந்த 750 கோடி ரூபாய்த் திட்டத்தில்–நேற்று அவைமுன் வைக்கப்பட்ட இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைக் குறிப்பில் அது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது–மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 295 கோடியே 21 இலட்சம் ரூபாய் இந்த அரசுக்கு இழப்பீடு. மக்கள் வரிப்பணம் இவர்கள் செய்த முறைகேட்டினால் எவ்வளவு வீணாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 750 கோடி ரூபாய்த் திட்டம். 295 கோடி ரூபாய் வீணாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏறக்குறைய 39.3 சதவிகிதம்; ஒரு திட்டத்திலே 40 சதவிகிதத் தொகை வீணாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதிலே என்னென்ன முறைகேடுகள் என்பதைத் தணிக்கைத் துறைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அதிலே சிலவற்றை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலேதான், ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வதிலே ஏற்பட்ட காலதாமதம், முறைகேடுகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது; சிக்கன நடவடிக்கை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது; அதிலும் தேவையில்லாமல் அந்தப் பகுதியிலே ராட்சத ஆழ்துளைக் குழாய் அமைக்கப்பட்டு நீர் உறிஞ்சப்பட்டது தவறு என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நாங்கள் எடுத்துச் சொன்னோம்.

நான் ஆழமாகப் பேச விரும்பவில்லை. நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தணிக்கைத் துறைத் தலைவர் அவர்களாலே சொல்லப்பட்டிருக்கிறது; 295 கோடி ரூபாய்க்கு மேலே மக்கள் வரிப்பணம் வீணாக்கப்பட்டது மட்டுமல்லாமல், முறைகேடு செய்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையின் உண்மை நிலவரத்தை



நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலேயும், யார், யாரெல்லாம் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழக அரசு, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டறிந்து, மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த வகையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும், அதிலே உண்மையை அறிந்து நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த முறைகேட்டிற்கு, இழப்பீட்டிற்கு யார் காரணம் என்பதை அறிந்து, அவர்கள்மீது உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும். அதற்காக ஒரு விசாரணைக் குழு தேவை, அதை அமைக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டு, அமர்கிறேன், நன்றி.

(மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கையைச் சுட்டிக்காட்டி, நடைபெற்றிருக்கக்கூடிய தவறுகளை, நிதி ஆதாரத்தைப் பயன்படுத்துவதில் ஏற்பட்டிருக்கிற முறைகேடுகளை விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதற்காகச் செலவிடப்பட்ட பணம் எப்படித் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அதிலே நடைபெற்றிருக்கிற முறைகேடுகள் என்ன, இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை உரிய முறையிலே விசாரித்து நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதோடு, இந்தத் தவறுக்குக் காரணமானவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு விரிவான விசாரணைக் கமிஷன் அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கைத் துறை அறிக்கையின்மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற இந்த உண்மைகளை நாட்டு மக்களுக்கும், சட்ட ரீதியாகவும் வெளிப்படுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். 295 கோடி ரூபாய்க்கு மேலே

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 9

மக்களுடைய பணம் வீணடிக்கப்பட்டிருக்கிறது என்று தணிக்கைத் துறை அறிக்கையிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் யார் என்று கண்டறிந்து, அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக ஒரு விசாரணைக் குழு அமைத்திட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ரவிக்குமார்.

*முற்பகல் 10–45*

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற நிதி இழப்பீடு பற்றி தணிக்கைத் துறைத் தலைவர் அவர்களது அறிக்கையிலே விரிவாகத் தரப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது வெளியிடப்பட்ட கொள்கைக் குறிப்பிலே, அந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக அந்த வீராணம் ஏரி ஆழப்படுத்தப்படும், அதன் கரை உயர்த்தப்படும், அதன் விளைவாக 4.5 கன அடி தண்ணீர் அங்கே கூடுதலாகப் பிடிமானம் இருக்கும் விதத்திலே அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்; அதன் விளைவாக, சென்னைக்குக் கொண்டு வரப்படும் 3.5 டி.எம்.சி. தண்ணீர்போக, ஒரு டி.எம்.சி. தண்ணீர் அங்கே விவசாயிகளுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்படாத காரணத்தாலே, இன்றைக்கு அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு அங்கிருந்து கொண்டு வரப்படுகின்ற காரணத்தாலே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இழப்பீடு எவ்வளவு என்பது பற்றி அந்த அறிக்கையிலே இல்லை என்றாலுங்கூட, அவற்றையும் இந்த மாமன்றத்திலே தெரிவிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை அ.தி.மு.க. அரசு முறைகேடாகச் செயல்படுத்தியதால்,



2006 ஆகஸ்ட் 9] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

தமிழக அரசுக்கு 29.5 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக இந்தியத் தணிக்கைத் துறையினுடைய அறிக்கை தெளிவாகக் கூறி இருக்கிறது. இது குறித்து விரிவான விசாரணையை மேற்கொள்வதோடு, உரிய அதிகாரியோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோ, யாராவது இதற்குக் காரணமாக இருந்திருந்தால், அவர்களை உரிய வகையிலே தண்டிக்கின்ற விதத்திலே, உடனடியாக விரைவான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், பெரிய திட்டமாக, பெரிய சாதனையாக அவர்கள் அறிவித்துக் கொண்ட திட்டத்தில் மிகப் பெரிய இழப்பீடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அரசுக்கு வந்திருக்கிறது. இதை சும்மா விட்டுவிடக் கூடாது என்று நம்முடைய அரசை நான் கேட்டுக்கொண்டு, நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கையினுடைய அடிப்படையில் மாண்புமிகு கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள் எவ்வளவு சரியானவை என்பதை ஆய்வு செய்வதற்கும், சரியானவையாக இருந்தால், அதற்குக் காரணகர்த்தாக்கள் யாரோ, அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் ஏதுவாக, உடனடியாகச் செயல்பாடுகள் முடுக்கிவிடப்படும் என்பதைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலே இந்த அவையிலே கட்சிகளின் தலைவர்கள் ஆற்றியுள்ள விரிவுரையே ஏறத்தாழ ஒரு விசாரணைக் கமிஷன் உரையாக அமைந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து, ஆவன செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் கூறிய அத்தனை வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### மேக்கோடு, ஒட்டலிவிளை, ஆதி திராவிட மக்கள் அனுபவித்து வந்த நிலத்தின் பட்டா வேறு சிலருக்கு வழங்கப்பட்டதால் ஏற்பட்ட நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ரா. லீமா றோஸ், கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ரா. லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், மேக்கோடு வருவாய் கிராமம், ஒட்டலிவிளை பகுதியில் ஆதி திராவிட மக்கள் 'பி' மெமோ பெற்று அனுபவித்து வந்த இடத்தை, வேறு சிலருக்கு பட்டா வழங்கியதால் ஏற்பட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

அரசாணை நிலை எண் 534, வருவாய்த் துறை, நாள் 15–9–2005–ல், வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டம், மேக்கோடு கிராமம், புல எண் 507/1–ல், மொத்தமுள்ள 4.11.0 எக்டேர் நிலத்தில் 0.73.25 எக்டேர் நிலத்தை நத்தமாக வகை மாற்றம் செய்து, 64 வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.





மேக்கோடு கிராமம், புல எண் 507/1–ல், மொத்தம் 4.11.0 எக்டேர் பரப்புடைய "தீர்வை ஏற்படாத தரிசு" புறம்போக்கு நிலமாகும். இந்நிலம் முதலார் ஒட்டலிவிளை சாலையில், ஒட்டலிவிளை என்னுமிடத்தில் சாலை அருகில் அமைந்துள்ளது. மேற்படி இடம் பாறைப் பாங்கான இடமாகும். இப்பகுதியில் சுமார் 2 ஏக்கர் பரப்பில் ரப்பர் மரங்கள் நடப்பட்டு, ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதில் 28 ஆக்கிரமிப்பு வழக்குகள் இருந்தன. அதில் வீடு கட்டுவதற்கு ஏற்ற வகையில் சம தளமாக இருந்த பரப்பான 0.73.25 எக்டேர் நிலம் கண்டறியப்பட்டு வீட்டுமனைத் திட்டத்தின்கீழ் அவ்விடத்தை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக, கீழ்க்கண்ட ஆக்கிரமிப்பு வழக்குகளில் சம்பந்தப்பட்ட நிலம் வீட்டுமனைகளுக்குத் தகுதியான இடமாக இருந்த காரணத்தால் விதிமுறைகளைப் பின்பற்றி ஆக்கிரமிப்பு வழக்குகள் ரத்துச் செய்யப்பட்டன:–

| வ. எண் | ஆக்கிரமிப்பு வழக்குதாரர் பெயர் | ஆக்கிரமிப்பு வழக்கு எண் |
|---|---|---|
| 1. | செங்கோடிதேசம், ஒட்டலிவிளையில் செல்லையன் மனைவி நேசம் | 5000–1415 |
| 2. | செங்கோடி ஒட்டலிவிளையில் ஜெகநாதன் மகன் நல்லதம்பி | 5041–1415 |
| 3. | செங்கோடி ஒட்டலிவிளையில் நல்லதம்பி மக்கள் சற்குணம், ஜெயதாஸ் | 5042–1415 |

மேற்படி மேக்கோடு கிராமம் புல எண் 507/1–ல் மொத்தமுள்ள 4.11.0 எக்டேர் நிலம் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காகக் கீழ்க்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டது:–

| புல எண் | பரப்பு | வகைப்பாடு |
|---|---|---|
| 507–1 | 3.24.00 | தீர்வை ஏற்படாத தரிசு |
| 507–3 | 0.13.75 | தீர்வை ஏற்படாத தரிசு |
| 507–4 | 0.73.25 | நத்தம் |

இதில் புல எண் 507/1–ல் உட்பிரிவு செய்யப்பட்ட 0.73.25 எக்டேர் நிலத்தினை நில வகைப்பாடு செய்வது தொடர்பாக, விதிமுறைகளை அனுசரித்து அரசாணையில் விதிக்கப்பட்ட அறிவுரைகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 4–1–2006 அன்று நத்தமாக

வகைப்பாடு மாற்றம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில், கீழ்க்கண்டபடி 64 நபர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட சமுதாயத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கிறிஸ்துவ நாடார் | 16 |
| 2. | இந்து நாடார் | 29 |
| 3. | கிறிஸ்துவ சாம்பவர் | 7 |
| 4. | கிறிஸ்துவ ஐயனார் | 1 |
| 5. | இந்து வண்ணான் | 1 |
| 6. | இந்து விஸ்வகர்மா | 3 |
| 7. | இந்து ஈழவர் | 1 |
| 8. | இந்து நாயர் | 1 |
| 9. | இந்து நாவிதர் | 2 |
| 10. | இந்து செக்காலர் | 3 |
| | மொத்தம் | 64 |

மேற்படி இடத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள் அனைத்தும் வீடற்ற ஏழை மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பட்டா வழங்க உரிய நடைமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, ஆக்கிரமிப்புச் செய்த மேற்படி மூன்று நபர்களால் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லை. இம்மூன்று நபர்களுக்கு ஏற்கெனவே சொந்தமாக வீட்டுமனை உள்ளதால், அவர்களுக்கு சிறப்பு வீட்டுமனைத் திட்டத்தின்கீழ் பட்டா வ்ழங்கப்படவில்லை. புதிதாக பட்டா வழங்கப்பட்டவர்களில் தலித்துகளும் உள்ளனர். பயனாளிகள் அனைவரும் வீடற்ற ஏழை மக்கள். இதில் 20 நபர்கள் தற்போது குடிசைகள் கட்டி, அங்கேயே வாழத் துவங்கி உள்ளனர். மேற்படி இடத்தில் பட்டா பெற்ற பயனாளிகள் புதிதாகக் குடியேறிய பின்னர், அங்கே ஜாதிக் கலவரம் போன்ற நிகழ்வுகள் ஏதும் இல்லை. பாதிக்கப்பட்ட நபர்களுக்குச் சொந்தமாக வீடுகள் உள்ளபோதிலும்



விவசாய நிலங்கள் இல்லை என்பதால், அரசு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு விவசாய நிலம் வழங்க இருக்கும் திட்டத்தின்கீழ், அரசு உத்தரவுகள் கிடைக்கப் பெற்றபின், இவர்களுக்கு விவசாய நிலம் வழங்க முன்னுரிமை தந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தலித் மக்களிடமிருந்து இந்த பூமியை எடுக்கும்போது 3 நபர்களால் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்பது சரியான தகவல் அல்ல. ஒரு 'பி' மெமோ ரத்துச் செய்வதென்றால், முன்கூட்டியே அவர்களுக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அந்த அறிவிப்பு—எந்தவித முன்னறிவிப்பும் இல்லை. நிலத்தில் குடி அமர நடவடிக்கை ஆரம்பித்தவுடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடமும் நேரடியாக மனுக் கொடுத்துப் பேசப்பட்டது. மேலும், இந்த தலித் மக்கள் தமிழ்நாடு விவசாயச் சங்கத்தோடு இணைந்து போராட்டங்களை நடத்தினர். தற்போது அந்த நிலத்தில் ஏற்கெனவே 'பி' மெமோ நிலத்தைப் பயன்படுத்திய மக்கள், ரப்பர் மரத்திலுள்ள பால் எடுக்கச் சென்றபோது அடிதடி நடைபெற்று, அங்கே வழக்குகள்கூடப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த தலித் மக்கள் மிகவும் வறுமையான நிலையில், தற்போது வருமானம் இல்லாமல் உழன்றுகொண்டிருக்கிறார்கள். மேற்சொன்ன தலித்துகளுக்கு விவசாயத்திற்கு வேறு நிலம் இல்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பில் கூறியுள்ளார். இதன்மூலம், இல்லாதவர்களிடமிருந்துதான் நிலம் பறிக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. வேறு நிலம் இவர்களுக்கு வழங்குவதாகக் கூறுவதும் ஏற்புடையதல்ல. அந்த நிலத்தைப் புதிய பட்டாதாரர்களுக்கு வழங்குவதுதான் முறை. எனவே, ஒரு விதவைப் பெண் உட்பட, பரம ஏழையான இந்த 3 தலித்துகள் உச்சி நீர் கொட்டி உழைத்துப் பண்படுத்திய நிலத்தை, அவர்களின் முன்னோர்களின் கல்லறைகள் உள்ள இந்த நிலத்தை, பால் வெட்டு மரங்களைக் கொண்ட அந்த நிலத்தை அவர்களுக்கே வழங்கும் வகையில், கடந்த ஆட்சி ... நிலை மனதில் கொண்டு அவசரக் கோலத்தில் எடுத்த நடவடி... ...ய ரத்துச் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டுகின்றே...

இன்றைய நம்முடைய தமிழக அரசு ஏழை மக்களிடம் அதிகக் கருணை காட்டி, அவர்களிடம் இருக்கக்கூடிய அந்த நிலத்தை அவர்களுக்கே வழங்குவதென்று அறிவித்திருக்கின்றது. அந்த வகையில் இந்த அரசு மேற்படி நடவடிக்கையை ரத்துச் செய்யுமா என்று பணிவன்பாய்த் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன். அதேபோன்று, குமரி மாவட்டத்தில் பல பகுதிகளில், குறிப்பாகக் களியல் கிராம மேற்பாரில் 50 சென்ட் நிலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** கேள்வியை மட்டும்தான் கேட்கின்றேன். 50 சென்ட் நிலம் எடுத்து வேறு நபர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட இந்த நிலங்கள் வேறு நபர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதை ரத்துச் செய்ய இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே வீட்டுமனை இல்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்குகின்ற, வீட்டுமனை வழங்குகின்ற திட்டத்திலே அங்கு இருக்கின்ற 3 பேர் ஆக்கிரமித்திருக்கின்ற நிலங்களை, அந்தப் பகுதியிலே வீட்டுமனை கட்டுவதற்குத் தகுதியான இடம் என்று தேர்வு செய்யப்பட்டு, 'பி' மெமோ பெற்று, ஆக்கிரமித்து அனுபவத்திலே வைத்திருக்கின்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முறையாக அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்து, அவர்கள் ஆக்கிரமித்திருந்ததை 'பி' மெமோவை ரத்துச் செய்து விட்டுத்தான் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நிலம் எடுக்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையிலே, இந்த நிலத்தை எடுக்கின்றபொழுது அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அது மட்டுமல்லாமல், ஆக்கிரமித்திருக்கின்ற அந்த 3 நபர்களுக்கும், அவர்களுக்கு ஏற்கெனவே குடியிருப்பதற்குச் சொந்த இடம் இருப்பதைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். அங்கே வழங்கப்பட்டிருக்கின்ற



நிலங்கள் 64 பேர்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நிலம் இல்லாத ஏழைகளுக்குத்தான் அங்கே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, அரசின் சார்பாக அவர்களுக்கு, வேறு இடங்களிலே நிலம் தேவைப்பட்டால், வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக அந்த வகையிலே, அங்கே எந்தவிதமான பதட்ட சூழ்நிலையும் இல்லை. காரணம், அதே இடத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நிலப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, அங்கே கல்லறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே ஏற்கெனவே இருக்கின்ற, தொடர்ந்து வருகின்ற, வாழையடி வாழையாக வருகின்ற வழக்க முறை, வீட்டின் அருகேதான் இறந்தவர்களைப் புதைப்பது வழக்கமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெற்று வருகின்றது. எனவே, பதட்டமான சூழ்நிலை அங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி, உங்கள் இருக்கையிலே வந்து உட்காருங்கள். அங்கே என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள் ? (குறுக்கீடு) உங்கள் இடத்திலே வந்து உட்காருங்கள். (குறுக்கீடு) இருக்கையிலே வந்து உட்காருங்கள். அனுமதி இல்லை. இருக்கையில் வந்து உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) அரி, இருக்கையில் வந்து உட்காரவில்லையென்றால், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருக்கையில் வந்து உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) பேசிக்கொண்டிருப்பதற்காக இங்கே அவைக்கு வரவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதற்காக அவைக்கு வரவில்லை. உட்காருங்கள். இருக்கையிலே வந்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருக்கையில் வந்து இருக்கிறீர்களா. நடவடிக்கை எடுக்கட்டுமா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவரவர்கள் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, இல்லையா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) அவை மரபு இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு சீட் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில்தான் உட்கார வேண்டும். (குறுக்கீடு) மாறி உட்கார்ந்தால் அதற்கு

அனுமதியில்லை, (குறுக்கீடுகள்) அனுமதியில்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண். 25—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.51,09,18,000/—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 3792, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு பறிமுதல் செய்யும் வாகனங்களைக் காலதாமதம் செய்யாமல் ஏலம் விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2386, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 25 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5996, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் இயக்கப்படும் மினி பேருந்துகளின் தூரத்தை 3.5 கிலோ மீட்டர் என்றும், பேருந்துகள் ஓடும் பாதையில் 4 கிலோ மீட்டர் என்பதை 10 கிலோ மீட்டர் வரை இயக்கலாம் என்றும் மாற்றம் கொண்டு வருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3267, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6366, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கவனக் குறைவால் ஏற்படும் விபத்துக்குரிய ஓட்டுநர்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9380, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் தலைக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5620, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்கு உட்பட்ட குறிச்சி நகராட்சிப் பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (தெற்கு) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2813, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2915, திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3411, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3863, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4520, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் பெருகிவிட்ட காரணத்தினால், குறுகலாக உள்ள சாலைகளை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4983, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில், ஆற்காடு நகரில் பொது மக்களின் நலனுக்கு எதிராக நடைபெற்று வரும் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6653, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாகனத்தின் முகப்பு விளக்கு தயாரிக்கும்போது கருப்பு வண்ணம் பூச வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7497, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆட்டோ ரிக்ஷா வாங்க அதிகமான நபர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8526, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதியில் R.T.O. அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5150, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் மோட்டார் வாகனப் பயிற்சி நிலையம் அரசு அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2627, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப் பகுதியில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலையில்லாத இளைஞர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா, மூன்று சக்கர ஆட்டோ வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5472, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்து விபத்து ஏற்படும் வண்ணம், கோவை–பொள்ளாச்சி மெயின் சாலையில் அரசுப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் அதிவேகமாக, போட்டி போட்டுக்கொண்டு செல்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5120, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப போக்குவரத்துக் காவல் துறையினர் இல்லாத காரணத்தால் பள்ளி, கல்லூரி நாட்களில் பொன்னேரி, மீஞ்சூர், ஆரணி, சோழவரம், பாடியநல்லூர், தச்சூர் கூட்டுச் சாலை, ஆண்டார்குப்பம், மணலி புதுநகர் ஆகிய இடங்களில் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. பொது மக்கள், மாணவர்கள் நலன் கருதி மேற்கண்ட இடங்களில் போக்குவரத்துக் காவல் துறையினர் நெரிசல் மிகுந்த நேரங்களில் பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5675, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்கள் ஹெல்மெட் கட்டாயம் அணியச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4153, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரவு நேரங்களில் செல்லும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த தக்க சட்டம் கொண்டு வருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2015, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான கட்டணம் பெண்களுக்கு ரத்துச் செய்யப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9272, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2123, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தனியார் பேருந்துகளுக்கு, Route Variation and Curtailment தந்துள்ளதால், பல கிராமங்களுக்கு பஸ் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதால், மீண்டும் அரசாணை பிறப்பித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8786, திரு. ஆர். சின்னசாமி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6168, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் இடைத்தரகர்களால் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6933, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவரின் ஓட்டுநர் உரிமம் ரத்துச் செய்யப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9219, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இதுநாள் வரை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது; அதற்கென அரசு சொந்தமாக கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5072, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி நகரத்தில் R.T.O. அலுவலகம் அமைத்து, திருவள்ளூருக்குப் பள்ளிப்பட்டிலிருந்தும், திருத்தணியிலிருந்தும் சென்று பதிவு செய்வதன் சிரமங்களைத் தவிர்த்து, பொது மக்கள் பயன்பெற திருத்தணியில் R.T.O. அலுவலகம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2950, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மினி பஸ்களின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தவும், அவற்றின் சேவையை மேம்படுத்தவும் ஏதுவாக, கேரளாவைப்போல் அரசே மினி பஸ்களை இயக்கச் சட்டம் கொண்டு வருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8552, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட்டாரப் போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் நடைபெறும் லஞ்ச ஊழல்கள் இடைத்தரகர்களை ஒழிக்கவும், இரு சக்கர வாகனங்களுக்கு அதனை ஓட்டுபவர்களுக்குக் கட்டாய உரிமம் பெற அரசு கண்டிப்புடன் உத்தரவுகளைப் பிறப்பிக்க விவாதிக்கக் கோரியும், அரசுப் பேருந்துகளின் வசூல் நேரத்தைத் தனியார் பேருந்துகளுக்கு விடுவதைக் கண்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8478, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சொந்தமான புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4423, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு அரசு சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,09,18,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.101,09,41,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.100,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2273, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திலும், வால்பாறை மலைப் பகுதியிலும் போக்குவரத்துத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5431, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையிலிருந்து சோளிங்கருக்கு அரசுப் போக்குவரத்து நேரடி பஸ் வசதி ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7531, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் போக்குவரத்துப் பணிமனை ஒன்றை உடனடியாகத் தொடங்கி, சங்கராபுரத்தில் இருந்து ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து கொடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3612, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதி, பள்ளிப்பட்டில் ஒரு புதிய பஸ் டெப்போ அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4714, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்கள் தேவைக்கேற்ப புதிய தடங்களில் பேருந்துகளை இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7227, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9382, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் மினி பஸ் வசதி ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2321, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானியிலிருந்து நல்லிபாளைபாளையம் வழியாக அந்தியூர் வரை செல்வதற்குப் புதிய பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3764, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பேருந்துகளிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வானொலிப் பெட்டிகளை உடனடியாக எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4015, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் இயக்கப்படும் பேருந்துகள் பல பழுதடைந்துள்ள நிலையில் ஓடிக்கொண்டுள்ளன. எனவே, பொது மக்கள் நலன் கருதி, ஆற்காடு போக்குவரத்துப் பணிமனைக்கு 50 புதிய பேருந்துகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4333, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5848, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் பல்வேறு கிராமங்களுக்குத் தேவை அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கூறுகின்ற வழித்தடங்களில் 1 கி.மீ., 2 கி.மீ. பேருந்துகளை நீட்டித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5938, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள ஏதாவது ஒரு பகுதியில் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் உடனடியாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6472, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், பூம்புகாரிலிருந்து சென்னைக்குப் பகல் நேரத்தில் தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6750, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லா கிராமங்களுக்கும் மினி பேருந்துகள் இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7412, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பேருந்து செல்ல முடியாத கிராமங்களுக்கு மினி பேருந்து வசதியை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8889, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தின் தலைநகர் செல்லும்



வந்தவாசி மற்றும் திருவண்ணாமலை தடம் எண் 238 பேருந்துகள் மிகவும் பழைய வண்டிகளாக உள்ளன. அவை அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. எனவே, மாவட்டத்தின் கடைக்கோடியான வந்தவாசியிலிருந்து செல்லும் அப்பேருந்துகளை புதியதாக இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/–ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3113, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விபத்து இல்லாமல் ஓட்டும் ஓட்டுநர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கையை உறுதி செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/–ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8164, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லில் கிராமப்புறங்களுக்குப் போதிய பஸ் போக்குவரத்து இல்லை. குறிப்பாக கோப்பையம்பட்டி, அரசினம்பட்டி, உலகம்பட்டி, டி. அய்யம்பாளையம், முனியபிள்ளைப்பட்டி, சிறுநாயக்கன்பட்டி, ஏ. வெள்ளோடு, சிறுமலை ஆகிய ஊர்களுக்கு 5 புதிய பேருந்துகள் இயங்க அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7895, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் நிர்வாக மேற்பார்வையாளர்களுக்கு, செப்டம்பர் 1996 முதல் மற்ற போக்குவரத்து ஊழியர்களுக்கு அளித்தது போன்று வழங்க வேண்டிய ஊதிய உயர்வு 9% உயர்வு வழங்கக் கடந்த ஏப்ரல் மாதத்தில் நிதித் துறை ஒப்புதல் அளித்தும், இதுநாள் வரை அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. நிர்வாக அலுவலக உதவியாளர்கள் (Office Attenders) மேற்பார்வையாளர்களைவிட அதிகம் சம்பளம் வாங்குவதாகக் கூறப்படுகிறது. இந்த ஊதிய முரண்பாடு சரிசெய்யப்பட்டு, மேற்பார்வையாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8082, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், அரியலூரில் இருந்து அல்லிநகரம் (வழி) இலந்தகுழி, சீராநத்தம், கூத்தூர் வழியாக நகரப் பேருந்து இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8077, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் கிராமப்புறங்களில் பள்ளி மாணவர்களுக்குப்



பள்ளி நேரங்களுக்கு ஏற்ப நகரப் பேருந்துகள் இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8033, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பேருந்து வழித் தடங்களில் இல்லாத மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அரசு சார்பில் மினி பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2777, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் பல இடங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் மினி பஸ்கள், அனுமதி பெற்ற வழித் தடங்களில் இயங்காமல், வேறு வழித்தடங்களில் திருட்டுத்தனமாக இயங்கும் நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2802, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரவு நேரங்களில் 7–00 மணிக்குமேல் செய்யாறிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்ல பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.101,09,41,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2871, திரு. என் ஆர். ரங்கராஜன் இருக்கையில் இல்லை.

வெடடுத் தீர்யானம் என் 2780, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வியாசர்பாடி மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு கான்கிரீட் தளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

சொல்லித்தான் கொடுத்தேன். அதற்குப் பிறகு அவர் பாட்டுக்குப் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) 2 நிமிடங்கள் தருகிறேன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) 2 நிமிடங்களுக்கு மேலே அனுமதி கிடையாது. பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** அப்படியே சொல்கிறேன். தலைப்புச் செய்தியாகச் சொல்லிக்கொண்டு போய் விடுகிறேன். விட்டுவிடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலம்தான் போக்குவரத்துத் துறையிலே பொற்காலம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மக்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சீக்கிரம்.

**திரு. இரா. விசுவநாதன்:** பொற்காலம் என்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற அந்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயிருந்து நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். பக்கம் 4-ல் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், இங்கே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பவை அத்தனையும், இந்தத் தி.மு.க. அரசின் இரண்டு மாத ஆட்சிக் காலத்திலே சாதிக்கப்பட்ட சாதனைகள் அல்ல. இதிலே கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்கள் அத்தனையும் இப்போது இரண்டு மாதத்திலே எடுத்த புள்ளிவிவரங்கள் அல்ல. கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களின் அடிப்படையில், கோப்புகளின் அடிப்படையில், நிகழ்வுகளின் அடிப்படையில் எடுத்துக் கொடுக்கப்பட்டிருப்பவைதான் இங்கே கொடுத்திருக்கும் புள்ளிவிவரங்களும், சாதனைகளும்.

நான் அம்மாவினுடைய ஆட்சிக் காலம் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம் என்பதற்கு, இங்கே உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) சப்ஜெக்டைப் பேச விடுங்கள். (கூச்சல்-குழப்பம்) அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்—கொஞ்சம் அமைதியாக இருங்கள்—பக்கம் 4-லே, 2.4. செயல்பாட்டுத் திறன்:-அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து சிறந்த செயல்திறன்களுக்காக, குறிப்பாக, இயக்கப் பயன்பாட்டில் சிறந்த செயல்திறன், கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன், பயணிகளின் அடர்வு, எரிபொருள் சிக்கனம் முதலியவற்றில் தேசிய அளவில் விருதுகளைப் பெற்று வருகின்றன. பல்வேறு கடினமான சூழ்நிலைகளிலும் மேலே குறிப்பிடப்பட்ட விருதுகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன என்பது

குறிப்பிடத்தக்கதாகும். அம்மா ஆட்சிதான் இந்தச் சாதனைகளையெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) தந்தது. ஆக ஒத்துக்கொண்டதற்கு, அம்மாவினுடைய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) இருங்கள், வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஏதோ, இவர்கள் 5 ஆண்டு காலத்தில், இவர்கள்தான் இந்த கார்ப்பரேஷனை எல்லாம் ஆரம்பித்து, இந்த கார்ப்பரேஷனையே புதிதாக உருவாக்கி, கார்ப்பரேஷனே, இவர்களே prize வாங்கியது மாதிரிப் பேசுகிறார்கள். 1975-ல் கலைஞர் ஆரம்பித்த அந்த கார்ப்பரேஷன் இன்றைக்குத் தொடர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே எங்களுடைய— தொடர்ந்து இந்தத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் விருதுகள் பெற்றிருக்கிறது. எல்லா ஆட்சிகளிலும் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடர்ந்து விருதுகள் பெற்றதுபோல, நாங்கள் நல்லது செய்து வைக்க, தொடர்ந்து அந்த விருதுகளை நீங்களும் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், நீங்கள். (கூச்சல்-குழப்பம்) கொஞ்சம் இருங்கள், விசுவநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இவர்கள் சொல்கிறார்கள், இவர்கள் விருது வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை கழக ஆட்சியிலே கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது புதிதாக விடப்பட்ட பேருந்துகளுடைய எண்ணிக்கை 10,206. 2001-லிருந்து 2006 வரை அவர்கள் ஆட்சியிலே வாங்கிய புதிய பேருந்துகளுடைய எண்ணிக்கை 5,008. இதுதான் prize வாங்குவதா? எப்படி? (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். இன்னும் நான் முடிக்கவில்லை. (கூச்சல்-குழப்பம்) நான் முடிக்கவில்லை. (கூச்சல்-குழப்பம்) கொஞ்சம் இருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிடாதீர்கள்.



உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசலாம். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு உறுப்பினருக்கு நேரம் தரப்படும், துடிக்காதீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள், பொறுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** அடுத்து, பழைய பேருந்துகளைப புதிதாக மாற்றக்கூடிய அந்தப் பணியைச் செய்யாத காரணத்தால் இன்றைக்கு இந்த ஆட்சிக்கு வந்த பிறகு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெரிவிக்கிறார்கள், எங்களுக்குப் பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது, பேருந்து புதிதாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் அவர்கள் அந்த prize வாங்கியதனுடைய தகுதி. அது மட்டுமல்ல, போனஸ், கழக ஆட்சியிலே தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் வழங்கப்பட்டது. இவர்களுடைய ஆட்சியிலே 8.33 சதவீதம் வழங்கப்பட்டது. (கூச்சல்-குழப்பம்) பஸ்சும் வாங்கவில்லை, போனசும் கொடுக்கவில்லை. வேலைக்கு ஆளும் எடுக்கவில்லை. நீங்கள் (கூச்சல்-குழப்பம்) எப்படி இந்த prize வாங்குவது? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்கிறேன். பதில் மெதுவாகச் சொல்லுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே பக்கம் 7-ல், டீசல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை மைய அரசு மாற்றியமைக்கின்றது. ஆனால் அவ்விலை உயர்விற்கேற்ப, தமிழகத்தில் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை.

அதேபோல, இந்தியாவிலேயே பயணிகளினுடைய நலன் கருதி— அடுத்த பக்கம்—9-வது பக்கம், பயணிகளின் நலன் கருதி தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணம் டிசம்பர் 2001-க்குப் பிறகு உயர்த்தப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இது யார் ஆட்சி? பொற்காலம் இல்லையா? டீசல் விலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 2001-ல் வந்து, 18 ரூபாய் 75 காசு டீசல் விலை இருக்கும்போது இந்தியாவிலே மற்ற எந்தப் போக்குவரத்துக் கழகமும்

செய்யாததை ஒரே நேரத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 6 காசு ஏற்றுகிற தகுதி உங்களுக்கு மட்டும்தான் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்களுக்கு இல்லை. அதற்கு முன்பு ஏதோ சொல்கிறார்கள், தங்களுடைய ஆட்சியிலேதான் குறைவாக இருந்தது என்று. எங்களுடைய ஆட்சியிலும் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் கிலோ மீட்டருக்குக் குறைவான சலுகைகள்தான் இருந்தனவே தவிர, நாங்கள் ஒன்றும் மற்ற மாநிலங்களைவிடக் கூடுதலான விலை கொடுத்து, கிலோ மீட்டருக்கு என்று rate போடவில்லை. உங்களைப் போலவே நாங்களும குறைவாகத்தான் வைத்திருக்கிறோம். இன்றைக்கும் குறைவாகத்தான் வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பி..., விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, முதலில் 1991–க்கு முன் அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுது—சென்ற ஆட்சிக் காலத்தில்—1996–ல் டீசல் விலை 10 ரூபாய் 80 காசு. 10 ரூபாய் 80 காசு இருக்கும்போது அவர்கள் பேருந்துக் கட்டணத்தை, அப்போது—அவர்கள் ஆட்சி முடியும்போது டீசல் விலை 1 லிட்டருக்கு 18 ரூபாய் வந்துவிட்டது—8 ரூபாய் ஏறியதற்கு அவர்கள் பல்வேறு தவணையாக ஏற்றிய கட்டணம் எவ்வளவு என்று தெரியுமா? கிலோ மீட்டருக்கு 8 பைசா. ஆனால், அம்மா ஆட்சிக் காலத்தில், (குறுக்கீடு) நான் முழுவதும் சொல்லிவிடுகிறேன். அதாவது, தி.மு.க. ஆட்சியில் 8 ரூபாய் டீசல் விலை ஏறியதற்கு 8 பைசா உயர்த்தப்பட்டது. அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் டீசல் விலை லிட்டருக்கு 15 ரூபாயாக இருந்தது, 33 ரூபாய் 50 பைசாவிற்குப் போய்விட்டது. டீசல் விலை 15 ரூபாய் 50 காசு ஏறியதற்குப் பின்பும் வெறும் 6 பைசா ஏற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எது சிறந்த ஆட்சி?

*(முற்பகல் 11–30)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, 6 பைசா ஏற்றியபோது, 2001–லே டீசல் விலை 18 ரூபாயிலிருந்து 1 ரூபாய் குறைந்தது. 17 ரூபாயாக இருக்கும்போது. 6 பைசா ஏற்றினார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரூபிக்கிறேன். அப்பொழுது தி.மு.க.



ஆட்சி முடிவுறுகிறபொழுது டீசல் விலை, அவர் சொன்ன மாதிரி, 18 ரூபாய். நாங்கள் 5 வருடத்திலேயும் சேர்த்து ஏற்றியது 4 பைசாதான், இவருடைய ஆட்சியிலே ஏற்றிக் குறைத்தாகிவிட்டது, மறுபடியும், மீண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை 1 ரூபாய் குறைந்திருக்கிற காலக்கட்டத்திலே, 5 வருடத்திலும் வரப்போவதை நினைத்து, 2001–லேயே 6 பைசா ஒரே தடவையிலே உயர்த்திய அரசு கடந்த கால அரசுதான். இதை மறுக்க முடியுமா? 6 பைசா—16 பைசாவிலிருந்து 22 பைசாவாக உயர்த்தியது அந்த ஆட்சி. எப்போது? டீசல் விலை 1 ரூபாய் குறைந்திருக்கிறபொழுது ஏற்றினீர்கள். பின்னாலேதான் 2003, 2004, 2005–ல் டீசல் விலை எல்லாம் உயர்ந்தது. ஆக, பின்னாலே வரப்போவதைத் தெரிந்து, முதலிலேயே 6 பைசா அதிகமாக உயர்த்தியது அந்த ஆட்சி என்பது மறுக்க முடியாத உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், விசுவநாதன். சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, துறை அமைச்சருக்கு எதுவுமே தெரியாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** அதாவது, இந்தியாவிலேயே இத்தனை முறை டீசல்...

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள்கூட போக்குவரத்துத் துறை அமைச்சராகத்தான் இருந்தார். அவர் காலத்தில் லிட்டர் 4 ரூபாய்க்கு விற்றது. 8 காசுக்கு நாங்கள் ஓட்டினோம் என்று நீங்களும் சொல்லிவிட்டீர்கள் என்றால், எங்கள் காலத்திலே குறைந்து ஓட்டினோம் என்று சொல்லலாம் அல்லவா!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இன்னும் ஒரு நிமிடம் பேச அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) இன்னும் ஒரு நிமிடம் பேசுங்கள். பேசி முடியுங்கள்.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227422
சென்னை-600 008

**திரு. இரா. விசுவநாதன்:** மைக் கொடுக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, இப்போது நான் சொல்ல வருவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அவர்கள் 5 ஆண்டு காலத்திலும் வரவு–செலவைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். எது பொற்கால ஆட்சி என்று சொல்லுங்கள். 1996–97–ல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட நட்டம் 310.67 கோடி ரூபாய். 1997–98 ஆம் ஆண்டில் 229.37 கோடி ரூபாய் நட்டம். 1998–99 ஆம் ஆண்டில் ரூ. 411.39 கோடி நட்டம். அதேபோல, 1999–2000 ஆம் ஆண்டில் ரூ. 317.91 கோடி நட்டம். அதேபோல 2000–2001 ஆம் ஆண்டில் ரூ. 228.87 கோடி நட்டம். ஆக மொத்தம், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒட்டுமொத்த திரண்ட இழப்பு 1,498.21 கோடி ரூபாய், ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய், 5 ஆண்டு காலத்திலே.

அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் 2001–2002 ஆம் ஆண்டில் வெறும் 98.86 கோடி ரூபாய்தான் நட்டம். அதற்கடுத்து, 2002–2003 ஆம் ஆண்டில் ரூ. 4.21 கோடிதான் நட்டம். அதற்கடுத்து, 2003–2004–ல், (குறுக்கீடு) முழுவதுமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். 2 நிமிடங்களில் சொல்லி விடுகிறேன். 2003–2004–லே (குறுக்கீடு) சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2004 ஆம் ஆண்டில், 18 ஆண்டுகளுக்குப் பின்பு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முதன்முறையாக இலாபம் ஈட்டி, பெருமை சேர்த்த தலைவி புரட்சித் தலைவி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நீங்கள் தவறாகவே சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) தவறான புள்ளிவிவரம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய (குறுக்கீடு) இருங்கள். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். அவர்களுடைய ஆட்சியில் (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

*(திரு. இரா. விசுவநாதன் நின்றுகொண்டு பேசிக் கொண்டிருந்தார்.) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கிறார். கொறடா இருக்கிறார். அவர்களுக்கெல்லாம் தெரியாதது அல்ல. ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, அவர்கள் சொல்கின்ற கருத்திலே மாறுபாடு இருக்குமானால், அதற்குப் பதில் சொல்வதற்கு அமைச்சர்களுக்கு உரிமை இருக்கிறது. திரு. விசுவநாதன் அவர்கள் ஏற்கெனவே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர். அவர் எத்தனை முறை குறுக்கிட்டிருப்பார்? அவரே எண்ணிப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு, தொடர்ந்து நீங்கள் பேசலாம். உங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. எனவே, அமைச்சரே பேசக்கூடாது என்று சொல்வது முறையல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுகிறீர்களா? அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அவர்களுடைய காலத்திலே போக்குவரத்துக் கழகங்கள் முழுமையாக இலாபத்தில் இயங்கியதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். இப்போது இந்த ஆட்சி வந்து 80 நாட்கள்தான் ஆகின்றன. இந்த 80 நாட்களுக்குள் ஒன்றும் நாங்கள் நஷ்டம் அடையச் செய்யவில்லை. கணக்கு கையிலே இருக்கிறது. மொத்தம், 1996–1997 ஆம் ஆண்டிலிருந்து 2001 வரைக்கும் பஸ்சுக்காகக் கடன் வாங்கப்பட்டது ரூ. 788 கோடியே 29 இலட்சம். பாக்கி வைத்தது ரூ. 667 கோடியே, 83 இலட்சம், ஆட்சி முடிகின்றபோது. 2001–2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கிறபோது அவர்கள் பஸ்சுக்காக loan பெற்றது ரூ. 446 கோடியே 13 இலட்சம். அவர்களுடைய ஆட்சி முடிந்தபோது ரூ. 562 கோடியே 30 இலட்சம் கடன் வைத்துவிட்டுத்தான் அவர்கள் சென்றிருக்கிறார்கள்.

இந்த 80 நாட்களுக்குள்ளாக ஏதோ அவர்கள் சம்பாதித்த பணத்தை, இலாபமாக வைத்ததையெல்லாம் நஷ்டமாக்கிவிட்டதாகச் சொல்கிறார்களே, கணக்கு, நமது போக்குவரத்துத் துறை—Finance Corporation இடமிருந்து பெற்றிருக்கிற கணக்கு. இன்னும் சொல்லப் போனால், இங்கு M.T.C. ஓடுகிறது. ரூ. 800 கோடி நஷ்டத்தில் இருக்கிறது. எந்தக் காலத்தில் நஷ்டம் வந்தது என்று விரிவாக வேண்டுமானாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தரத் தயாராக இருக்கிறேன். அதனால் உங்களுடைய காலத்தில் இலாபம் என்பது அல்ல. நீங்கள் போக்குவரத்துக் கழகத்தைச் சரியான முறையில் நடத்தாமல்,

நசுக்கினீர்கள், தொழிலாளர்களை நசுக்கினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பேருந்து விடவில்லை. (குறுக்கீடு) புதிய பேருந்து விடவில்லை (குறுக்கீடு) புதிய பேருந்தும் போடவில்லை. இதுதான் நிலைமை. ஏதோ கையில் இருக்கிறதை வைத்துக்கொண்டு அம்மா ஆட்சியிலே இலாபம், இலாபம் என்று சொன்னால் பணம் வேண்டும் அல்லவா? கணக்கிலே பணம் வேண்டும் அல்லவா? (குறுக்கீடு)

முற்பகல் 11–35

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசுவநாதன், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) விசுவநாதன். (குறுக்கீடு) விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** அம்மா ஆட்சிக்கு வரும்போது 2,031.19 கோடி ரூபாய் திரண்ட நஷ்டம். இந்த ரூ. 2,031.19 கோடியிலே தி.மு.க. ஆட்சி வைத்த பங்கு 1,500 கோடி ரூபாய்—1,498.21 கோடி ரூபாய். அம்மா ஆட்சிக் காலத்திலே நஷ்டம் இல்லையென்று சொல்லவில்லை. அவர் சொன்னதைப்போல நஷ்டம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியிலே ரூ. 1,500 கோடியாக இருந்தது. (குறுக்கீடு) இல்லை. ஐந்தாண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் அதிகமாகக் கடன் வாங்கியதால் நசிந்துவிட்டது என்று அர்த்தம் அல்ல. ஒரு தொழிலைச் செய்கின்றபோது அதிகமான அளவிற்குக் கடன் வாங்கி புதிய பேருந்துகள் பெறுகிறோம், புதிய ரூட்கள் தொடங்குகிறோம். புதிதாகத் தொழிலாளர்களை வேலையில் சேர்க்கிறோம். அது எப்படி நாங்கள் நஷ்டம் அடைந்ததாக அர்த்தம்? வாய்ப்பை அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். உங்களைப்போல தொழிலாளர்களையும் எடுக்காமல், புதிய பேருந்தும் போடாமல் இருந்தால், இலாபம் என்று வேண்டுமானால் கணக்குக் காண்பிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்மீது ஓர் உரிமைப்



பிரச்சினைகூடக் கொண்டு வரலாம். இருந்தாலுங்கூட (குறுக்கீடு) இல்லை, ஒரு தவறைச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு தவறை. அவரே இங்கே ஒரு சவாலை ஏற்றுக்கொண்டிருக்கிறார், கேள்வி நேரத்திலே. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 3,000 பேருந்துகளுக்கு மேல், புதிய பேருந்துகள் வாங்கவில்லை, அந்தச் சவாலை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். இப்போது அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். 5,608 பேருந்துகள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாக அறிவித்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 5,608 பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன என்று தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொன்னார்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அவர்கள் ஆட்சிக் காலத்திலே இலாபகரமாகச் செயல்பட்டதைக் குறிப்பிடுகிறார்கள். இன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அதிலே ஏற்பட்டிருக்கிற அனுபவங்கள், நஷ்டங்கள், விளைவுகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, இந்தப் போக்குவரத்துத் துறை என்பதிலே இருக்கிற இலாப–நஷ்டக் கணக்கு என்பதைப் பற்றி இங்கே பேசுகிறபோது, இதை ஒரு சாதனையாகப் பேசுவது என்பது,

மக்களுக்காகச் சேவை ஆற்றுகிற துறையைப் பற்றிய சிந்தனையை வேறுவிதமாகத் திசை திருப்பும். என்னுடைய அழுத்தமான கருத்து என்பது, சேவைத் துறைகள் என்று சொல்கிறபோது, போக்குவரத்துத் துறை, மருத்துவத் துறை, கல்வித் துறை, இவையெல்லாம் நஷ்டத்திலே இயங்கினால்கூட, இந்தத் துறைகளை மக்களுக்காகச் செயல்படுத்த வேண்டுமே தவிர, இலாப–நஷ்டக் கணக்கைப் பார்த்து, ஏதோ கணக்குச் சொல்வதற்குரிய முயற்சிகளை முன்னாள் அமைச்சர் அவர்கள் செய்யக் கூடாது என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். ஒரே ஒரு வார்த்தையிலே முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது அமைச்சர் கொடுத்த விளக்கங்களை அவர் மறுக்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அடுத்து, (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது ஒன்றைச் சொன்னார்கள், 3,000 பேருந்துகளுக்கு மேல் வாங்கவில்லை என்று. நான் துணைக் கேள்வி கேட்டேன். அப்போது அவர் சொன்னார், "உங்களுடைய புள்ளிவிவரத்தில் உறுதியாக இருக்கிறீர்களா?" என்று நான் கேட்டேன். "என்னுடைய புள்ளிவிவரத்தில் நான் உறுதியாக இருக்கின்றேன். உங்களுடைய புள்ளிவிவரத்தில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா" என்று, அன்றைக்குச் சவால் விட்டார். அந்தச் சவாலுக்கு நான் பதில் சொல்லலாம் என்று கருதியிருந்தேன். அந்தச் சவாலுக்கு அவரே பதில் சொல்லி, அதிலே தவறான தகவலைத் தந்திருக்கிறார். அதற்காக நீங்கள் ஒரு வருத்தமாவது தெரிவித்தால் போதும். நான் ஏதோ இரண்டு மாதம்தான்...

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்...

**திரு. இரா. விசுவநாதன்:** இன்னும் முழு விவரங்கள் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உங்களுக்கு அனுமதிக்கப்பட்டது பத்து நிமிடங்கள்தான். நீங்கள் அதிகமாக எடுத்திருப்பது 29 நிமிடங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. கே.பி. இராமசுவாமி. (குறுக்கீடுகள்)



**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, பிரச்சினையே இனிமேல்தான் இருக்கிறது. முக்கியமான விவாதங்களே இனிமேல்தான் இருக்கின்றன.

**திரு. கே. பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

சொல்வன்மை உடையவனாகவும், சொற்சோர்வு இல்லாதவனாகவும், சபைக்கு அஞ்சாதவனாகவும் உள்ள ஒருவனை வெல்லுதல் எவராலும் முடியாது (குறுக்கீடு) என்ற அய்யன் திருவள்ளுவர் பெருமான் குறளுக்கு இலக்கணமாக, உலகெங்கும் வாழ்கின்ற 7 கோடித் தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழினத் தலைவராக இன்றைக்கு ஐந்தாவது முறையாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள்; ' அரசு தொலைதூரப் பேருந்துகளில், அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்றப்பட்ட பேருந்துக் கட்டணத்தை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சேகர்பாபு, உட்காருங்கள். இடைமறித்துப் பேசாதீர்கள். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. சேகர்பாபு, இதுபோல இடைமறித்துப் பேசினால், நடவடிக்கை எடுக்கப்படும், ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) யாரைக் கேட்டு நீங்கள் எழுந்து நின்று பேசினீர்கள்? (குறுக்கீடு) உங்களுக்கு உரிமையில்லை, உட்காருங்கள். திரு. விசுவநாதன், பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு Subjects மட்டும் சொல்லிவிடுகிறேன். இதோ முடித்துவிடுகிறேன். நிறைய இருந்தாலுங்கூட இரண்டே இரண்டைச் சொல்லிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், உயர்த்தப்பட்ட பேருந்துக் கட்டணத்தை—தொலைதூரப்

பேருந்துகளில் உயர்த்தப்பட்ட பேருந்துக் கட்டணத்தை, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் குறைப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது குறைத்ததற்குப் பின்னாலே, நாங்கள் எல்லாம் அதிலே பயணம் செய்கின்றோம். நீங்கள் குறைத்ததைத்தான் நாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். என்ன ஆச்சு? தேர்தல் அறிக்கையிலே, நீங்கள் குறிப்பாக, இப்போதுகூட ஒரு உத்தரவு சொன்னால்கூடப் போதுமே! பேருந்துக் கட்டணத்தைக் குறைப்போம் என்று. (குறுக்கீடுகள்) இரயில் கட்டணத்திற்கு இணையாகக் குறைப்போம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** உங்கள் தேர்தல் அறிக்கையைப் படித்துப் பாருங்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right, பேசுங்கள். ஒரு வார்த்தையிலே முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** அந்தத் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நிறையப் பேர் பேச வேண்டும்.

**திரு. இரா. விசுவநாதன்:** என்ன ஆயிற்று என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே அமைச்சர் முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சி அளிக்கிறார். ஒரு பக்கம் என்னவென்றால், பேருந்து வாங்கவில்லை என்கிறார் அவர். பிறகு வாங்கினோம் என்கிறார். ஒரு பக்கம் தொழிலாளர்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வேலைக்கு—ஓட்டுநர், நடத்துநர்களைப் புதிதாக எடுக்கவில்லை என்ற காரணத்தால் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், பேருந்துகள் இயக்கப்படாமல் இருக்கின்றன என்று ஒரு கருத்தைச் சொன்னார். அதற்கு ஒரு விவாதத்திற்காகச் சொல்லுகிறேன். அப்படி ஒரு நிலை இருக்குமானால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 2,500–க்கும் மேற்பட்ட ஓட்டுநர்களும், நடத்துநர்களும்—வழக்கு இங்கே நிலுவையிலே இருக்கிறது. வழக்குக்குள் நான் செல்ல விரும்பவில்லை. வழக்கைப் பற்றி நான் பேசவில்லை.



ஆனால், அன்று அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட அந்த ஓட்டுநர், நடத்துநர் பணிகளை ஏன் ரத்துச் செய்தீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பக்கம் பணியாளர்கள் போதவில்லை என்கிறீர்கள், ஒரு பக்கம் இருக்கிறது என்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீதிமன்றத்தில் இருக்கின்ற ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். இருந்தாலும், நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை கழக ஆட்சியில் நியமிக்கப்பட்ட பல ஓட்டுநர்கள் எந்தக் காரணமும் இல்லாமல் 1,568 பேர் நீக்கப்பட்டார்கள். அவர்களில் 922 பேர் என்று கருதுகிறேன், அவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர்களுக்கு வேலை தந்துவிட்டுத்தான் நீங்கள் புதிதாக ஆள் எடுக்க வேண்டுமென்று ஒரு உத்தரவிட்டது நீதிமன்றம். அதை ஏற்றுக்கொள்ளாமல், தேர்தல் வருகின்ற நேரத்தில் அவசர, அவசரமாக 2,000 பேர்களுக்கு மேலாக ஓட்டுநர், நடத்துநர்களை எடுத்தார்கள். தேர்தல் காலம் என்ற காரணத்தால், அது நிறுத்தி வைக்கப்பட்டது. அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டது; ஏற்கெனவே சொல்லப்பட்ட ஆயிரத்து சொச்சம் பேருக்கும் வேலை தந்த பிறகு, இவர்களைப் பற்றி நாங்கள் சிந்திப்போம் என்றிருக்கிற காலத்திலே, அவர்கள் நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றம் வேலைக்கு எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டால், நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். உங்களைப் போல் அல்ல; நீக்குவது அல்ல. கழக ஆட்சியிலே பல முன்னுதாரணங்கள் உண்டு. முன்பு நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது எடுக்கப்பட்ட 10 ஆயிரம் காவலர்களை, மீண்டும் முதலமைச்சராக வந்த கலைஞர் அவர்கள் அப்படியே வைத்துக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் எங்கள் காலத்தில் போட்ட மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்களை எல்லாம் நீக்கிய வரலாறு உங்களுக்குத்தான். இதுதான் நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உங்கள் நேரம் 33 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த வழக்குக்குள் போக விரும்பவில்லை. ஆனால், அந்தத் தற்காலிகப் பணியாளர்களுக்கு நாங்கள் வேலை கொடுக்கவில்லை என்று தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார். அவர்களுக்கு வேலை கொடுப்பதைப் பற்றி நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை. தினக்கூலி அடிப்படையிலே பணிபுரியும் அத்தனை பேரையும், அவர்களைப் பணி நிரந்தரம் செய்துவிட்டு, அதற்குப் பின்பு இருக்கின்ற vacancy-யில்— அமைச்சரே சொல்லியிருக்கின்றார். 8,000-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று பேசியிருக்கிறார். அப்படியிருக்கின்றபோது, ஏற்கெனவே, 1,600 பேர் தற்காலிகப் பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்குவதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அவர்களுக்கு வழங்குங்கள்; அதை நாங்கள் தடுக்கவும் இல்லை. அவர்களுக்கு வழங்கிவிட்டு, புதிதாக எடுத்தவர்களுக்கும் வழங்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெள்ளத் தெளிவாக இங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 5 ஆண்டு காலத்திலே, கடைசி காலத்திலே, ஒரு மூன்றாண்டு காலம் நீங்களே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். உங்கள் காலத்தில்தான் அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்களே அவர்களை வேலையிலே வைத்திருந்திருப்பீர்களேயானால், இந்தப் பிரச்சினைக்கே இப்போது இடம் இருந்திருக்காது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டவர்களை நீங்கள் நீக்கிய காரணத்தால்தான், நீதிமன்றம் சென்று, நீதிமன்றத்திலிருந்து எங்களுக்கு இப்போது வந்திருக்கிறது, அவர்களுக்குத் தந்துவிட்டுப் புதிதாக எடுங்கள் என்று. அதனால்தான் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார். நீக்கவில்லை; Permanent பண்ணாமல் இருந்தது. Permanent பண்ணிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறோம், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடனே உரையை முடியுங்கள்.



**திரு. இரா. விசுவநாதன்:** ஆனால், நீக்கியது இப்போது இருக்கிற ஆட்சிதான். புதிய பணியாளர்கள் நியமனம்–அண்ணா தி.மு.க., அம்மா ஆட்சிக் காலத்திலே எடுத்த பணியாளர்களை நீக்கி உத்தரவிட்டிருப்பது, இப்போது இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை. தொழிலாளர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி. (குறுக்கீடு) பேசிக்கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) முதலில் நீங்கள் நேரத்தை முழுவதும் வீணாக்கிவிட்டீர்கள். இப்பொழுது, இப்பொழுது என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு)

**திரு. கே. பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

சொல்வன்மை உடையவனாகவும், சொற்சோர்வு இல்லாதவனாகவும், சபைக்கு அஞ்சாதவனாகவும் உள்ள ஒருவனை வெல்லுதல் எவராலும் முடியாது என்ற அய்யன் திருவள்ளுவர் பெருமான் குறளுக்கு இலக்கணமாக, உலகமெங்கும் வாழ்கின்ற 7 கோடித் தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழினத் தலைவராக, இன்றைக்கு ஐந்தாம் முறையாகத் தமிழக ஆட்சிச் சிம்மாசனத்தில், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அரியணையில் அமர்ந்திருக்கும் மூதறிஞர், முத்தமிழ் அறிஞர், தானைத் தலைவர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வணங்கி, என் கன்னிப் பேச்சை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் தொடங்குகின்றேன். (குறுக்கீடு)

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராய் வருதல் வேண்டும், தமிழ்ப் பகைவர் வராது தடுத்தல் வேண்டும்" என்ற புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கொள்கைக்கேற்ப, இன்றைக்கு முதலமைச்சராய் வந்திருக்கிறீர்கள்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். (குறுக்கீடு) ஏழையின் வாழ்வில் ஒளியேற்றும் ஒளி விளக்காய் விளங்கிக்கொண்டிருப்பவர் தலைவர் கலைஞர், நீங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன், உட்காருங்கள்.

**திரு. கே.பி. இராமசுவாமி:** பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற தமிழ்நாட்டையும், தி.மு.கழகத்தையும், பல ஆண்டு காலம் முதலமைச்சராகவும், சுமார் 40 ஆண்டு காலம் தி.மு.கழகத்தின் தலைவராகவும் வீற்றிருந்து கட்டிக் காத்து வருகிறீர்கள். இருண்டு கிடந்த தமிழகத்தில், அராஜகமும், அடக்குமுறையும், சர்வாதிகாரமும் ஆண்டுகொண்டிருந்த தமிழகத்தில், ஜனநாயகத்தை மீட்பதற்காகக் கடந்த இரண்டாண்டு காலமாக, தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தை வலுப்படுத்த, இளைய கலைஞராய், தாடியில்லாத இளம் பெரியாராய், பொடி போடாத பேரறிஞர் அண்ணாவாக, இரவு, பகல் எனப் பாராது, ஓயாது உழைத்து, தமிழகத்தைப் பல முறை வலம் வந்து, நல்லாட்சி அமைக்க உற்ற துணையாக விளங்கியவர் நமது இளைய சூரியன், குறிஞ்சி மலர் நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத் துணைப் பொதுச் செயலாளர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் எங்கள் தளபதியார் என்பதை நாடே அறியும்.

எனது ராசிபுரம் தொகுதி அ.தி.மு.க.–வின் கோட்டை எனப் பீற்றிக்கொண்டிருந்த அ.தி.மு.க.–வை வீழ்த்த, இரண்டு முறையாக ஊராட்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவராகப் பணியாற்றி வந்த என்னை, ராசிபுரம் தொகுதி மக்களுக்கு வேட்பாளராக அறிவித்து, சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது, சட்டமன்றத் தொகுதியில் எனது வெற்றிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் திரு. காந்தி செல்வன் அவர்களுக்கும் மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், வாக்களித்த அனைத்துச் சமுதாய மக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்கித் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

இந்திய வரலாற்றிலேயே ஒரு மாநகராட்சியில் மேம்பாலங்கள் கட்டிப் போக்குவரத்து இடையூறுகளை நீக்கியதாக வரலாறு இல்லை. ஆனால், 9 மேம்பாலங்களைக் கட்டிய நமது முன்னாள் சென்னை மாநகராட்சி மேயர் தளபதியார், இன்றைக்கு உள்ளாட்சித் துறையை நிர்வகிக்கும் அளவுக்கு உயர்வு பெற்றுள்ளார். மேம்பாலங்கள் கட்டி,



அந்தப் பாலங்கள், உங்கள் பெருமையையும், புகழையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. பத்தாவது பெரம்பூர் பாலம் கட்டப்படாது தடுத்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பெருமையை, இல்லை, இல்லை, சிறுமையைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு உள்ளாட்சித் துறையில் தமிழகம் மெச்சும் சாதனையைப் புரிந்து புகழ்க் கொடி நாட்டிக்கொண்டிருக்கிறீர்கள். தமிழக மக்களின் பாராட்டைப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். உழைப்பில் உங்களை விஞ்சத் தலைவர் கலைஞர் ஒருவரையன்றி வேறு யாரும் இல்லை. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பார்களே, அந்த சிங்கக் குட்டிதான் நமது தளபதியார் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீங்கள் ஆட்சியில் இல்லாதபோதெல்லாம் கொடுமைகள் நிகழும். மகாமகம் வரும்; கும்பகோணம் பள்ளிக்கூடாரங்கள் கொழுந்துவிட்டு எரியும்; ஓடும் பேருந்து தீ விபத்து தொடரும்; மாணவிகள் தீப்பற்றி எரிவர்; அரசு அதிகாரிகள் இரவு நேரக் கைது தொடரும்; அவர்களது குடும்பம், மனைவி, மக்கள் கண்ணீரும், கம்பலையுமாய் அலைவர்; சிறுபான்மையினர் உரிமைகள் சீரழிக்கப்படும்; மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், அரசு அதிகாரிகள், பணியாளர்கள் வேலை இழப்பர்; விவசாய இலவச மின்சாரம் பறி போகும்; சுருக்கமாகச் சொன்னால் நாடு காடாகும்.

தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்தால், நாளொரு திட்டம், பொழுதொரு நன்மை; ஜெயலலிதா ஆட்சியில் இழந்ததையெல்லாம் தமிழ் மக்கள் மீண்டும் பெறுகின்றனர். தமிழகம் அமைதிப் பூங்கா, எல்லோருக்கும் எல்லாம் என்ற சமதர்ம நோக்கு, இதுவே உங்கள் நல்லாட்சி, தமிழகம் வாழ்த்துகிறது.

வரி இல்லா நிதிநிலை அறிக்கை தந்த மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மழை பெய்தும் கெட்டது, மழை பொய்த்தும் கெட்டது என பாதித்த விவசாயிகள் நலம் பெறவும், வளம் பெறவும் விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை ரத்துச் செய்து, வரலாற்றில் முத்திரை பதித்த முதல் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது தொகுதியின் விவசாயிகளின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் ராசிபுரம் தொகுதி, அத்தனூர் கிராமத்தில் கஞ்சித் தொட்டி வைத்து உணவிற்கே கஷ்டப்பட்ட நெசவாளர்களின் துயர் துடைக்க இலவச மின்சாரம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு அண்ணன் மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களுக்கும், எனது தொகுதியின் நெசவாளர்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலிலே இட்ட மை அழிவதற்கு முன்னே, உங்கள் பேனா மையின்மூலம் நல்ல திட்டங்களை அறிவித்த தமிழக முதல்வர் டாக்டர் தலைவர் கலைஞர் அவர்களே, வீட்டைவிட்டே வெளியே வராத முன்னாள்கள் எல்லாம் பாதுகாப்புக் கேட்கின்ற இந்த வேளையில், தமிழக மக்களே எனக்குப் பாதுகாப்பு என எந்த நேரமும், யார் வேண்டுமானாலும் பார்க்கின்ற முதல்வராகப் பணியாற்றிக்கொண்டுள்ள எங்கள் முதல்வரே, நம் நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்த அண்ணல் மகாத்மா காந்தி அவர்களை, நாங்கள் படிக்கின்ற காலங்களிலே 'காந்தித் தாத்தா' என்று அழைத்த காலத்தை நினைவுகூரும் வேளையில், இன்று படிக்கின்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கியதன்மூலம், அனைத்துப் பள்ளிக் குழந்தைகளும் மகிழ்ச்சியோடு எங்களுக்கு முட்டை தந்த 'கலைஞர் தாத்தா' என்று அழைக்கின்றபோது, நாங்கள் அடைகின்ற மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. மேலும் இத்திட்டத்தின்மூலம் வாரத்திற்கு சுமார் 1¼கோடி முட்டைகள் தேவையை ஏற்படுத்தி, எங்கள் நாமக்கல் மாவட்டத்தில் நலிவடைந்த கோழிப் பண்ணைத் தொழிலைத் தற்போது மேம்படுத்த ஒரு வரப்பிரசாதமான திட்டத்தைக் கொண்டு வந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை என்றால், தொழிலாளர் தோழர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நினைவில் நின்றுகொண்டிருப்பவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். 1971 ஆம் ஆண்டு கழக ஆட்சி மலர்ந்த, அமைந்த அந்த நேரத்தில் பேருந்துகளை நாட்டுடைமையாக்கிய பெருமையும், தொழிலாளர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்கிய பெருமையும், 20 சதவிகித போனஸ் வழங்கிய பெருமையும் தலைவர் கலைஞர் அவர்களே, உங்களையே சேரும். தற்போது தொழிலாளர்கள் விரும்புகின்ற வகையில் போனஸ் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் பெருமைக்குரியதாகும்.



மாண்புமிகு அமைச்சர், அண்ணன் நேரு அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை உணவு அமைச்சராக இருந்தபொழுது தமிழக மக்களின் அன்றாடத் தேவையான உணவுத் தேவையை நிறைவு செய்து, மேலும் மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சேமித்து வைத்தார். அதேபோல், மக்களின் தினந்தோறும் தேவையான பஸ் வசதி தன்னிறைவு அடையும் வகையிலே இன்று தமிழக மக்களுக்குச் சிறந்த சேவை செய்ய அண்ணன் போக்குவரத்துத் துறை அமைச்சராக இங்கே வீற்றிருக்கின்றார். சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மழை பெய்தால் பேருந்துகளில்கூட பயணிகள் குடை பிடித்துச் செல்லக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால், இன்று நமது முதல்வர் கலைஞர் அவர்கள், 100 கோடி ரூபாய் வழங்கி, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்திற்கு 1,000 புதிய பேருந்துகளை வாங்கவும், சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுத்தப்பட்ட வழித்தடங்களை மீண்டும் நமது கலைஞர் அரசு இயக்கவும் நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும். இத்துறைக்கு 1,200 கோடி ரூபாய், 31–3–2007–க்குள் வருவாய் ஈட்டித் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு பணிபுரியும் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர்களுக்குப் பிற மாநிலங்களில், கர்நாடகா, மகாராஷ்டிராவில் உள்ளதைப்போல், வாகன வசதி–jeep-ம், அவர்களுடைய பாதுகாப்பிற்கு ஒரு ரிவால்வரும், அதிவிரைவில் தொடர்புகொள்ள வயர்லெஸ் கருவிகளும் வழங்கப்பட வேண்டும். இதன்மூலம், மேலும் அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் 46–க்கு, 24 மட்டுமே சொந்தக் கட்டடங்களில் உள்ளன. அதேபோல, பகுதி அலுவலகம் 40–க்கு, ஒன்று மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இருக்கிறது. ஆகவே, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர ஏற்பாடு செய்திடவும், போக்குவரத்துத் துறை அலுவலகத்தில், பாதி மட்டுமே கணினிமயமாக்கப்பட்டுள்ள இந்த நிலையில், 31–3–2007–க்குள் மீதி கணினிமயமாக்கப்பட, விரைவாக அரசுப் பணிகள் நடக்கவும், பொது மக்கள் நீண்ட நேரம் வரிசையில் நிற்காமல் விரைவாகப் பணி முடிக்கவும், அரசுக்கு உடனுக்குடன் புள்ளி விவரங்கள் அளிக்கவும், வேலைப் பளுவை எளிதாக்கவும் பேருதவியாக இது அமையும். ஓட்டுநர் உரிமத்தைப்போல், ஸ்மார்ட் கார்டு என்று அழைக்கப்படும் விசா கார்டு அளவில், சிறிய கம்ப்யூட்டர் Chip

அடங்கிய கார்டு, பதிவுச் சான்று தற்பொழுது வட மாநிலங்களில் கொடுக்கப்படுகிறது. அதேபோல இயங்கும் கம்ப்யூட்டர் Chip வழங்க ஆவன செய்திட வேண்டும். தற்பொழுதைய புள்ளிவிவரப்படி, 82 இலட்சத்து 21 ஆயிரத்து 730 வாகனங்கள் இயக்கப்படுகின்றன. வருடா வருடம் 10 சதவிகிதம் பெருகி வருகின்ற இந்த நிலையில், தற்பொழுது வாகன ஆய்வாளர் நிலை 1–ல் 166 பேரும், நிலை 2–ல் 133 பேரும் மட்டுமே பணிபுரிகிறார்கள். வளர்ந்து வரும் வாகனப் பெருக்கத்தைக் கணக்கிலிட்டு, இன்னும் கூடுதலாக ஆய்வாளர்களை நம் கழக அரசு பணியமர்த்த வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற மாநிலங்கள், கர்நாடகா ஆந்திரா போன்றவை, Inter-State route–ல் பயணம் செய்யக்கூடிய Volvo போன்ற சொகுசுப் பேருந்துகளை இயக்குகின்றன. அதேபோல், நமது தமிழகத்திலும் இயக்கி, பயணிகளுக்கு நன்மை செய்து தர வேண்டுகிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஓய்வூதியத் திட்டம் கலைஞர் ஆட்சியில் மலர்ந்த திட்டம் என்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். அது மட்டுமல்லாமல், (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம், உங்கள் மினி பஸ்ஸை வேகமாக ஓட்டுங்கள்.

**திரு. கே.பி. இராமசுவாமி:** கலைஞரின் கிராமத்துப் பரிசு, மினி பேருந்துத் திட்டத்தைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகளைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே, தாங்கள் 1957–ல் முதன்முதலாக குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அத்தொகுதியில் வாழ்கின்ற கிராமத்து மக்களெல்லாம் நகர்ப்புறங்களுக்குச் செல்வதற்கு, அன்று நீங்கள் சிந்தித்த சிந்தனையின் உதயம்தான், தங்களின் கிராமத்துப் பரிசான மினி பேருந்துத் திட்டம். இத்திட்டம் முதன்முதலாக எனது ராசிபுரம் தொகுதியில், அப்பொழுது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அண்ணன் பொன்முடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்பது பெருமைக்குரியதாகும். ஒரு கிலோ மீட்டர் தூரம் served route–லும், 7 கிலோ மீட்டர் தூரம் unserved route–லும், அனுமதி அளித்தீர்கள். பிறகு, served route–ல் ஒரு கிலோ மீட்டர் என்பது, இத்திட்டத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததால், 4 கிலோ மீட்டர் served route–லும், 16 கிலோ மீட்டர் unserved route–லும், தமிழகம் முழுவதும் மினி பேருந்துகள் செல்லத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, சுமார் 3,500 பேருந்துகள் இயக்கப்பட்டன. மினி பேருந்துகள் நஷ்டத்தில்



இயங்கினாலும், மீண்டும் தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாட்சி மலர்ந்து, நமக்கெல்லாம் நல்ல காலம் பிறக்கும் என்ற எதிர்பார்ப்போடு, தங்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மிகுந்த நஷ்டத்துடன் தொடர்ந்து இயக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஏற்கெனவே, தாங்கள் கொண்டு வந்த திட்டம் என்பதற்காகவே, முந்தைய ஆட்சியில் தாங்கள் விதித்திருந்த காலாண்டு வரி ரூ. 3,250/– என்பதை உயர்த்தி, ரூ.7,800/–ஆக அறிவித்தார்கள். எனவே மீண்டும், தாங்கள் அறிவித்ததைப்போல, காலாண்டு வரியை ரூ.3,250/–ஆகக் குறைத்து உத்தரவிட வேண்டுகிறேன். தற்போது ஓடிக்கொண்டிருக்கும் மினி பேருந்துகளுக்குக் கிலோ மீட்டர் நீட்டிப்புக் கொடுக்க உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு சாதகமாக உள்ளது. அதன்பேரில், 10 கிலோ மீட்டர் served route-லும், 15 கிலோ மீட்டர் unserved route–லும், மொத்தம் 25 கிலோ மீட்டர் என்ற வகையில் மினி பேருந்துகளின் வழித்தடத்தை நீட்டிக்க அரசாணை பிறப்பித்து, ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் மினி பேருந்துகளுக்குப் புத்துயிர் அளித்து, தங்களின் குளித்தலைக் கனவான, கிராமத்துப் பரிசான மினி பேருந்துகளுக்கு மறுவாழ்வு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மலைப் பகுதிகளில் இயங்கிக்கொண்டிருக்கின்ற மினி பேருந்துகளின் தூரத்தை இரட்டிப்பாக்கி, மலைவாழ் மக்களும் பேருந்துகளில் செல்ல வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

75 நாட்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில், தேர்தல் வாக்குறுதிகளில் 75 சதவிகித அறிவிப்புகளை நிறைவேற்றிக் காட்டியுள்ள தலைவர் கலைஞர் அவர்களே, இந்தப் பெருமை உங்களையன்றி உலகில் யாருக்கும் இல்லையெனக் கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி பற்றிய ஓர் இரண்டு வார்த்தைகள். எதிர்க்கட்சிக்கெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரம் தொகுதி பற்றிப் பேசுவீர்கள்?

**திரு. கே.பி. இராமசுவாமி:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.பி. இராமசுவாமி:** இது தமிழகத்தினுடைய கோரிக்கை, இது என்னுடைய கோரிக்கை, தொகுதியினுடைய கோரிக்கை.

ராசிபுரம் பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச் சாலைத் திட்டத்தை நிறைவேற்றி, போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் நன்மை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ராசிபுரம் நகராட்சிக்கு, நகரப் பகுதி மக்களின் இன்றைய குடிநீர்த் தேவையைக் கருதி, புதிய பேருந்து நிலையம் அருகில் பத்து இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டுகிறேன்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், ராசிபுரம்-பூலாம்பட்டி குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட வேண்டுகிறேன்.

ராசிபுரம் பொது மருத்துவமனைக்கு மராமத்துப் பணிகள் செய்திடவும், 10 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தவும், கண் பரிசோதனை தனிப் பிரிவு அமைத்திடவும், கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரவும் நடப்பு நிதியாண்டில் பகுதி-2-இல் நிதி ஒதுக்கி, திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

நாமகிரிப்பேட்டையில் நீண்ட காலமாக இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டுகிறேன்.

நாமகிரிப்பேட்டை ஒன்றியம், தொ. ஜேடர்பாளையத்தில் பத்து கிராமங்கள் அப்பகுதியைச் சுற்றி இருப்பதால், அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

வெண்ணந்தூரில் இயங்கி வரும் அரசு பொது மருத்துவமனை 1976 ஆம் ஆண்டு நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு இரண்டு மருத்துவர்களே பணியாற்றி வருகிறார்கள். அப்பகுதியில் அதிகக் கிராமங்கள் உள்ளதாலும், நெசவாளர் பெருமக்கள் அதிகமாக வசிப்பதாலும், அந்த மருத்துவமனைக்கு மேலும் அதிகமாக மூன்று மருத்துவர்களை நியமனம் செய்து, அம்மக்களின் மருத்துவ வசதியைப் பெருக்கிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.



ராசிபுரம் பகுதியில் கழிவு நீர் செல்ல, சாக்கடை வசதி மிகவும் குறுகிய வாய்க்கால்களாக உள்ளதால், அங்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி, மக்கள் சுகாதாரத்துடன் வாழ வகை செய்ய வேண்டுகிறேன்.

ராசிபுரம் நகரத்திற்குப் புதிதாக நீதிமன்றக் கட்டட வளாகம் கட்டி, மாஜிஸ்திரேட் நீதிமன்றம், முன்சீப் நீதிமன்றம் மற்றும் சப்-கோர்ட் அமைத்திட வேண்டுகிறேன்.

ராசிபுரம் பகுதியில் N.H.7 நெடுஞ்சாலையில் நான்கு வழிப் பாதை அமைக்கப்படுவதால், சாலையோரங்களில் நீண்ட காலமாக சிறு குடிசைகளில் வசிக்கும் ஏழை, விவசாயக் கூலித் தொழிலாளர்கள் குடும்பங்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் குடிசைகள் இடிக்கப்படுவதால், அவர்களுக்கு மாற்று இடம் தர வேண்டுகிறேன்.

ராசிபுரம் சட்டமன்றப் பகுதி, மலையும், மலையைச் சார்ந்த பகுதிகள் நிறைந்துள்ளது. எனது தொகுதியைச் சுற்றி சுமார் 20 பெரிய, சிறிய ஏரிகள் உள்ளன. இனி வரும் காலம் மழைக் காலம் என்பதால், அந்த ஏரிகளைத் தூர் வாரித் தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ராசிபுரம் தொகுதியைப் பின் தங்கிய பகுதியாக அறிவித்து, அரசு மானியம் வழங்கி, அங்கு தொழிற்பேட்டை அமைத்து, அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் பயன் பெறும் வகையிலே சிறு தொழில்கள் தொடங்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ராசிபுரம் தொகுதியைச் சுற்றி மூன்று கிராமங்கள் மற்றும் ஒரு நகராட்சி உள்ளன. 60-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் மற்றும் குக்கிராமங்கள் நிறைந்துள்ளதால், அனைத்துப் பகுதி மகளிர் பயன் பெறும் வகையில், தண்ணீர் வசதியுடன்கூடிய நவீன சுகாதார வளாகம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டமான சிங்களாந்தபுரம், ஜேடர்பாளையம், ஒடுவன்குறிச்சி, சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, பட்டணம்—அத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி, மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருமக்கள் பயன் பெறும் வகையில், பட்டணம், வடுகம், புதுப்பட்டி, அய்யம்பாளையம் ஆகிய பகுதிகளில் 24 மணி நேரமும் மின் இணைப்புக் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இதுவரையில் மின்சாரமே கண்டிராத போதைமலை கிராமமான அம்மலையைச் சுற்றி இடமலை, மேலூர், கீழூர் ஆகிய மலைக் கிராமங்கள் உள்ளன. அங்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தருமாறு தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போதைமலைப் பகுதியில் இயங்கி வரும் ஜி.டி.ஆர். துவக்கப் பள்ளியை மலைவாழ் மாணவர்களின் நலன் கருதி, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

ராசிபுரம் நகரத்திற்கு, சுகாதாரத் துறையின்மூலம் கொசுவை ஒழிக்கும் மின் சாதன power sprayer வழங்க வேண்டுகிறேன்.

ராசிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், இப்பொழுது N.H.7 சாலை அகலப்படுத்தப்படுவதால் இடிக்கப்பட நேரிடுகிறது. அதற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட ஜவ்வரிசித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசியை சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முறை வழங்க, இந்த அரசு ஆவன செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மார்க்கத்திலிருந்து சென்னைக்குச் செல்லும் வாகனங்கள் பெருந்துறை, ஈரோடு, ராசிபுரம், ஆத்தூர் வழியாகச் செல்வதற்கு அச்சாலையை அகலப்படுத்தி, மேம்பாடு செய்தால், காலமும், எரிபொருளும் மிச்சமாகும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராசிபுரம் நகரைச் சுற்றியுள்ள தார்ச் சாலைகள் கடந்த காலங்களில் பெய்த மழையினால் சேதம் அடைந்துள்ளன. அவற்றைச் செப்பனிட்டுச் சீர் செய்ய வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-05*

ராசிபுரம் பகுதியைக் கோட்டாட்சியர் பகுதியாக அறிவிக்க வேண்டுகிறேன்.

ராசிபுரம் நகருக்கு, பொது மக்களின் நீண்ட நாள் கனவான மின் மயானத் திட்டம் நிறைவேற்றித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாள் கோரிக்கையான, ராசிபுரத்திலிருந்து கொல்லிமலைக்கு முள்ளுக்குறிச்சி வழியாக மாற்றுப் பாதை அமைத்து, கொல்லிமலையை சுற்றுலாத் தலமாக அறிவித்து, கொல்லிமலையை



மேலும் வளர்ச்சியடையச் செய்ய அந்தத் திட்டத்தை மிக விரைவாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு வழித்தடங்களுக்கு அரசுப் பேருந்துகள் வழங்க வேண்டுமென்ற அன்பான கோரிக்கையை வைத்து, அதை நிச்சயம் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சு ரொம்ப நன்றாக இருந்தது. Good. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**• திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த எங்கள் தவப் புதல்வன், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களை வணங்கி, என் கன்னி உரையை கன்னித் தமிழால் பேச விழைகின்றேன். இம்மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் மிகவும் குக்கிராமத்தில், மிக, மிக ஏழ்மையான விவசாயக் குடும்பத்திலே, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே மாரியப்ப கவுண்டர்–தங்கம்மாள் தம்பதியருக்குப் பிறந்த என்னை வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்தில் அமருகின்ற வாய்ப்பினைப் பெற்றுத் தந்த அத்தனை தலைவர் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆணவம் என்பது அகராதியிலுமின்றி, அகங்காரம் என்பது அணு அளவுமின்றி, திமிர்த்தனம் என்பது சிந்தனையிலுமின்றி, எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற மனப்போக்குமின்றி, அன்பே உருவமாய், அடக்கமே அணிகலனாய், எளிமையே ஏற்றமாய், நற்பண்பே நல்லெண்ணமாய் விளங்கி, நாட்டிற்கு நீர் சொந்தமில்லை என்று ஏசினாலும், பேசினாலும், அதையெல்லாம் கண்டுகொள்ளாமல், கர்மமே கண்ணாயிருந்து, இழந்த காங்கிரஸ் ஆட்சியை மத்தியில் மீண்டும் உருவாக்கிக் கொடுத்தவரும், இந்த மண்ணிற்குச் சொந்தமானவர் மட்டுமல்ல, இந்திய மக்களைக் காப்பாற்றுகிற வலிமை மிக்க தலைவரும் நீங்கள்தான் என்று இந்திய

மக்களாலே மனமுவந்து ஏற்றுக்கொள்ளப்பட்டவரும், நயவஞ்சகரால் 1948–ல் ஒரு காந்தி, 1984–ல் ஒரு காந்தி, 1991–ல் இன்னொரு காந்தியை நாட்டிற்குப் பறிகொடுத்த தியாகத்தின் வழியில், பதவியே பெரிதெனத் தேடி அலைபவர்களின் மத்தியில், தேடி வந்த பதவியை நாட்டின் அமைதிக்காகவும், ஒற்றுமைக்காகவும், புறம் தள்ளிய தியாகத்தின் திருவுருவமாக, அமைதியின் சின்னமாக விளங்குகின்ற தியாகச் சுடர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உதய சூரியன் உதித்துவிட்டான், எனவே வீறுகொண்டு எழுவோம், வீழ்ந்த உரிமைகளைப் பெறுவோம் என உற்சாக மிகுதியில் உலாவுகின்ற அந்தக் காலை வேளையில், ஆம், காலை 9–30 மணியளவில் எனது வேடசந்தூர் தொகுதிக்கு வந்து, குக்கிராம மக்களையெல்லாம் சந்தித்து, தடுத்து நிறுத்திய இடங்களிலெல்லாம் மனம் கோணாமல், அன்று மலர்ந்த மலரைப் போல வீர முழக்கமிட்டு, எனது வெற்றிக்கு வித்திட்டவரும், தொகுதியிலே எல்லை முடிவில் கரம் குவித்து வணக்கம் சொல்லி வழியனுப்புகின்ற நேரத்தில், தம்பி, வென்று வா, உன்னைக் கோட்டையில் சந்திக்கிறேன் என உற்சாகமூட்டியவருமான, நம்முடைய முதல்வர் முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை புரிந்து, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி நண்பர்களையெல்லாம் சந்தித்து, வேடசந்தூர் சட்டமன்ற வேட்பாளர் தண்டபாணியை வெற்றி பெறச் செய்வது உங்களுடைய தார்மீகக் கடமை என்று தன்னுடைய தொண்டர்களுக்கு எல்லாம் அறிவுரை வழங்கி, என்னுடைய வெற்றிக்கு உந்து சக்தியாக இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு இளம் ஞாயிறு, தளபதி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

த.மா.கா. என்ற மகத்தான இயக்கத்திற்கு இளம் வயதிலே தலைமையேற்று, சிறப்பாக வழி நடத்தி உள்ளாட்சித் தேர்தலையும் சந்தித்து, அன்னை சோனியா காந்தியினுடைய ஆணையின்படி, காங்கிரஸ் பேரியக்கத்திலே இணைத்து, தமிழக காங்கிரஸ் கட்சிக்கு வலுவூட்டிய, அன்னை சோனியா காந்தி அவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து வருகின்ற, நடந்து முடிந்த சட்டமன்றத்



தேர்தலில், பட்டிதொட்டியெல்லாம், மத்திய அரசு கொடுத்த சுனாமி
நிதியில் பினாமி கண்டு கணக்கைக் காட்டாத அ.இ.அ.தி.மு.க.
அரசுக்குக் கணக்கை முடிக்க வேண்டிய நாள் நீங்கள் வாக்களிக்க
வேண்டிய நாள் என வீர முழக்கமிட்ட எங்களுடைய மத்திய
புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் மாண்புமிகு
மக்கள் தளபதி, ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும்
ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 12–10

தமிழகக் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர்களுக்கும், மற்றும்
தமிழகத்தில் இருக்கிற முன்னணித் தலைவர்களுக்கும் என்னுடைய
நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் 7 சட்டமன்றத் தொகுதிகளிலும்,
ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற
உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டு, தனக்கே உரிய சாதுர்யத்தால்
எல்லோரையும் அன்புடன் அரவணைத்துச் செல்லும் பாங்கால்,
இத்தனைக்கும் மேலாக இரவு, பகல் என்று பாராது, கண் துஞ்சாது,
சுழன்று, சுழன்று பணியாற்றி, 5 இடங்களிலும் மிக, மிக அதிகமான
வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்குக் காரண கர்த்தாவாக
விளங்கியவரும், நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, எதற்கும்
அஞ்சாத துணிவு கொண்ட எங்கள் மண்ணின் மைந்தர், முத்தமிழ்
வித்தகர், டாக்டர் கலைஞருடைய அன்புத் தம்பி, மாவீரன், மாண்புமிகு
வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அண்ணன் I.P.
அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக்
காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு
உறுதுணையாக இருக்கின்ற அரசு தலைமைக் கொறடா மாண்புமிகு
சக்ரபாணி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக்
காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே
பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்கிய தமிழகக் காங்கிரஸ்
கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அன்பிற்குரிய தலைவர்
சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக்
காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நிறையப்
பேசுகிறேன். ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும்,
என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட நண்பர்களுக்கும் நான் நன்றி
கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நிறையப் பேர்களுக்கு நன்றி சொல்கிறீர்கள். இன்னும் மூன்று நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. மா. தண்டபாணி:** கன்னிப் பேச்சு. என்னைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சு என்றால்கூட, எவ்வளவு பேர்களுக்கு நன்றி சொல்வீர்கள்?

**திரு. மா. தண்டபாணி:** முதன்முதலாக வந்திருக்கிறேன். பேசுவதற்குக் கொஞ்சம் வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, 10 நிமிடங்கள் நன்றி சொல்வது என்றால் என்ன அர்த்தம்?

**திரு. மா. தண்டபாணி:** உள்ள உவகையோடு மனமுவந்து வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்த வேடசந்தூர் சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கு நான் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவன் என்கின்ற உணர்வோடு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக நம்முடைய தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், 1975 ஆம் ஆண்டு என்னுடைய வேடசந்தூர் தொகுதியிலே குடகனாறு அணையைக் கட்டி, அந்தப் பகுதி மக்களுடைய விவசாயத்திற்கு, விவசாயிகளுடைய வாழ்விற்கு வழி சேர்த்திருக்கிறார்கள். அதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், எங்களுடைய தொகுதியில் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிற நேரத்தில், 2000 ஆம் ஆண்டு நம்முடைய தமிழக அரசால், திராவிட முன்னேற்றக் கழக அரசால், வேடசந்தூர் தொகுதி முழுவதற்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்ற ஆணை இருந்தாலுங்கூட, ஆட்சி மாற்றம் ஏற்படுகிறபோது இடையில் வந்த ஆட்சியாளர்கள் அதைத் தடுத்து நிறுத்தி, குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலையை உருவாக்கி, இன்றைக்கு மீண்டும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதி முழுமைக்கும் குடிக்கின்ற காவிரி நீரைக் கொடுத்ததற்காகத் தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



சமீபத்தில் பெய்த மழையால் வேடசந்தூர் நகரில் பெருவெள்ளம் ஏற்பட்டு, மக்கள் எல்லாம் பாதிப்பிற்கு ஆளாகிற நேரத்தில் என்னுடைய வேடசந்தூர் நகருக்கு வந்து, அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரத் தீர்வாக குடகனாறு ஆற்றின் இடையிலே ஒரு பாலத்தைக் கட்டித் தருகிறேன் என்று சொன்ன மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்களுக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தப் போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது பேசுவதில் நான் பெருமையடைகிறேன். காரணம், இந்தத் துறைக்கு வலுவூட்டி, இந்தத் துறைக்குப் பெருமை சேர்த்து, தமிழகத்திலே இருக்கிற அத்தனை தனியார்களுடைய பேருந்துகளை எல்லாம் அரசுடைமையாக்கி, இந்தத் துறைக்கு வலுவூட்டியவர் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் என்கிற காரணத்தினால், இந்தத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இத்தனைக்கும் மேலாக, இந்தியத் திருநாடு விடுதலை பெறுவதற்காக 17 ஆண்டுகள் வெஞ்சிறையிலே மடிந்து, மீண்டும் விடுதலை பெற்ற இந்தியாவில் 17 ஆண்டுகள் இந்த நாட்டிலே நவ இந்தியாவை உருவாக்கிய பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பெயரைத் தாங்கி இருக்கிறவர் இந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பையேற்றிருக்கிறார் என்ற காரணத்தினாலே, காங்கிரஸ்காரன் என்கிற முறையில் நான் பெருமைகொள்கிறேன், பெருமிதம்கொள்கிறேன் இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்காக. (மேஜையைத் தட்டும் ஒலி)

பெருமைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையானது, ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடின்றி, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி, ஆண், பெண் என்ற பாகுபாடின்றி, சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடின்றி, எல்லோருடைய வாழ்க்கையிலும் கலந்திருக்கின்ற ஒரு மகத்தான துறை என்று சொன்னால், அது மிகையாகாது. இந்தத் துறையை நமது உடலில் ஓடுகிற இரத்த நாளங்களுக்கு உதாராணமாகக்கூடச் சொல்லலாம். இரத்த ஓட்டம் சீராக இருந்தால்தான் உடல் நல்ல நிலையில் இருக்கும். அதுபோன்று, இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட்டால்தான் இந்தத் தமிழகத் திருநாடு சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. போக்குவரத்துத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால், அதில் பணியாற்றுகிற தொழிலாளர்களும், அலுவலர்களும் மனப்பூர்வமான ஒத்துழைப்பு நல்க

வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆனால், அவர்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் குறைந்தபட்சமாவது அவர்களுக்கு நல்ல பணியைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. விலை மிகுந்த பொருள்களையும், விலை மதிப்பற்ற மனிதர்களையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்கின்ற மாபெரும் பொறுப்பு இந்தப் போக்குவரத்துத் துறைக்கு உண்டு. இந்தத் துறை இலாப நோக்கத்திற்காக அல்லாது, ஏழை, எளிய, பாமர மக்கள், கிராமப்புறத்திலே வாழ்கிற மக்களுக்குச் சேவை புரிகின்ற ஒரு துறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தத் துறையின் இலாப–நட்டக் கணக்கை மட்டும் பார்க்காமல், மக்களுக்குச் சேவை செய்கின்ற பாங்கையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12–15

மாண்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் நடந்த நிகழ்வுகளைப் பார்த்தால்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னையெல்லாம் எவ்வளவு ஐஸ் வைத்தாலும் முடியாது. 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. மா. தண்டபாணி:** நீங்கள் குறுக்கிடாமல் இருந்தால், இன்னும் ஒரு 5 நிமிடம் பேசுவேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் குறுக்கிடவில்லை. நீங்கள் பேசுங்கள்.

**திரு. மா. தண்டபாணி:** கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்க்கிறபோது, இந்தத் துறையின்மூலம் நட்டம்தான் வந்திருக்கிறது. அதற்கு நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களும் இருக்கின்றன. ஆனால், 1991 வரை அண்ணா தி.மு.க. ஆட்சியில் 164.13 கோடி ரூபாய் நட்டம் என்றும், 1991–லிருந்து 1996 வரை 368.85 கோடி ரூபாய் நட்டம் என்றும், 1996–2001 வரை தி.மு.க. ஆட்சியில், 1,498.2 கோடி ரூபாய் நட்டம் என்றும், 2001–2002–ல் அது குறைக்கப்பட்டு, 2002–ல் அது மீண்டும் குறைக்கப்பட்டு, 2004–ல் 2.3 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியதாக மார்தட்டிச் சொல்கிறார்கள். இந்த நிலையைப் பார்க்கிறபோது, உள்ளபடியே அவர்கள் உண்மையான நிலைமையை எண்ணிப் பார்த்தால், கடந்த 5 ஆண்டு காலத்தில் அந்தத் தொழிலாளர் வர்க்கத்தினுடைய இரத்தத்தை, வியர்வையை அவர்களுடைய



வேலையைக் கசக்கிப் பிழிந்து, இந்த இலாபத்தை ஈட்டியிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

மாண்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த
5 ஆண்டு காலத்தில் தொழிலாளர்களுக்கு போனஸ் என்பது
கொடுக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று
சொன்னால், தீபாவளி தினத்தன்று அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற
8.33 சதவிகிதம் போனஸோடு கருணைத் தொகையும் சேர்த்து 6 ஆயிரம்
ரூபாயை அவர்கள் பெற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
அவர்கள் பெற்றது 2,499 ரூபாய் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்
பார்த்தாக வேண்டும். ஆக, ஒரு தொழிலாளியினுடைய உழைப்பை
எந்த அளவிற்கு அவர்கள் உறிஞ்சுகிறார்கள் என்பதற்கு இதைவிடச்
சான்று எதுவும் இருக்க முடியாது. பொங்கல் திருநாளை நன்றாகக்
கொண்டாட வேண்டும் என்ற நல்லுணர்வோடு தமிழகத்தினுடைய
இன்றைய முதல்வராக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் பொங்கல்
திருநாளை பொங்கல் பரிசு கொடுத்தார்கள். ஆனால், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பொங்கல்
திருநாளில் தரும் பொங்கல் வெகுமதியையெல்லாம் ரத்துச்
செய்திருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல நண்பர்களே! இன்னும் சொல்ல வேண்டுமென்று
சொன்னால், அவர்களுடைய பொருளாதார அளவில் மட்டும்
அவர்கள் உறிஞ்சப்படவில்லை. அவர்களுடைய உழைப்பிலும்
உறிஞ்சியிருப்பதைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,
கிட்டத்தட்ட 670 கிலோ மீட்டருக்கு மேலே பயணம் செய்கிறார்கள்
என்று சொன்னால், அவர்களுக்கு 3 duty என்று வழங்கப்படுகிறது.
3–வது நாள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்பது திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்தது. ஆனால், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னாலே,
670 கிலோ மீட்டருக்குப் பயணம் செய்தால், அது 3 நாள் என்பது
மட்டுமல்ல, 2 duty–யாகப் போடுகிறார்கள். 3–வது நாளும் பணிக்கு
வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அதோடு மட்டுமல்ல,
கிட்டத்தட்ட 620 கிலோ மீட்டருக்குப் பயணம் செய்தால், அதை
2½ duty–யாகக் கருதுகிறார்கள். அந்த 1/2 duty-க்குப் பணத்தை
100 ரூபாய் இவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தது. ஆனால், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இவையெல்லாம்

ரத்துச் செய்யப்பட்டிருப்பதையும் நாம் எண்ணிப் பார்த்தாக வேண்டும். ஆகவே, இவையெல்லாம் மக்களுடைய, தொழிலாளர்களுடைய உழைப்பை உறிஞ்சி, அதில் இலாபம் ஈட்டுகிறோம் என்று சொல்லி மார்தட்டுவதிலே எனக்குக் கொஞ்சம்கூட உடன்பாடு கிடையாது. ஆகவே, இந்தத் துறை சிறப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தத் துறையிலே பணியாற்றுகிற அத்தனை பேரும் சிறப்பாக, நலமுடன் இருக்க வேண்டும்.

கடந்த ஆட்சியில் பேருந்துகள் எல்லாம் சிறப்பாக இருந்ததாகச் சொல்கிறார்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 12-20*

**திரு. மா. தண்டபாணி:** இறுதியாக, நான் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். கடந்த கால ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர் மாவட்டத்திலேதான், என்னுடைய தொகுதியிலேதான், குஜிலியம்பாறையிலேதான் 15-11-2005-ல் ஒரு பேருந்து போகிறது. அந்தப் பேருந்திலே, பள்ளியிலே படிக்கின்ற சிறு மாணவி பயணம் செய்கிறார். அந்தப் பேருந்திலே ஓட்டை இருந்த காரணத்தால், அந்த ஓட்டையின் வழியாக விழுந்து, அந்தக் குழந்தை மரணமடைந்திருக்கிறது என்று சொன்னால், அந்தப் பேருந்து எந்த அளவிற்கு இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தாக வேண்டும். நான் தினமும் திண்டுக்கல்லிலிருந்து வேடசந்தூருக்கு பஸ்ஸிலே பயணம் செய்கிறேன். ஒரு நாள் கனத்த மழை வந்துவிட்டது. பஸ்ஸில் எங்கேயாவது மழை வராமல் அல்லது மழை என்மேல் விழாமல் பார்த்துக்கொள்ளலாமா என்று ஓடி ஒளிவதற்குக்கூட அங்கே இடம் இல்லாத அளவிற்கு அத்தனை இடங்களிலும் மழை, வெள்ளம் அங்கே கொட்டுகிற காட்சியைத்தான் நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் பேருந்து எந்த அளவிற்கு இருந்தது என்பதற்கு இதைவிடச் சான்று வேறு ஒன்றும் சொல்ல முடியாது. ஆகவே, பேருந்துகளையெல்லாம் இனி வருகின்ற காலக் கட்டங்களில் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையினை வைக்கிறேன்.

மினி பஸ் என்பது இன்றைக்கு உங்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு பேருந்து, ஆகவே, அதற்குப் புதிய வழித்தடங்கள் வேண்டும். கிராமப்புறத்து மக்களுக்குப் பயன்பட



வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு சிறப்பான திட்டம். இன்றைக்கு ஒவ்வொரு நகரத்திலும் எடுத்துக்கொண்டால், பேருந்து நிலையத்தோடு தொடர்பு இல்லாமல் வெளியிலே நின்று விடுகிற சூழ்நிலை இருக்கிறது. அருள்கூர்ந்து நீங்கள் அந்தப் பேருந்து நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என்கிற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மினி பேருந்து நடத்துகிறவர்கள், பல்வேறு வகைகளிலே தங்களுக்குத் தடைகள் ஏற்படுவதாகவும் சொல்கிறார்கள்; நஷ்டம் ஏற்படப் போகிற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். அதைச் சரி செய்தால்தான் அந்தக் கிராமப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மா. தண்டபாணி:** இறுதியாக ஒன்றே ஒன்றை நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு சில கோரிக்கைகளை வைக்க வேண்டுமென்ற நல்லுணர்வோடு, மாண்பிற்குரிய...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஜி. லதா. (குறுக்கீடு) எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இன்னும் 4 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) முடிக்கமாட்டார்.

**திரு. மா. தண்டபாணி:** ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கை வைக்கும்போதே நன்றி சொல்லி, 6 நிமிடங்கள் எடுத்துக்கொள்வார்.

**திரு. மா. தண்டபாணி:** ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் பேசுங்கள்.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியிலே ஒரு கலைக் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டும். தற்பொழுது என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் சூரியகாந்தி விதை அதிகமாக உற்பத்தி ஆகிறது. அதற்கு ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டியை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குஜிலியம்பாறையைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு தனித் தாலுகாவாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, வேடசந்தூர் பகுதியிலே சீரான மின்சாரம் கிடைப்பது இல்லை; அங்கே ஒரு துணை மின் நிலையத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, என்னுடைய தொகுதிக்கு இன்னும் பல பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த அளவுக்குப் பொறுமையாக இருந்து, என்னுடைய பேச்சைக் கேட்ட பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** லதா அவர்களே, ஒரு நிமிடம், sorry. மாண்புமிகு உறுப்பினர் த.அ. மேகநாதன்.

***திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திலே, 13-வது சட்டப் பேரவையில் ஒரு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிட வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர், மனித நேயப் பற்றாளர், வாழும் பெரியார், தமிழினப் போராளி, உலகத் தமிழர்களுக்காக அல்லும், பகலும் பாடுபட்டு வரும் மருத்துவர் ஐயா அவர்களுக்கும், பசுமை நாயகர், உலகம் போற்றும் அளவில் மத்திய சுகாதாரத் துறையை நவீனப்படுத்தி, புகையிலை உபயோகத்தை எதிர்த்து உலகமெங்குப் குரல் கொடுத்து, அமெரிக்காவின் உயரிய விருதைப் பெற்று, இந்தியத் தாய்நாட்டிற்குப் பெருமை சேர்த்த, எதிர்காலத் தமிழக விடிவெள்ளி மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் சின்ன ஐயா அவர்களுக்கும், எங்கள் அரசியல் வழிகாட்டி, தியாகச் செம்மல், ஓய்வறியா உழைப்பாளி, அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், வல்லமையோடு வாரி வழங்கும் வான் மேக நெஞ்சம் கொண்டு, கள்ளச் சிந்தனை கொண்டு வரும் பகையைத் துள்ளியெழுந்து துண்டாடி, தூளாக்கி, தமிழகத்தில் பொற்கால நல்லாட்சி நடத்திக்கொண்டு வருகின்ற செந்தமிழ்க் காவலர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், பெருமைக்குரிய காவேரிப்பட்டினம்



சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச அனுமதி வழங்கிய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாடு மிக வேகமாக முன்னேற வேண்டுமென்றால் போக்குவரத்துத் துறையும், சாலை வசதியும் மிக முக்கியமான பங்களிப்புகளாக உள்ளன. ஆகவே, போக்குவரத்துத் துறையில் உள்ள பழைய பேருந்துகளைக் கழிவு செய்து, புதிய நவீன வகைப் பேருந்துகளை அறிமுகப்படுத்தும் திட்டம் முறையாக எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட முன்வர வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களைச் சீரான முறையில் சீரமைத்து, திறமையானதாக அமைக்க அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய ரயில்வே துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு 40% புதிய ரயில்களை மாண்புமிகு மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர் வேலு அவர்கள் தமிழகத்திற்கு இந்த ஆண்டு விட்டுள்ளார்கள். அதிக மேம்பாலங்களையும் கட்டி, பெருமைப்படும் வகையில் செயல்பட்டு வந்துள்ளார்கள். அடுத்த ஆண்டும் இதேபோலச் செயல்படத் தமிழக அரசு ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் கீழ்க்கண்ட முக்கியக் கோரிக்கைகளை நிறைவேற்றிடத் தமிழக முதல்வர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வேண்டுகோளாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற ஊதிய ஒப்பந்தம், கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று போடப்பட்டது. அதனை ரத்துச் செய்து, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்கின்ற முன்பிருந்த நிலையே தொடர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து 20% போனஸ் தொகையைக் கணக்கிடு செய்து, நிலுவைத் தொகை வழங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மோனோ ரயில் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது மக்களுக்குப் பயன்படாத திட்டம். வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்கும், சென்னை போன்ற மக்கள் தொகை மிக அதிகமுள்ள, போக்குவரத்து நெரிசல் மிக்க சென்னை மாநகருக்குப் பொருந்தாது. குறைந்த செலவில் அதிகம் பேர் பயணம் செய்வது மெட்ரோ ரயில் திட்டம். மிக அதிகமான செலவில் குறைந்த நபர்கள் பயணம் செய்வது மோனோ ரயில் திட்டம். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சட்டமன்றத்தில், மோனோ ரயில் திட்டம் வீணானது என்று வலியுறுத்தியும், மீறிக் கொண்டு வந்ததால், எங்கள் கட்சியின் தலைவர் திரு. ஜி.கே.எம். அவர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தடையாணை கோரப்பட்டு, மோனோ ரயில் திட்டம் நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் நமது அரசு கொண்டு வரக் கூடாது. நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மெட்ரோ ரயில் திட்டத்தை விரைவாக நிறைவேற்றி, சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து நெரிசலைச் சீர் செய்ய வேண்டுகிறேன்.

சென்னை மாநகரில் வாகனப் போக்குவரத்து அதிகமுள்ளதால், வாகனங்கள் வெளியிடும் புகை சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதோடு, இதனால் பல நோய்களும் வருவதற்கு வாய்ப்புள்ளது என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் டெல்லி மாநகரில் செல்லும் பேருந்துகளுக்கு, டீசலுக்குப் பதிலாக C.N.G. என்கிற எரிவாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதைப்போல, சுற்றுச்சூழல் பாதிக்காதவண்ணம், நோய் பரவாமல் மக்களைப் பாதுகாத்திட மாநகரப் பேருந்துகளுக்கு C.N.G. என்கிற எரிவாயுவைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் நசுக்கப்பட்டார்கள். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து, மக்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த சேவைத் துறையாக இருப்பதால், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வாரியமாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கடந்த ஆட்சியில் போனஸ் கோரி, 2001-ல் நடைபெற்ற 17 நாள் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்களுக்கு, அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நாட்களுக்கு ஊதியம் வழங்கியதுபோல, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும், இதுநாள் வரை ரத்துச் செய்யப்படாமல் இருக்கும் அனைத்துக் குற்றவியல் நடவடிக்கைகளும் ஒழுங்கு நடவடிக்கைகளும் ரத்துச் செய்யப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு, மருத்துவத் தகுதியின்மை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, மாற்றுப் பணி வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து ஊழியர்களுக்கு டிரஸ்டுமூலமாக பென்ஷன் வழங்குவதால் பல குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன. எனவே, கருவூலம்மூலம் வழங்க ஆவன செய்யுமாறு அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சை சம்பந்தமாக தற்பொழுது இருக்கும் முறையை மாற்றி, கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சை முறையையே நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் போக்குவரத்து மாணவர்கள் சேர்க்கை 60 நபர்கள் என்பதனை, 100 நபர்களாக உயர்த்த வேண்டுமாயும், அதற்கான போதிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாயும் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்படும் இலவச பஸ் பாஸ் நகரப் பேருந்துகளில் மட்டும் என்பதனை மாற்றி, அனைத்துப் பேருந்துகளிலும் அனுமதி அளிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறை, தொழிலாளர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண, கழகங்களை வாரியமாக மாற்றியமைத்திட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு ஊழியர்கள் நியமனத் தடைச் சட்டத்தால் ஏற்பட்ட காலியிடங்கள்-அரசு நியமித்த சுவாமிநாதன் கமிட்டியின்படி 38 வாகன

ஆய்வாளர்கள் காலியிடங்களில் 20 மட்டும் சென்ற அரசால் நிரப்பப்பட்டன. எஞ்சிய 18 இடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் இருக்கின்றன. எனவே, அவற்றையும் நிரப்ப ஆவன செய்யுமாறு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசுப் போக்குவரத்து வழித்தடங்களைத் தனியார்மயமாக்கக் கடந்த ஆட்சியில் வெளியிடப்பட்ட அரசிதழை ரத்துச் செய்து, தனியார்மயமாவதைத் தடுத்து நிறுத்த அரசு முன் வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் சுமார் 2,500 பொறியாளர்களுக்கு, மின்சாரப் பொறியாளர்களுக்கு வழங்கிய சம்பள உயர்வைப் போன்று உயர்த்தி வழங்க அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்டந்தோறும் மினி பஸ்கள் இயங்கி வருகின்றன. அது சீராக இயங்க வேண்டுமானால், ஒரு வழித்தடத்தில் செல்ல ஒன்று அல்லது இரண்டு பஸ்களை விட்டால் சேவை சிறப்பாக அமையும். ஆனால் இரண்டிற்கு மேற்பட்ட பஸ்களை ஒரே வழித்தடத்தில் இயக்கினால் பஸ் உரிமையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதால் மினி பஸ்களை இயக்குவதை அவர்கள் நிறுத்திவிடுகின்றார்கள். இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அதனை அரசு நிவர்த்தி செய்து, மினி பஸ்ஸை சீர் செய்து கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைத் தற்போதைய எண்ணிக்கையான 2,773–லிருந்து, குறைந்தது 5,000 பேருந்துகளாக அதிகரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பல்வேறு நாடுகளில் புதிதாக அமைக்கப்படும் விரைவுப் பேருந்து சென்னையில் அமைவதற்கான சாத்தியங்களை ஆய்வு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடிந்துவிட்டது.

மாநகரப் பேருந்துகள் மற்றும் ரயில் சேவைகளுக்கிடையே ஒருங்கிணைப்புச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

சாலையோர வாகன வசதிகளை முறைப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் போக்குவரத்துத் துறை வாகனங்கள், பேருந்து, ஆட்டோ



உள்ளிட்டவை முறைப்படி முறைப்படுத்தப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்டத்தின் பொதுப் பிரச்சினையாக இருக்கக்கூடியவை:— கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு அரசு சட்டக் கல்லூரி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

நெடுநாட்களாக மக்கள் நெருக்கம் காரணமாக, போக்குவரத்தில் அவதிப்பட்டு வருகின்ற மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஜோலார்பேட்டையிலிருந்து பெங்களூர், கிருஷ்ணகிரி வழியாகச் செல்ல ரயில் பாதை அமைத்துக் கொடுக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் மேகநாதன், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. த.அ. மேகநாதன்:** காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியின் கோரிக்கைகளாக, காவேரிப்பட்டினத்தில் ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு ஒரு சொகுசுப் பேருந்து இயக்கப்பட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிப்பட்டினத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு டவுன் பஸ் இன்றி, பொது மக்களும், பள்ளி மாணவ, மாணவிகளும் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள். அதனைப் போக்க புது டவுன் பஸ்களை இயக்க அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

1997–ல் தி.மு.க. அரசால் அறிமுகம் செய்யப்பட்ட மினி பஸ் வசதி கடந்த ஆட்சியில் சரியான முறையில் இயக்கப்படவில்லை. எனவே, அதனை இயக்க அரசு முன்வர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிப்பட்டினம் தொகுதியில் ராயக்கோட்டை பகுதியில் தக்காளி அதிகம் விளைகிறது. எனவே, அங்கு கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுக்க அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

ராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனித் தாலுகா உருவாக்க வேண்டுமாயும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கே.ஆர்.பி. அணையில் இருந்து திண்டல் ஏரிக்கு பாசனக் கால்வாய்கள் செல்கின்றன. அவற்றை இருமத்தூர் கிராமம் வரை நீடிக்கச் செய்தால் சுமார் 30 கிராம மக்கள் பயன் அடைவார்கள். அவற்றை நீடிக்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கே.ஆர்.பி. அணைக்கு மேல் தென்பெண்ணை ஆற்று அணை கட்டப்பட்டிருக்கிறது. பாசனக் கால்வாய்கள் அமைத்து தும்பளஅள்ளி அணை வரை நீடிக்கச் செய்தால், சுமார் 70 கிராம மக்கள் விவசாயம் செய்து பயன் அடைவார்கள். அதனால் அவற்றை அமைத்துக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிப்பட்டினம் தொகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பண்ணந்தூருக்கும், அரசம்பட்டிக்கும் இடையே பாலம் ஒன்று அமைத்து, 60 கிராம மக்கள் பயனடையக்கூடிய வகையில் அதனை அரசு முன்வந்து செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தி, பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

என் தொகுதியில் அகரம், தாமோதிரஅள்ளி... (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரொம்ப நேரமாக நிறையக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். குறைவாகக் கேளுங்கள்.

**திரு. த.அ. மேகநாதன்:** என் தொகுதியில் அகரம், தாமோதிரஅள்ளி, நெடுங்கல், மிட்டஅள்ளி ஆகிய கிராமங்களில் கால்நடை துணை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–35*

கே.ஆர்.பி. அணை மற்றும் பாரூர் ஏரியைத் தூர் வாரினால் அதிக அளவில் விவசாயம் செய்ய ஏதுவாக அமையும். எனவே, பொது மக்கள் பயனடையக்கூடிய வகையில் அந்தத் தூர் வாரும் திட்டத்தை



நிறைவேற்றிக் கொடுக்குமாறு தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பாளேகுளி ஏரியிலிருந்து பாசன வசதி பெறும்பொருட்டு, சந்தூர் ஏரியை இணைக்கும் கால்வாய் ஒன்று வெட்டினால், சுமார் 28 ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். 100 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அந்தக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றிட அரசை வலியுறுத்தி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. த.அ. மேகநாதன்:** இறுதியாக, பத்திரிகையாளர் நண்பர்களுக்காக ஒரு விண்ணப்பத்தை வைக்கிறேன். பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற bus pass குறிப்பிட்ட கழகத்தில் செல்ல மட்டும்தான் வழங்கப்படுகிறது. அதனை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும், அனைத்து ஊர்களுக்கும் செல்ல வழிவகை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, இங்கே பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு திருமதி ஜி. லதா.

***திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, வணக்கம். தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகம், பயணியர் சேவையில் சிறப்பான முறையில் தன்னுடைய பணியினைத் தற்போது நிறைவேற்றி வருகிறது. சென்ற ஐந்து ஆண்டு கால ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்களில் திட்டமிட்டுச் சீர்குலைவு வேலைகளைச் செய்ததால் கிராமப் பகுதிகளிலும், மற்ற பகுதிகளிலும் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 20 பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு தொகுதியில் 20 பேருந்துகள் என்றால், தமிழகம் முழுமையும் எவ்வளவு பேருந்துகள் என்று கணக்குப் போட்டால், அது எங்கேயோ சென்றுகொண்டிருக்கும். அந்த அடிப்படையில் தமிழகம் முழுமையும் நிறுத்தப்பட்டுள்ள எல்லாப் பேருந்துகளையும் மீண்டும் இயக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். தேவைக்கேற்ப புதிய வழித்தடங்களில் bus இயக்குவதை உறுதி செய்திடல் வேண்டும். இவை பொதுத் துறைகளிலேயே நீடிப்பதை உறுதி செய்திடல் வேண்டும். இலாப–நட்டம் பார்க்காமல், சேவை மனப்பான்மையுடன், சேவை எண்ணத்துடன் அவற்றை இயக்க வேண்டும்.

மலையைச் சார்ந்த பகுதிகளுக்குச் சென்று வருவதற்கேற்ற வகையில் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டும். பேருந்து நிலையங்களில் கழிப்பறை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர், இருக்கை வசதி தங்கும் இட வசதி ஆகியவற்றைச் சிறப்பான முறையில் செய்து தர வேண்டும்.

கிராமப்புறப் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இரவு நேர பஸ்களை முழுமையாக இயக்க வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தமிழக அரசு bus pass வழங்கியிருக்கிறது. ஆனால், பள்ளி, கல்லூரி நேரங்களில் அரசு bus-ஐத் தவிர்த்து தனியார் வண்டிகளும் வந்தால், மாணவர்கள் அதில் பயணம் செய்யக்கூடிய அளவில் அரசு ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக, கேரளா போன்ற மாநிலங்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய பேருந்துகளில் எதில் வேண்டுமானாலும் செல்லலாம் என்ற ஒரு முறை இருக்கிறது. அந்த முறையைத் தமிழக அரசு கடைப்பிடிக்க வேண்டும்.

போக்குவரத்துத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

சென்னை விமான நிலையம் நவீனப்படுத்தப்படுவதையும், விரிவாக்கம் செய்யப்படுவதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதே நேரத்தில், அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஏழையெளிய குடிசை வாழ் மக்களுக்கு எந்தவிதப் பாதிப்புமின்றி, குடிசைகளை அப்புறப்படுத்தாமல் இந்த விரிவாக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நாங்கள் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, வாரிசுதாரருக்கு வேலை, மாற்று வேலை ஆகியவற்றை மீண்டும் வழங்க வேண்டும். மேலும், வேலையில் இருக்கும்போது பக்கவாதம் போன்ற வியாதிகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பணியைத் தொடர்ந்து செய்ய முடியாத சூழ்நிலையில், வாரிசுதாரருக்கு வேலையை உறுதி செய்ய வேண்டும்.

வாகனங்களில் அதிக வேகம், குடி போதையில் வாகனங்களை ஓட்டுவதே விபத்திற்கு மிக முக்கியக் காரணங்கள் என்று கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. அதிவேக வாகனங்களைத் தடுத்து நிறுத்தி



தண்டனை வழங்குவதைப்போல, குடி போதையில் ஓட்டுபவர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக, இறப்பதற்கு இழப்பீட்டுத் தொகை தற்போது 10 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. அதை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். இவற்றைத் தவிர்க்கக்கூடிய விதத்தில் 1999 ஆம் ஆண்டிலேயே T.N.P.S.C. தேர்வு நடத்தப்பட்டு அந்தத் தேர்வில் வாகன ஆய்வாளர்களை நியமிப்பதாகச் சொல்லப்பட்டு, அது அப்படியே நிலுவையில் இருக்கிறது. அதை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துத் துறையில் 50 சதவிகிதம் தனியார்மய உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும். 2001 ஆம் ஆண்டு வேலைநிறுத்தத்திற்குரிய 17 நாள் சம்பளம் வழங்க வேண்டும். அதனோடு increment போன்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

மாநிலம் முழுவதும் 6,000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் பழுதடைந்த நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றை உடனடியாகச் சீர் செய்து புதுப்பித்து மீண்டும் புதிய பேருந்துகளாக இயக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-40

240 நாட்கள் பணி முடித்தவர்களுக்குப் பணி நிரந்தரம் என்பதனைச் செய்ய வேண்டும். நேர்தல் நடத்தி தொழிற்சங்க அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.

மினி பஸ்களைக் கழகங்களே ஏற்று நடத்த வேண்டும்.

அ.தி.மு.க. அரசால் variation என்ற பெயரில் தனியார் பேருந்துகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்ட timing-களை ரத்துச் செய்திடல் வேண்டும். போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்படும் டீசலுக்கான மாநில அரசின் வரியை ரத்துச் செய்ய வேண்டும்.

Tyre, tube, oil, grease, உதிரி பாகங்கள், இவை அனைத்தும் சென்ற ஆட்சியில் வெவ்வேறு நிறுவனங்களிடம் வாங்கப்பட்டன. தரம் குறைந்த பொருட்களாக இருந்ததனால், பேருந்துகள் முழுமையாகச் சீர்குலைக்கப்பட்டு இருந்தன. அவை இந்த ஆட்சியில் கைவிடப்பட்டு, தரமான நிறுவனத்திடம், அரசு நிறுவனத்திடம், அவற்றை வாங்குவதற்கான ஓர் உத்தரவாதத்தைச் செய்ய வேண்டும்.

I.O.C., Bharat Petroleum போன்ற மத்திய பொதுத் துறை நிறுவனங்களில் டீசல் ஆயிலை வாங்க வேண்டும். வெளிப்படையான மத்தியத்துவப்படுத்தப்பட்ட கொள்முதல் குழுவை வலுப்படுத்த வேண்டும்.

மாநிலம் முழுவதும் ஒரே போக்குவரத்துக் கழகமாக மாற்றி அமைப்பதன்மூலம் சிறப்பான சேவையை மக்களுக்கு அளிக்க முடியும்.

கோவை மாநகரத்தில் 304–ஏ என்ற சட்டம்; அதை மாற்றி 304–ன்கீழ் நடவடிக்கை என போக்குவரத்துத் தொழிலாளர்களை அச்சுறுத்தக்கூடிய ஒரு தன்மை காவல் நிலையங்களில் நடைமுறையில் இருக்கிறது. அரசு கூர்ந்து கவனித்து, அதைப் போக்க வேண்டும்.

தொழிலாளிகள் இறந்த குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம் என்பதனை மாற்றி, ரூ. 2 இலட்சமாக வழங்க வேண்டும். அதேபோல், மருத்துவ சிகிச்சைக்காகக் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நிதி, ரூ.1 இலட்சத்தை ரூ. 1.5 இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதனையும் கேட்டுக்கொள்கிறோம்.

சொந்த ஜாமீனில் வருவதை உத்தரவாதம் செய்ய வேண்டும் என்பதனையும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் என்பது எம்.ஜி.ஆர். காலத்திலேயே கொண்டு வரப்பட்ட ஒப்பந்தம். அவருக்குப் பிறகு மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தினார். சென்ற ஆட்சியில் அந்த ஒப்பந்தம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று இருந்தது. இதய தெய்வமான அந்த எம்.ஜி.ஆரின் கருத்தைக் கிடப்பில் போட்டது அந்த சர்க்கார். நண்பராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் என்பதனை நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

அது மட்டுமல்ல; சென்ற ஆட்சியில் நீதிமன்றத் தீர்ப்புகளை அரசு புறக்கணித்தது, நிர்வாகமும் புறக்கணித்தது. தொழிலாளர்களைப் பழி வாங்கக்கூடிய நோக்கத்தோடு, நீதிமன்ற முடிவுகள் அத்தனையும் கைவிடப்பட்டன. நீதிமன்றத்தின் வழியாக வந்த தீர்ப்புகளையும் முழுமையாக இந்த சர்க்கார், ஏற்று, அவற்றை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழகம் முழுமையும் இன்று ஆட்டோ சேவை என்பது ஒரு மகத்தான சேவையாக அமைந்து இருக்கிறது. இந்த ஆட்டோ



சேவைக்குத் தமிழக சர்க்கார், ஆட்டோ நல வாரியத்திற்குச் சிறப்பான முறையில் நிதி ஒதுக்கீடு செய்து, அதைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. 1996–ல் கைவிடப்பட்ட மீட்டர் சிஸ்டம் மீண்டும் கொண்டு வரப்படவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இவற்றைச் சீர் செய்ய மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழுக்களை அமைக்க வேண்டும். ஆட்டோக்களின்மீது போடப்படுகின்ற பசுமை வரியை ரத்துச் செய்ய வேண்டும். F.C.–க்கு ஆட்டோக்கள் செல்லும்போது, F.C. செய்யக்கூடிய இடத்தில் Insurance என்பது அங்கு உறுதி செய்யப்பட வேண்டும்.

*பிறபகல் 12–45*

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என்று இருக்கக்கூடிய பிரத்தியேகப் பிரச்சினைகளில், ஏற்கெனவே அவர்கள் கூட்டுறவு வங்கிகளில் தங்களுக்கு வீடு வாங்குவதற்காக P.F.–லிருந்து loan எடுத்து பிளாட்டுகள் வாங்கியிருக்கிறார்கள்— திண்டுக்கல், தையூர் போன்ற இடங்களில் வாங்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆட்சியின்போது, தையூரில் தலைமைச் செயலகம் கட்டுவதற்காக அந்த இடத்தை அப்படியே தடை போட்டு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். P.F.–ல் வாங்கப்பட்ட தொகைக்குப் போக்குவரத்துத் தொழிலாளர்கள், அதற்கான வட்டியைக் கட்டிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த இடத்தையும் கொடுக்கவில்லை, அந்தப் பணத்தையும் அவர்களிடம் திருப்பிக் கொடுக்காமல், இரண்டுமே கிடைக்காமல் ஏறத்தாழ 1,300 தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினையில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு இந்த விஷயத்தைக் கையில் எடுத்து, கூட்டுறவுச் சேவையில் அவர்கள் வீடு கட்டக்கூடிய திட்டத்திற்காக பணம் கட்டிய இடத்திற்கு அந்த இடங்களை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு செய்தி. இப்பொழுது தமிழ்நாடு முழுவதற்கும் பேருந்துகள் வாங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகத் தமிழகத்திலே, நமது தலைநகரமாக இருக்கிற சென்னை நகரத்திலே, 2,100 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மேலும், 200 பேருந்துகள் கூடுதலாக்கப்பட்டு, 2,300 ஆக உயர்த்தப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னை நகரத்திலே சுமார்

4,000–த்திலிருந்து 5,000 பேருந்துகள். விட்டால்கூட, அந்தத் தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் இருக்கிற காரணத்தினாலே, பக்கத்தில் இருக்கிற ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் சில தனிப் பேருந்துகள் இயக்கப்பட்டு, நெரிசலைத் தவிர்ப்பதற்கான சில முயற்சிகள் எடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே, அதைப் பற்றி இந்த அரசு சிந்தித்துச் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்க இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு, இறுதியாகப் பதில் சொல்லுகின்றபோது நான் விளக்கம் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை மானியக் கோரிக்கை — போக்குவரத்துத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாகப் பேருந்துகள் வாங்க அரசு ரூ. 100 கோடி ஒதுக்கியிருப்பதையும், மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் மற்றும் டீசல் உயர்வால் ஏற்பட்ட இழப்பு ஆகியவற்றை ஈடுகட்டுவதற்கான தொகையினைப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருப்பதையும் இம்மாமன்றத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதனை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். இருந்தாலும், போக்குவரத்துக் கழகங்களுக்குத் தற்போதுள்ள நிலையில் புதிய பஸ்கள் வாங்க அரசு ஒதுக்கியுள்ள தொகை போதாது. தமிழ்நாட்டில் 18,000 பஸ்களில் 9,000 வண்டிகளை மாற்ற வேண்டிய நிலை உள்ளது என்று அரசே தெரிவித்துள்ளது. சமூக நோக்கத்திற்காகச் செயல்படும் அரசுப் போக்குவரத்து கழகங்களைப் பாதுகாக்க அதிக நிதிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும், ஒவ்வோராண்டும் நிதிநிலை அறிக்கையில் போக்குவரத்துக் கழகங்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்காகப் பிரத்தியேக நிதியொதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நீர்வழிப் போக்குவரத்து—சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறும் இந்தக் காலகட்டத்தில், தமிழ்நாட்டில் சென்னை, பாண்டிச்சேரி, கடலூர், நாகை, தூத்துக்குடி, குளச்சல் போன்ற கடலோரக் கிழக்குப் பகுதிகள் கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பகுதிகளாகவும், ஒரு மாற்றுப் பயணத் திட்டமாகவும் இருப்பதால், கப்பலைப் பயன்படுத்தும்போது, எரிபொருள் மிச்சமாவதோடு, சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும். எனவே, கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகத்தில் உள்ள அலுவலக மேற்பார்வையாளர்கள், A.E., J.E. போன்றவர்களின் ஊதிய உயர்வு, ஒப்பந்தத்தின்மூலம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் அமைச்சுப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகள் தேசியமயமாக்கப்பட்டதில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. சென்னை விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கலை அரசே பொறுப்பேற்றுச் செயல்படுத்த வேண்டும். அந்தப் பகுதியிலுள்ள ஏழையெளியோர்களைப் பாதிக்காத வகையில் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரின் நெரிசலைப் போக்குவதற்காக, நகரில் 3,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவை போதாது. 4,000 பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஏழையெளிய மக்கள் பயன்படுத்தும் பேருந்துகளுக்குக் குறைவான கட்டணமும், நடுத்தர மக்கள், அரசு ஊழியர்கள் பயன்படுத்தும் பேருந்துகளுக்கு சொகுசுப் பேருந்துகளில் உள்ளதுபோன்ற கட்டணமும் என்கிற வகையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

தனியார் பேருந்துகள் புறப்படும் நேரத்திற்கும், அரசுப் பேருந்துகள் புறப்படும் நேரத்திற்கும் இடைவெளி ஒரு நிமிடம், இரண்டு நிமிடங்கள் என்று குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, தனியார் பேருந்துகளில் அதிகமான பயணிகள் பிரயாணம் செய்கிறார்கள். அரசுப் போக்குவரத்து பஸ்களில் குறைவான பயணிகள் பிரயாணம் செய்கிறார்கள். இதில் போக்குவரத்து நேரக் காப்பாளர்களிடம் ஏதோ குறைபாடு இருப்பதாகக் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் அதைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பஸ்கள் அ.தி.மு.க. ஆட்சியில் 50 சதவிகிதம் தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்து A.I.T.U.C. உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் நீதிமன்றத்திலும், வீதியிலும் போராடின. அவர்கள்மீது அ.தி.மு.க. அரசு வழக்குப் போட்டு, சென்னை உயர் நீதிமன்றத்திலே அது நிலுவையில் உள்ளது. அந்த வழக்கினைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. அரசு, கடந்த காலங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் என்று இருந்ததை, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று மாறுதல் செய்தது. அதை மாற்றி, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் என்ற முறையை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் 2000 ஆம் ஆண்டில் 20 சதவிகிதம் போனஸ் அறிவித்து வழங்கினார்கள். அதை எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்குப் போராட்டத்தில் ஈடுபட்டது. ஆனால் மீண்டும் 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. 8.33 சதவிகித போனஸ் அறிவித்தது. இதை எதிர்த்துப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் 17 நாட்கள் வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தினார்கள். பின்னர் பொது மக்கள் நலன் கருதி, போராட்டத்தைத் திரும்பப் பெற்றார்கள். ஆனால், அவர்களுக்கு அந்த நாட்களுக்குச் சம்பளம் இல்லை என்று அ.தி.மு.க. அரசு அறிவித்தது. எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கியதுபோல போராட்டக் காலத்தைப் பணிக் காலமாகக் கருதி ஊதியம் வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பணியாளர்களை அதிகப்படுத்த வேண்டும். தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர் விகிதம் 7.5 என்று இருந்தது. அ.தி.மு.க. ஆட்சி 6.5 என்று அதனைக் குறைத்தது. போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் செயல்திறன் உடையதாகவும், தனியாருக்கு ஈடுகொடுத்து இலாபம் ஈட்டவும் வேண்டுமென்றால், பணியாளர்கள் விகிதத்தை மீண்டும் 7.5 சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்கள் வாழ்நாள் பூராவும் நகரப் பேருந்துகளில் மட்டும் பயணம் மேற்கொள்ள அ.தி.மு.க.



ஆட்சியினரால் bus pass வழங்கப்பட்டது. இந்த மாற்றி, அனைத்து அரசுப் பேருந்துகளிலும் பயணம் செய்ய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கும் இலவச bus pass வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிகளில படிக்கும் மாணவர்களுக்கு, அவர்கள் புறப்படும் இடங்களிலிருந்து கல்லூரி செல்லும் வரை அந்த தூரத்தை நீட்டித்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி திருத்துறைப்பூண்டி, கிராமங்களைக் கொண்டதாகும். திருத்துறைப்பூண்டி நகரத்திலிருந்து சென்னை செல்லும் விரைவுப் பேருந்து பழைய பேருந்தாக உள்ளது. அதை மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டேன்; செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமங்களுக்கு வேண்டிய பஸ்களை விடவேண்டுமென்று கேட்டேன்; செய்து தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

மேலும், இராமேஸ்வரத்திலிருந்து சென்னை வரும் இராமேஸ்வரம் சேது எக்ஸ்பிரஸ் தற்போது பாதை விரிவாக்கத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, பயணிகள் சென்னை செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அங்கேயிருந்து இரண்டு பேருந்துகள்தான் வருகின்றன. கூடுதலாக ஒரு பேருந்தை இயக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆலங்குடி தொகுதியில் ஒரு பணிமனை தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றியினைக் கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

***திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தப் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் பேச, இந்தத் துறையிலே பணியாற்றிய எனக்கு

வாய்ப்பளித்தமைக்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

போக்குவரத்துத் துறை என்பது தலைவர் கலைஞருடைய "செல்லக் குழந்தை". கடந்த கால வரலாறுகள் பல பேருக்குத் தெரியாது. 1971 ஆம் ஆண்டு, தமிழக அரசு, பேருந்துகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று ஒரு கொள்கை முடிவு எடுத்து, அந்தக் கொள்கை முடிவின் அடிப்படையிலே, கோவையிலே A.B.T. மகாலிங்கம், மதுரையிலே T.V.S. ஐயங்கார், Raman & Raman Company, ஜெயவிலாஸ் போன்ற தனியார் கம்பெனிகளை எல்லாம் பொதுத் துறை நிறுவனங்களாக, இரவோடு இரவாக ஒரே நாளிலே அரசுக்குச் சொந்தமான பேருந்துகளாக மாற்றிய பெருமை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த வரலாறுகளெல்லாம் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற பல உறுப்பினர்களுக்குத் தெரியாமல்கூட இருக்கலாம்.

1955 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் என்ற சொற்ப சில பேருந்துகளே கொண்ட நிறுவனம் தமிழ்நாட்டிலே இயங்கிக்கொண்டிருந்தது. அன்றைக்குக் கிராமப் பகுதிகளுக்கெல்லாம் பேருந்துகளே இல்லாமல் இருந்தன. தனியார் துறைப் பேருந்துகள்தான் ஒன்றிரண்டு கிராமப் பகுதிகளுக்குச் சென்றுகொண்டிருந்தன. அவர்கள் கேட்கிற பணத்தைத்தான் அன்றைக்குக் கொடுத்தாக வேண்டிய சூழ்நிலை. கூரைகள்மீது ஏறிக்கொண்டு பயணம் செய்து, அந்தப் பயணத்தின்போது பயணிகள் கீழே விழுந்து மாண்டு போன வரலாறெல்லாம் உண்டு. மறைந்துவிட்ட மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்திய நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் வங்கிகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று கொள்கை முடிவு எடுத்தபோது, அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கொள்கை முடிவை ஆதரித்தது. அதேபோல, இந்தப் போக்குவரத்துக் கழகங்களையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு எடுத்தார்கள். தனியார் பேருந்து முதலாளிகள் எல்லாம் அந்த முடிவை எதிர்த்து, உயர் நீதிமன்றம் போனார்கள். உயர் நீதிமன்றத்திலே அந்த முதலாளிகளுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விட்டாரா என்று



சொன்னால், அந்த வழக்கினை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு போனார்கள். உச்ச நீதிமன்றத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டத்திற்குத் தலைவர் கலைஞருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்ததோடு மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் பார்த்துப் பாராட்டிய பாராட்டு—"இந்தத் திட்டம் ஒரு தொலைநோக்குத் திட்டம். இந்தத் திட்டம் இந்தியாவிலே வரவேற்கப்பட வேண்டிய ஒரு திட்டம்" என்று சொல்லி, அன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டிய பெருமை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாறெல்லாம் எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களுக்குத் தெரியுமா என்று சொன்னால், தெரியாது. தலைவர் கலைஞர் அவர்களுடைய இந்தப் பெருமைகளை எல்லாம் அழிக்க முடியுமா என்று முயற்சி செய்து, செய்து பார்த்தார்கள், அழிக்க முடியவில்லை.

நம்முடைய முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மிகவும் சாமர்த்தியமாகக் கொள்கை விளக்கப் புத்தகத்தைப் படிக்கிறபோது, 7 ஆம் பக்கத்தைப் பாருங்கள், 9 ஆம் பக்கத்தைப் பாருங்கள் என்று சொன்னார்கள். அவர் ஏனோ 8 ஆம் பக்கத்தைப் பார்க்க மறந்துவிட்டார். அந்த 8 ஆம் பக்கத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டம் மட்டுமல்ல, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் இருந்த காலத்திலே, போக்குவரத்துத் துறையிலே டீசலுக்கு மட்டும் தராமல் விட்டுச் சென்ற பணம் ரூ. 82.83 கோடி. உதிரி பாகங்கள் – spare parts வாங்கியவர்களுக்குத் தர வேண்டிய பணம் ரூ. 26.31 கோடி. விபத்து இழப்பீடாக நீதிமன்றங்களிலே தர வேண்டிய பணம் ரூ.119,27 கோடி. சட்ட ரீதியாகச் செலுத்தப்பட வேண்டிய P.F., Gratuity போன்ற, அந்தத் துறைக்குத் தர வேண்டிய பணம் ரூ.501 கோடி. அது மட்டுமல்ல; பணியாளர்கள் சிக்கன நாணயச் சங்கத்திற்காகத் தர வேண்டிய பணம் ரூ.51.78 கோடி. இப்படிக் கிட்டத்தட்ட ரூ.814 கோடியை இவர்கள் ஆட்சியிலே இன்றைக்குக் கடனாக வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். இதையெல்லாம் சாமர்த்தியமாக மறைத்துவிட்டார். 7 ஆம் பக்கத்தைப் பாருங்கள், 9 ஆம் பக்கத்தைப் பாருங்கள் என்றார். 8 ஆம் பக்கத்தை மட்டும் ஏன் பார்க்காமல் விட்டுப் போனார்? ரொம்ப சாமர்த்தியமாகப் பேசினார். இன்னும் ஒன்றையும் பேசினார். எங்கம்மா ஆட்சிக் காலத்திலே இலாபம், இலாபம் என்று சொன்னார்.

இவர்களுடைய அம்மா ஆட்சிக் காலத்திலே எப்படி இலாபத்தை ஈட்டினார்கள் என்று சொன்னால், 20% போனஸைக் கொடுத்தது தலைவர் கலைஞர் ஆட்சி. ஆனால், அன்றைக்கு இதே அம்மையார் என்ன சொன்னார் எனறு சொன்னால்,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், கடைசியிலே பேசுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** எங்கள் கலைஞர் ஆட்சியிலே இருக்கிறபோது 20 சதவிகிதம் போனஸ் அறிவித்தார். இதற்கு முன்னாள் முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? ஏன் 25 சதவிகிதம் அறிவிக்கவில்லை? நான் ஆட்சிக்கு வந்தால், 25 சதவிகிதம் போனஸ் கொடுக்கிறேன் என்று அன்றைக்கு ஊழியர்களைத் தூண்டிவிட்டு, போராட்டத்தை நடத்தியவர்தான் முன்னாள் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) 2001–ல் ஆட்சிக்கு வந்தார்கள். போக்குவரத்துத் கழகத் தொழிலாளர்கள் நம்பினார்கள். ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 25 சதவிகிதம் போனஸ் வரும், 25 சதவிகிதம் போனஸ் வரும் என்று நம்பினார்கள். ஆனால், 25 சதவிகிதம் போனஸ் தருவதற்குப் பதிலாக இவர்கள் செய்தது என்ன தெரியுமா? 25 சதவிகிதம் போனஸ் கேட்ட போக்குவரத்துத் தொழிலாளர்களையெல்லாம் சிறையிலே பிடித்து அடித்தார்கள். சிறையிலே பிடித்து அடித்ததோடு மட்டுமல்ல, மாண்புமிகு கலைஞர் கொடுத்த 20 சதவிகித போனஸையாவது கொடுத்திருக்கலாம். அதற்கு மாறாக, 8.33 சதவிகிதம் கொடுத்து, 4 ஆண்டு காலம் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுடைய வயிற்றிலே அடித்தவர்கள் இவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பேசுகிறார்கள், இலாபம், இலாபம் என்று சொல்லி.

பிற்பகல் 1–00

பணி நியமனத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து, போக்குவரத்துத் தொழிலாளிகளுடைய வயிற்றிலே அடித்தவர்கள் நீங்கள். பணி நியமனத் தடைச் சட்டம் யார் ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டது? அது மட்டுமல்ல, ஊதிய ஒப்பந்தமே போடப்படாத ஒரு வரலாறு உங்கள் ஆட்சியிலேதான் உண்டு. இலாபம் என்று சொல்லுகிற உங்களைக் கேட்கிறேன்; நான்காண்டு காலம் போனஸ் கொடுக்கவில்லை; ஊதிய ஒப்பந்தம் போடவில்லை; அது மட்டுமல்ல; புதிய பேருந்துகள் விடவில்லை. ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளையும் நிறுத்தினீர்கள். இதுதானே காரணம்? இலாபம், இலாபம் என்று சொல்கிறீர்களே, இதை விட



குப்பனும், சுப்பனும் அன்றைக்கு இருந்திருந்தால்கூட, இந்த இலாபத்தை ஈட்டியிருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கும் நீங்கள் நட்டம்தான் என்று கணக்குக் காட்டினீர்கள்.

இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். 1995 ஆம் ஆண்டு இவர்களுடைய ஆட்சியினுடைய கடைசிக் கட்டம். அந்தக் கடைசிக் கட்டத்திலே (குறுக்கீடு) இவர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னால், தனியார் துறைக்குச் சாதகமாக வழித் தடங்களையெல்லாம் நீட்டினார்கள். அது மட்டுமல்ல, additional singles கொடுத்தார்கள். வழித்தட நீட்டல், additional singles, என்ன சூழ்நிலையோ? ஒன்றும் தெரியவில்லை, நீட்டினார்கள். அதற்குப் பின்பு 1996–ல் எங்கள் தலைவர் ஆட்சிக்கு வந்தார்கள். தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, ஒரேயொரு உத்தரவு போட்டார். எவன், எவனுக்கு நீட்டித்து வழித்தடம் கொடுத்தீர்களோ, யார், யாருக்கு additional singles கொடுத்தீர்களோ, அத்தனையும் ரத்து என்று அறிவித்தார். அறிவித்ததற்குப் பின்பு வழக்கு மன்றத்திற்குப் போனார்கள். வழக்கு மன்றத்திலே அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தது. அன்றைக்கு யார் ஆட்சியிலே இருந்தார்கள்? நீங்கள்தான் ஆட்சியிலே இருந்தீர்கள். வழக்கு மன்றத்திலே தனியார் துறை முதலாளிகளுக்குத் தீர்ப்புகள் சாதகமாக வருகிறபோது, நீங்கள்தான் ஆட்சியிலே இருந்தீர்கள்.

நான் கேட்கிறேன் உங்களை. ஒரு பொதுத் துறையை அழிப்பதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையிலே, தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே ரத்துச் செய்யப்பட்ட அந்தப் பேருந்துகளை எல்லாம் மீண்டும் நீட்டித்துத் தந்தீர்களே, நியாயமா? பொதுத் துறையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்திருந்தால் — இந்தப் பொதுத் துறையைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணம் உங்களுக்கு இருந்திருந்தால், உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து ஏன் உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் போகவில்லை? ஏன் போகவில்லை? என்ன காரணம்? இன்னும் சொல்கிறேன், உயர் நீதிமன்றத்திற்குப் அப்பீலுக்குப் போன அதிகாரிகளைக்கூட மிரட்டியவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் நீதிமன்றத்திலே அப்பீலுக்குப் போன அதிகாரிகளையெல்லாம் மிரட்டியவர்கள் நீங்கள். நீங்கள் இங்கே போக்குவரத்துத் துறையைப் பற்றிப் பேதுவது என்பது விந்தையாக இருக்கிறது, விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

அது மட்டுமல்ல. போக்குவரத்துத் துறையிலே கொஞ்சம், நஞ்சமா பண்ணினீர்கள்? அலைக்கழித்தார்கள் பாருங்கள், போக்குவரத்துத் தொழிலாளிக்குச் செய்த கொடுமை இருக்கிறது பாருங்கள், அந்தக் கொடுமைதான் உங்களை இந்த அளவிற்கு நிறுத்தியிருக்கிறது என்பதை மட்டும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். சாதாரணக் கொடுமையல்ல. அந்தக் கொடுமை கொஞ்சம், நஞ்சமான கொடுமையல்ல. அவ்வளவு பெரிய கொடுமை.

தலைவர் கலைஞர் அவர்களே, உங்களாலே ஆரம்பிக்கப்பட்ட ஒரு பொதுத் துறை நிறுவனம்; அந்தப் பொதுத் துறை நிறுவனத்தை அழிப்பதற்கு முற்பட்டவர்கள் இவர்கள். அதை ஏலம் விடுவதற்கு முற்பட்டவர்கள் இவர்கள். ஏலம் விடுவதற்கு முற்பட்ட இவர்களை எதிர்த்து அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் நடத்தினார்களே ஒரு வீரம் செறிந்த போராட்டம், அந்தப் போராட்டத்தின் காரணமாகக் கிட்டத்தட்ட 1,500 தொழிலாளர்களை இவர்கள் ஆட்சியில்தான் டிஸ்மிஸ் செய்தார்கள். டிஸ்மிஸ் செய்யப்பட்ட அந்தச் சூழ்நிலையில்தான் மாண்புமிகு நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்தவுடனே, 954 பேருக்கு மீண்டும் முதல் தவணையாக வேலைவாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களே, தொழிலாளர் சமுதாயம் உங்களுக்கு காலமெல்லாம் நன்றிக் கடன்பட்ட சமுதாயமாக இருக்கும்.

4 ஆண்டு காலமாகத் தொழிலாளர் விரோத ஆட்சி நடத்தியவர்கள், போனஸ் இல்லை, போனஸ் இல்லை என்று சொன்னவர்கள், 8.33 தான், 8.33 தான் என்று சொன்னவர்கள், தேர்தல் வரும்போது அந்த 5–வது ஆண்டு மட்டும் 20 பர்செண்ட் என்றார்கள். 4 வருடம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் அலைந்தார்கள் பாருங்கள். கோர்ட், கோர்ட்டாக அலைந்தார்கள். கோர்ட், கோர்ட்டாக நடையாக நடந்தார்கள். 4 வருட காலமாக வழக்கை வாபஸ் வாங்குகிறோம் என்று சொல்லவில்லை. ஐந்தாவது வருடம் election வந்தது என்றவுடனே, கேஸை வாபஸ் வாங்குகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் வாபஸ் வாங்கினார்களா என்றால், கடைசி வரைக்கும் வாபஸ் வாங்கவே இல்லை.

*பிற்பகல் 1–05*

மாண்புமிகு கழகத் தலைவர் கலைஞர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள், பொதுத் துறையைக் காக்க வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்திற்காகப்



போராடிய ஊழியர்கள் பழி வாங்கப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்கள்மீது ஏராளமான வழக்குகள் போட்டு, நீதிமன்றங்களுக்கு அலைக்கழிக்கப்பட்டார்கள். ஆகவே, அந்த வழக்குகளை எல்லாம் நீங்கள் தாயுள்ளத்தோடு திரும்பப் பெற வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல; தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வரும்போதுதான், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய முகங்களிலெல்லாம் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வருகிறபோதுதான் போக்குவரத்துத் தொழிலாளர்கள் நிம்மதியோடு நிற்கிறார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட அந்தப் பொய் வழக்குகளை எல்லாம் நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு, 17 நாட்கள் நடந்த வீரம் செறிந்த அந்தப் போராட்ட நாட்களை நீங்கள் பணி நாட்களாக மாற்றித் தர வேண்டும் என்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நண்பர்களே! போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே நம்முடைய தலைவர் கலைஞர் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஒரேயொரு அறிவிப்புத்தான் கொடுத்தார்கள். தனியார் துறைக்கு விற்போம் என்று சொன்னீர்கள். தலைவர் கலைஞர் அன்றைக்கு முதல்வராக இல்லை, எதிர்க்கட்சித் தலைவராகத்தான் இருந்தார். தலைவர் கலைஞர் அவர்கள், நீங்கள் தனியாருக்கு விற்றாலும், மீண்டும் நாங்கள் அரசுடைமையாக்குவோம் என்று ஒரேயொரு வரிதான் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் உங்களால் இதை அமல்படுத்த முடியவில்லை? எதிர்க்கட்சியினுடைய கொறடா போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்திருக்கிறார்; இன்றைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். இந்த அவையிலே இல்லாத திரு. பொன்னையனும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். இந்த மூன்று பேர் காலத்திலே இவ்வளவு கொடுமை நடந்ததில்லை. உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் இந்தப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளிகளுக்குப் பாதிப்பு (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் அமைச்சர், இந்த அவையிலே உறுப்பினராக இருக்கிற உங்களுடைய காலத்தில்தான் இந்தப் போக்குவரத்துத் துறையைச் சின்னாபின்னப்படுத்தினீர்கள். போக்குவரத்துத் துறைத் தொழிலாளிகளை நீங்கள் கங்கணம் கட்டிக்

கொண்டு கற்பழிப்பதுபோல, அந்தப் போக்குவரத்துத் துறையை நாசமாக்கியவர் நீங்கள். இன்றைக்கு என்னமோ பேசுகிறீர்கள், அம்மா ஆட்சிக் காலத்திலே, எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலே என்று சொல்லி. இன்றைக்குப் பேசுவது எந்த வகையிலே நியாயம்? என்று கேட்கிறேன். *(கூச்சல்–குழப்பம்)* ஆக, அன்புக்குரிய நண்பர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே....*(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்லலாம். *(கூச்சல்–குழப்பம்)* கடைசியில் அமைச்சருடைய பதிலில் சொல்லலாம். *(கூச்சல்–குழப்பம்)* மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். *(கூச்சல்–குழப்பம்)* திரு. செங்குட்டுவன் *(கூச்சல்–குழப்பம்)*

**திரு. டி. செங்குட்டுவன்:** தேசிய விருதுகள் எல்லாம் பெற்றது என்று சொன்னார். ஆனால், *(குறுக்கீடுகள்)* 1997 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே நான் உட்கார்ந்து இருக்கிறபொழுது... *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள் எல்லோரும். *(கூச்சல்–குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* முதலில் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியில் நீங்கள் கேள்வி கேட்கலாம். உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* மாண்புமிகு உறுப்பினர் செங்குட்டுவன், சீக்கிரம் உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதே எதிர்க்கட்சி வரிசையில் நான் அன்றைய முன்னாள் அமைச்சராக உட்கார்ந்திருந்தபொழுது, இங்கேயிருந்த முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி குரங்கு கையிலே கிடைத்த பூமாலையைப்போல போக்குவரத்துத் துறையைச் சிதறடித்தார் என்று சொன்னார்களே, இந்த அமைச்சர் செய்ததை இவர் சுட்டிக்காட்டினால் ஏன் இவருக்கு இவ்வளவு கோபம் வருகிறது? *(குறுக்கீடுகள்)* ஏன் கோபம் வருகிறது? *(குறுக்கீடுகள்)* ஏன் கோபம் வருகிறது? அன்று முதலமைச்சராக இருந்தவர்கள், இதே கலைஞரைப் பற்றி, எங்களைப் பற்றி, குரங்கு கையிலே கிடைத்த பூமாலைபோல என்று விமர்சனம் செய்த சட்டமன்றம், இந்தச் சட்டமன்றம். அப்படியெல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர் பேசவில்லையே! உங்கள் ஆட்சியிலே சீரழிந்ததை எடுத்துச் சொன்னால், ஏன் கோபம் வருகிறது? *(கூச்சல்–குழப்பம்)* ஏன் கோபம் வருகிறது? *(கூச்சல்–குழப்பம்)* அமைதியாகக் கேளுங்கள், நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம் அல்லவா? நாங்கள் கேட்டோம் அல்லவா? இன்றைக்கு அமைதியாகக் கேளுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் செங்குட்டுவன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இதைத்தான் அமைச்சர் சொன்னார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)* செங்குட்டுவன், பேசுங்கள். *(குறுக்கீடு)* எல்லோரும் உட்காருங்கள்.

*பிற்பகல் 1-10*

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய நீண்ட நாள் கனவாக இருந்த பென்ஷன் திட்டம் என்பது, எங்களுடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே, *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்களுடைய முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர், இன்றைக்கு நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அண்ணன் பொன்முடி காலத்தில்தான் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னாலே 300 ரூபாய் பென்ஷன் கொடுத்தார்கள். 300 ரூபாய் பென்ஷனைக் கொடுத்துவிட்டு, நாடு முழுவதும் சொன்னார்கள், பார், பென்ஷன் கொடுத்த தாயே வாழ்க! 300 ரூபாய் பென்ஷனுக்கே இந்தக்

கூச்சல் என்றால்! எங்களுடைய தானைத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு 4,000 ரூபாய் வரையிலே பென்ஷனைக் கொடுத்து, உயர்த்திக் காட்டியவர். (மேசையைத் தட்டும் ஒலி) 300 ரூபாய் பென்ஷனுக்கே இந்தச் சத்தம் போட்டீர்களே, நாங்கள் ரூ. 4,000 பென்ஷனுக்கு எவ்வளவு சத்தம் போட வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) 4,000 ரூபாய் பென்ஷனுக்கு எவ்வளவு சத்தம் போட வேண்டும்? அது மட்டும் இல்லை.

300 ரூபாய் பென்ஷன் மட்டுமல்ல. தலைவர் கலைஞர் அவர்கள் 4,000 ரூபாய் பென்ஷனாகத் தந்தார்கள். ஆனால் 5 வருடங்களிலே இவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? கடைசியிலே 3 வருடங்களாக அந்த பென்ஷனையே நிறுத்திவிட்டார்கள். கொடுத்தார்களா என்று கேளுங்கள். கொடுக்கவில்லை. தி.மு.க. அரசு கொடுத்த பென்ஷனும் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த அளவிற்குத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் புறக்கணித்தது கடந்த கால அரசு.

போக்குவரத்துக் கழகத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட வழக்குகள், அவர்கள் வேலைநிறுத்தத்திலே கலந்துகொண்ட நாட்கள் அத்தனையையும், தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிற இந்த நேரத்திலே தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து, அரசு ஊழியர்களுக்கு எப்படிப் பணி நாட்களாகக் கொடுத்தீர்களோ, அதைப்போல போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றுகின்ற அந்தப் பணியாளர்களுக்கும், அந்த நாட்களைப் பணி நாட்களாக வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பெரும்பான்மையாக இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளர்கள் இன்றைக்குத் தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களே, இவர்கள் ஆட்சியிலே அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கம் என்று சொன்னால், என்னவென்றே தெரியாது. எங்களுடைய தொ.மு.ச. பேரவைத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் செ. குப்புசாமி அவர்களைக் கொண்டு போய் நான்காவது வரிசையிலே உட்கார வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். முதல் வரிசையிலே யார் தெரியுமா? முதல் வரிசையிலே, ஆள் இல்லாத தொழிற்சங்கம். முதல் வரிசையிலே ஆள் இல்லாத தொழிற்சங்கத்தை உட்கார வைத்துவிட்டு,



பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட தொ.மு.ச. தொழிற்சங்கத்தையும், C.I.T.U., A.I.T.U.C., தொழிற்சங்கங்களையும் கொண்டு போய் நான்காவது வரிசையிலே உட்கார வைத்துக் கேவலப்படுத்தியவர்கள் இவர்கள்.

தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, நான் உங்களுக்குப் பணிவோடு கோரிக்கையிலே, ஏதோ இந்தப் போக்குவரத்துத் துறை மானியக் என்றும், ஏதோ அவர் எங்களுக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் மட்டுந்தான் எல்லா விவரமும் தெரிந்தவர் குறுக்கிட்டேன். மாண்புமிகு பேசிக்கொண்டிருந்தார். அப்போதே நான் தரவில்லை. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி பிரச்சினையே கிடையாது. நட்டம் வந்தது, இலாபம் வந்தது என்ற அவர்கள் சொல்வது, அவர்கள் ஆட்சிக் காலத்திலே இலாபம் என்று நட்டம்தான். அது சரியாக இல்லை. அவர்கள் ஆட்சிக் காலத்திலும் கொஞ்சம் ஆகவே, நட்டத்தை வேண்டுமானால் கிடையாது. அந்த குறைத்திருக்கலாமேயொழிய, இலாபம் நிச்சயமாகக் நான் சொன்ன நட்டம் குறைக்கப்பட்டதும் எப்படி என்று சொன்னால், அந்த இழப்புகள், அந்தப் போக்குவரத்துத் தொழிலாளிகளுக்கு ஏற்பட்ட ஊதிய உயர்வு ஏற்பட்ட அந்த போனஸ் இழப்பு, ஏற்பட்ட அந்த இதுபோன்ற இல்லாமல் போனது, அதேபோன்று கட்டண உயர்வு, பணிவோடு காரணங்களினால்தான் ஏற்பட்டது என்பதை நான் மானியக் தெரிவித்துக்கொண்டு இந்தப் போக்குவரத்துத் துறை கோரிக்கையினை நான் மனதார, என்னுடைய உளந்தொட்டு, வரவேற்று முடித்துக்கொள்கிறேன் நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உறுப்பினர் பேசட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Not allowed. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்திருந்த, இன்றும் அமர்ந்திருக்கின்ற இந்த மாமன்றத்தில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் (குறுக்கீடுகள்) கடைசியாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் கன்னிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** நான் காலடி எடுத்து வைப்பதற்குக் காரணமான (குறுக்கீடுகள்) எம் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜாண் ஜேக்கப், 5 நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு திரு. ஜாண் ஜேக்கப், 5 நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடித்த பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், குமரி மாவட்டத்திலுள்ள ஏழு தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டுமென்று அயராது பாடுபட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் வருகை தந்து, என்னை வெற்றி பெறச் செய்த, மக்கள் தளபதி, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். இடையிலே எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். பின்னர் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, என் கன்னிப் பேச்சில் போக்குவரத்துக் கழக மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு கருத்துகளைப் பதிய வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். மற்ற உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? உறுப்பினர் பேச்சை முடிக்கட்டும். (குறுக்கீடு) அடுத்து உங்கள் கட்சி



உறுப்பினர் பேசப் போகிறார்; உங்கள் கட்சி உறுப்பினர் அடுத்தாற்போல் பேசுவதற்கு அனுமதி இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். அடுத்து உங்கள் கட்சி உறுப்பினர் பேசுவதற்கு அனுமதி இருக்கிறது. உட்காருங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** நிதிநிலை அறிக்கை என்பதில் நிறைகளும், குறைகளும் கலந்திருப்பது இயல்பு. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் குறைகளைத் தேடித் தேடியே கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. நிறைகளைப் பற்றிப் பேசுகின்றபோது, தேர்தல் அறிக்கையிலேயே தாங்கள் குறிப்பிட்டவற்றை எல்லாம் நிறைவேற்ற முடியாது எனப் பிறர் விமர்சித்த அனைத்தையும் நிறைவேற்றி, மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கச் செய்துள்ளீர்கள். அதற்குக் கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாகவும், காங்கிரஸ் பேரியக்கம் சார்பாகவும், என் சார்பாகவும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன்; பேசுவதற்கு நேரம் தருகிறேன்.

பிற்பகல் 1–15

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்பது அரசின் கருத்து. இது உண்மை அல்ல. வருமானம் குறைந்திருக்கிறது என்பதுதான் உண்மை. 1972 ஆம் ஆண்டு அரசு தனியார் போக்குவரத்துக் கழகங்களையெல்லாம் அரசுடைமையாக்கியது. அன்று 30 கோடி ரூபாய் முதலீட்டில் 2,000 பேருந்துகளாகத் தொடங்கப்பட்ட போக்குவரத்துக் கழகம், இன்று 17,129 பேருந்துகளாக 4,500 கோடி ரூபாய் நிலையான சொத்துக்களுடன் உள்ளது. போக்குவரத்துக் கழகங்களுக்கு நல்ல இலாபம் வந்தபோதெல்லாம் கூடுதல் வரி என்ற பெயரில், Surcharge, Motor Vehicle Tax என அரசு அதை எடுத்துக்கொண்டது. தனியார் பேருந்துகளெல்லாம் நல்ல இலாபத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழக அரசு 3,000 சிற்றுந்துகளுக்கு அனுமதி அளிக்க முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது. ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற சிற்றுந்துகள் அவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட தடங்களில் செல்லவில்லை. அரசுப் பேருந்துகள் செல்லும் தடத்திலேயே 90 சதவீதம் சிற்றுந்துகளும் இயங்குகின்றன. அதுவும் “யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே”

என்பதுபோல, அரசுப் பேருந்துகளுக்கு முன்னால் சிற்றுந்துகளும் சென்றுகொண்டிருக்கின்றன. இது வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் தெரிந்த உண்மை. இதனால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. சிற்றுந்துகளின் நோக்கமும் மறுக்கப்படுகிறது. ஆகவே, சிற்றுந்துகளை அரசுப் போககுவரத்துக் கழகங்கள்மூலமாக இயக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். 3,000 சிற்றுந்துகளை அரசு இயக்குவதன் மூலம் 18,000 பேருக்கு வேலைவாய்ப்பும் அளிக்க முடியும். தேவைப்படும் வழித்தடங்களில் போதிய சிற்றுந்துகளை இயக்கி, இதனை மக்கள் தேவையாகக் கருதி, போக்குவரத்தை விரிவடையச் செய்யுமாறும், இதன்மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் வேலையற்ற அனைவருக்கும் பதிவு மூப்பு அடிப்படையில் அரசு வேலை வழங்கவும் வேண்டுகிறேன்.

அரசுப் பேருந்துகளில் 60 சதவீதம் கட்டுப்படியாகாத வழித்தடங்களில் இயங்குகின்றன. காரணம், இலாப நோக்கில்லாத சமூக சேவையாகவே இயங்குகிறது. ஏழை, நடுத்தர, வசதி படைத்தவர்கள், தியாகிகள், மாணவர்கள், முன்னாள்–இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், ஊனமுற்றவர்கள் என கோடிக்கும் மேற்பட்டோர் தினமும் பயணிக்கும் நிறுவனம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் என்பதற்கு இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது.

ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக அரசுப் போக்குவரத்துக் கழகம் மரணப் போராட்டத்தில் உள்ளது. போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் தேவையான பணியாளர்கள் இல்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் ஒன்றே கால் இலட்சம் பணியாளர்கள் இருந்தனர். இன்று ஐந்தில் ஒரு பகுதி பணியாளர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர். சுமார் 20,000 பணியிடங்கள் காலியாக உள்ளதாகக் கூறப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், மதுரை கோட்டம் III–ல் மட்டும் 500 ஓட்டுநர்கள், 500 நடத்துநர்கள், 250 தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டுநர் மற்றும் நடத்துனர் இல்லாமல், இங்குள்ள வழித்தடங்களில் தினமும் 100 பேருந்துகள் முடக்கம் பெறுகின்றன. நிர்வாக அதிகாரிகளைக் கேட்டால் இந்த உண்மைகளை ஒத்துக்கொள்வதில்லை. பணிமனைகளில் தினமும் ஓட வேண்டிய கிலோ மீட்டர்களை எப்படிச் சமாளிக்கிறார்கள் என்றால், இரண்டு அல்லது மூன்று நகரப் பேருந்துகளை நிறுத்திவிட்டு, மதுரைக்கோ,



திண்டுக்கல்லுக்கோ அல்லது திருப்பூருக்கோ பேருந்துகளை இயக்குகிறார்கள். ஒரு பணிமனையில் ஒரு நாள் விட வேண்டிய கிலோ மீட்டர்களை இந்த முறையில் ஓரளவு சரிக்கட்டுகிறார்கள். ஆனால் கிராம மக்கள் தங்கள் ஊருக்குப் போகும் பேருந்து இல்லாமல் அவதிப்படுகிறார்கள். குமரி மாவட்டத்தில், அதுவும் கிள்ளியூர் தொகுதியில், மக்கள் தொகைக்கேற்ப பேருந்துகள் மிகவும் குறைவு. அதிகாரிகளின் தவறான நடவடிக்கையால் கிராமப்புறங்களுக்குப் பேருந்துகள் செல்லவில்லை. இதில் ஓர் ஆறுதலான விஷயம், இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் கொஞ்சம் அடக்கி வாசிக்கின்றனர். போக்குவரத்துக் கழகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

டீசல் சிக்கனம் பற்றி ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மதுரை கோட்டம் III வருடந்தோறும் டீசல் சிக்கனத்தில் விருது பெற்று வருகின்றது. உண்மை நிலவரத்தைச் சொன்னால், அது விருதுக்கே அவமானம். Target–லிருந்து 2 லிட்டர் அதிகரித்தால் Memo. அது ஓட்டுநர்களின் கண்ணீரில் பெறப்படும் விருது. எடுத்துக்காட்டாக, நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் வரை உள்ள வழித்தடம், மதுரை கோட்டம் III–க்கு இதயம் போன்றது. மிக அதிக வருமானம் ஈட்டக்கூடியது. தமிழக ஓட்டுநர்கள் இத்தடத்தில்கூட neutral–ல் வண்டியை இயக்குகிறார்கள். அதிகாரிகள் ஓட்டுநர்களிடம் காட்டக்கூடிய டீசல் சிக்கனக் கொடூரத்தின் காரணமாக, ஓட்டுநர்கள் உருட்டுநர்களாகி விட்டார்கள். பயணிகளோ இந்த வழித்தடத்தில் இயங்கும் கேரள அரசுப் பேருந்துகளில் விரும்பிப் பயணிக்கிறார்கள். சுமார் 50–க்கும் மேற்பட்ட தமிழக மற்றும் கேரளப் பேருந்துகள் இயங்கும் இந்த வழித்தடத்தில், கேரளப் பேருந்துகளைவிடத் தமிழகப் பேருந்துகள் 1,000 ரூபாய்க்கும் குறைவான வருவாயை ஈட்டுகின்றன. 5 லிட்டர் டீசலுக்காக 1,000 ரூபாய் இழப்பு தினமும் நடந்துகொண்டிருக்கிறது. இப்படி அனைத்துத் தடங்களிலும் பார்த்தால் இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜேக்கப், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** கடந்த ஆட்சியில் கிள்ளியூர் தொகுதியில் மட்டும் 28 பேருந்து வழிததடங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு வருகிறேன். தமிழகத்திலுள்ள

பேருந்துகள் அனைத்தும் அரசுப் பேருந்துகள். அதிகாரிகள் அனைவரும் அரசு அதிகாரிகள். ஆனால் தொழிலாளர்கள், company சட்ட திட்டங்களுக்குட்பட்ட தொழிலாளர்களே ஆவர். நான் வேண்டி, விரும்பிக் கேட்பதெல்லாம், தொழிலாளர்களையும் அரசு ஊழியர்களாக்க வேண்டும். குறைந்தபட்சம் மின் வாரியத் தொழிலாளர்கள் அந்தஸ்துக்காவது உயர்த்த வேண்டும்.

தொழிலாளர்கள் மனநிறைவு பெறும் வகையில், முந்தைய ஆட்சியில் நடந்த போராட்டக் காலத்தை, விடுப்பாக ஏற்று, ரத்துச் செய்யப்பட்ட ஊதியத்தை வழங்க வேண்டும் என்று, தமிழகத்தில் பணிபுரியும் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–20*

எத்தனையோ சலுகைகளைக் கேட்டும், கேட்காமலும் வாரி வழங்கும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். தமிழ்நாட்டில் பேருந்துகளில், மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் கிடையாது. ஆனால், அண்டை மாநிலமான கேரளாவில் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் கிடையாது. ஆகவே, நவம்பர் 14 ஆம் நாள், நேரு பிறந்த தினமான குழந்தைகள் தினத்தன்று, ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் இல்லையென்று அறிவிக்க வேண்டுமென்று முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்களில் பணிபுரியும் பகுதிநேரப் பத்திரிகையாளர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்குமாறு வேண்டுகிறேன்.

அரசு விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவயில், Air bus–ல் கூட்டம் அதிகமாகவே உள்ளது. Air bus–ன் குறைந்த கட்டணமும், சிறந்த சேவையும் இதற்குக் காரணமாகும். அரசு விரைவுப் பேருந்துகள் அனைத்தையும் Air bus–களாக மாற்றினால் நல்ல வருமானம் கிடைப்பதுடன், அகில இந்திய அளவில் தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துகள் பெருமையாகப் பேசப்படும்.

எனது தொகுதியின் மையப் பகுதியான, கருங்கல்லிலிருந்து சென்னை, வேளாங்கண்ணி, திருப்பதி போன்ற முக்கிய நகரங்களுக்கு விரைவுப் பேருந்து வசதி செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன்.



குமரி மாவட்டத்தில், நாகர்கோவிலுக்கு அடுத்தபடியாகப் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி மார்த்தாண்டம். ஆனால், இங்குள்ள பேருந்து நிலையம் சீரழிந்து, பொது மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் இல்லை. எனவே, பொது மக்களுக்குப் பயன்தரக்கூடிய வகையில், இப்பேருந்து நிலையத்தைச் சீரமைத்து, அனைத்துப் பேருந்துகளும், மார்த்தாண்டம் பேருந்து நிலையம் வந்து செல்ல, நவீனக் கட்டமைப்பு வசதிகள் செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்**: முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இன்னும் உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்**: போக்குவரத்து என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றதாகும். எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்காமல், அரசே ஏற்று இயக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தொகுதி சம்பந்தமாக சில கோரிக்கைகள்: குழித்துறை ஆற்றில் வீணாகக் கடலில் சென்று சேரும் தண்ணீரைத் தடுக்க, குமரித் தந்தை, மார்ஷல் நேசமணி அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டு, 1955 ஆம் ஆண்டு திருவாங்கூர் சமஸ்தான முதல்வர், பனம்பள்ளி கோவிந்த மேனன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 1960 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டம், விளாத்துறை நீரேற்றுத் திட்டம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இத்திட்டம் செயலிழந்து காணப்படுகிறது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டால், சுமார் 10,000 ஏக்கர் ஆயக்கட்டு நிலம் பாசன வசதி பெறுவது மட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கில் வறண்ட திறந்தவெளிக் கிணறுகள் குடிநீருக்கு உபயோகப்படும். குளங்களில் நீரின் அளவு அதிகரித்து, நெல், வாழை, தென்னை, காய்கறி விவசாயிகளும் பயன்பெறுவார்கள். இவ்வாறு செய்தால், 'சோழ நாடு சோறுடைத்து' என்பதுபோல, 'கிள்ளியூர் தொகுதியும் சோறுடைத்து' எனப் பெயர் பெறும். அந்தப் பணியை இவ்வரசு மேற்கொண்டால், சோழ மன்னன் கரிகால் சோழனைப்போலத் தமிழக முதல்வர் கலைஞரின் பெயர் வரலாற்றில் இடம் பெறும் என்பது நிச்சயம்.

சட்டமன்றத் தொகுதி வரிசையில், கிள்ளியூர் தொகுதி 234-வது இடத்தில் இருப்பதுபோல், வளர்ச்சிப் பணியிலும் கிள்ளியூர் தொகுதி பின்தங்கியே உள்ளது. இத்தொகுதியில் வாழும் 50 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்கள். இவர்கள் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள். இவர்கள் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துகின்ற வகையில், இந்த மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை இல்லாதது மிகவும் வேதனைக்குரியது. ஆனால், இங்குதான் இந்தியாவிலேயே தரம் மிகுந்த ரப்பர் உற்பத்தியாகின்றது. எனவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், எனது கிள்ளியூர் தொகுதியில் ஒரு ரப்பர் தொழிற்சாலை அமைத்துத் தரப் பணிவுடன் வேண்டுகிறேன்.

Pepsi, Coca cola போன்ற குளிர்பானங்களை குஜராத், கேரளா போன்ற மாநிலங்களில் பள்ளி, கல்லூரி வளாகங்களில் விற்பதைத் தடை செய்ததுபோல நம் மாநிலத்திலும் அவற்றைத் தடை செய்யவேண்டும். அதற்குப் பதிலாக, நமது நாட்டில் உற்பத்தியாகும் இளநீர், பதநீர் முதலான ஊட்டச்சத்து மிக்க பானங்களைப் பருகுமாறு ஊக்கப்படுத்த வேண்டும். மாநில அரசு இத்தகைய பானங்களை உற்பத்தி செய்து, விநியோகிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம் தென்னை சாகுபடி அதிகம் உள்ள மாவட்டம். எனவே, இளநீரை உற்பத்தி செய்து பதப்படுத்தும் தொழிற்சாலை (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். ஒன்றைக் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால் பல்லாயிரக்கணக்கான தென்னை விவசாயிகள் மிகவும் பயன் அடைவார்கள். எனவே, எனது தொகுதியை வளர்ச்சியடையச் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கல்வி கற்றோர் நிறைந்த மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். ஆனால், இம்மாவட்டத்தின் பெருமையைச் சொல்லக்கூடிய அளவில், அரசுத் தொழிற்சாலைகளோ, அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய தொழில நிறுவனங்களோ கிடையாது. இம்மாவட்டத்தில் கல்வி கற்றோருக்கு



வேலைவாய்ப்பு என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறதே தவிர, வேலைவாய்ப்பு அதிகரிக்கவில்லை. தமிழக அரசு முதுநிலைப் பட்டதாரிகளை மாநிலப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்வதைப்போல, இதர படிப்புகள் முடித்து, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோரையும், மாநிலப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்து வேலை வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கனிவோடு வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, வேறு ஏதாவது இருந்தால், அமைச்சரிடம் கொடுத்து விடுங்கள்; அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், அனைவருக்கும் நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி. (குறுக்கீடுகள்) என்னங்க? முடித்ததற்குப் பிறகு நீங்கள் கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்களேன். இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) அவர் உரையை முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்றால், முதலில் debate-ஐ முடித்துக்கொள்வோம்; அதற்குப் பிறகு question-ஐப் பார்க்கலாம். திரு. பாலாஜி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

• **திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர் துறை சம்பந்தப்பட்டவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே debate-ஐ முடித்துக்கொள்வோம். அதற்குப் பிறகு question-ஐப் பார்க்கலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி, right. இவர் நேரத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அப்புறம் உங்களுடைய உறுப்பினருடைய நேரத்தில்தான் போய்விடும். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்; வாய்ப்புக் கொடுப்பதும், கொடுக்காததும் நான் எடுக்கவேண்டிய முடிவு.

உட்காருங்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலாஜி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலாஜி, பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) அவர் விரைவிலே முடிக்கமாட்டாருங்க. உங்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) திரு. பாலாஜி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வே. செந்தில் பாலாஜி:** அவருக்கு ஒரு நிமிடம் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலாஜி, நீங்கள் recommend செய்யாதீர்கள்; நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலாஜி, பேசுங்கள். இல்லையென்றால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மணி 1–26 ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், 1–26 ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பொதுவாக விளக்கம் கேட்கின்ற உறுப்பினர்கள், அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு விளக்கம் கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அமைச்சரும் பதில் சொல்லி, இந்த அவை ஒவ்வொரு நாளும் 2¼, 2½ மணிக்குத்தான் முடிகிறது. எனவே தயவுசெய்து, உறுப்பினர்களுடைய நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையினுடைய நேரத்தை வீணடிக்காதீர்கள். உடனே பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னங்க? 10 நிமிடங்கள் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், யாரைப் பேசச் சொல்ல வேண்டுமென்று பட்டியல் கொடுத்திருக்கிறீர்கள்; அவர்களைத்தான் பேசச் சொல்வேன். நீங்கள், 'அவரைப் பேசச் சொல்லுங்கள்; இவரைப் பேசச் சொல்லுங்கள்' என்று சொன்னால், நான் கேட்கமாட்டேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லமாட்டேன். திரு. பாலாஜி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய ஒரு மரபை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். உறுபபினர்கள் பேசிய பேச்சைக் குறித்து, உறுப்பினர்களேகூட, அது முறை விரோதமாக இருந்தால், இந்தச சட்டமன்ற மரபை மீறியிருந்தால் சொல்லலாமே தவிர, பேசியவர்களை விளக்கம் கேட்க முடியாது. விளக்கம் கேட்டாலும், உறுப்பினர்கள் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அவரவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அமைச்சர் பேசுகிறபோது, அந்தப் பேச்சை வைத்து எந்த விளக்கம் வேண்டுமானாலும் கேட்கலாம்; நேரம் இடம் தருகிற வரையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலாஜி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) சரி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலாஜி, நீங்கள் பேசவில்லை என்று முடிவெடுத்து விடுவேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு அவை முன்னவர் நல்ல கருத்தைச் சொல்லியிருக்கின்றார். அந்தக் கருத்தின் அடிப்படையில், யாராவது உறுப்பினர்கள் எழுந்து பேசினால், மாண்புமிகு அமைச்சர்கள் எழுந்து பதில் சொன்னால், நாங்கள் ஒன்றும் சொல்லப் போவதில்லை. வரிசையாக எல்லோரும் எழுந்து நின்று பதில் சொல்கின்ற ஒரு சூழ்நிலை, ஒரு முன்னுதாரணத்தை ஏற்கெனவே நீங்கள்தான் உருவாக்கி வைத்திருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் இடையிலே பேசக்கூடாது. அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இனிமேலாவது உறுப்பினர்கள் பேசுகின்றபோது இடைமறித்து அமைச்சர்கள் பேசினால், மற்ற உறுப்பினர்கள் அமைதி காத்தால், சபை நல்ல முறையில் நடப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே மாதிரி ஒரு சின்ன வேண்டுகோள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுந்து நிற்கும்போது... (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பதில் சொல்லிப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்; அமைச்சர்கள்தான் பதில் சொல்வார்கள். விளக்கங்களை அவர்கள்தான் தர முடியும். உறுப்பினர் பேச்சை வைத்து யாரும் பிரச்சினை எழுப்புவதற்கு இந்த அவையில் இடமில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலாஜி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம், ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்துக் கையை நீட்டி ஏதோ பேசினார்.)*

பார்த்தீர்களா நீங்கள்? எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் உறுப்பினரைப் பார்த்தீர்கள் அல்லவா? இதை முதலில் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உறுப்பினர்களை உங்களுடைய control-க்குள், (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும், கொறடாவிற்கும் நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்களுடைய கட்சி உறுப்பினர்களை உங்களுடைய கட்டுப்பாட்டிலே முதலில் வைத்துக்கொள்ளுங்கள். திரு. பாலாஜி, நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 1–30*

பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா கண்ட பாரதத் தாய், ஏழை மக்களின் எழுச்சிமிகு எங்கள் தாய், அன்னமிட்ட அன்புத் தாய், சேவை மனம் கொண்ட செந்தமிழ்த் தாய், சந்தியா தாய் பெற்றெடுத்த எங்கள் தங்கத் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். ஆறரைக் கோடித் தமிழக மக்களின் நெஞ்செல்லாம் குடிகொண்ட எங்களின் இதய தெய்வம், ஒரு கோடித் தொண்டர்களில் கடைக்கோடித் தொண்டனான கரூர் மாவட்டம், மண்மங்கலம் கிராமம், ராமேசுவரப்பட்டி எனும் கிராமத்திலே சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னையும், கரூர் ஒன்றியக் குழு உறுப்பினர்,



மாவட்ட மாணவர் அணி இணைச் செயலாளர், மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் என்பதோடு மட்டுமல்லாமல், கரூர் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிடும் வாய்ப்பினையும் வழங்கி, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சட்டமன்றத்திலே பேசும் வாய்ப்பினை வழங்கிய, அனுதினமும் நான் வணங்கும் எங்கள் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

கரூர் சட்டமன்றத் தொகுதியிலே இரட்டை இலைச் சின்னத்திலே வெற்றியினைத் தந்து மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பினை வழங்கிய கரூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், தேர்தலிலே பணியாற்றிய கூட்டணிக் கட்சியினருக்கும், நண்பர்களுக்கும், வாக்களித்த தாய்மார்களுக்கும், என் சார்ந்த இளைஞர்களுக்கும், மாணவ, மாணவியருக்கும் என் மனமார்ந்த நன்றியினை இந்த அவையிலே பதியக் கடமைப்பட்டுள்ளேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்றார் வள்ளுவர். உலக அரசியல் வரலாற்றிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு எந்தத் தலைவராலும் நினைக்கக்கூட முடியாத திட்டத்தைச் செயல்படுத்தி, ஓர் ஆண்டில் மட்டும் 19,595 மனித உயிர்களைக் காப்பாற்றியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விபத்துக்குள்ளாகிக் குற்றுயிரும், குலையுயிருமாய் உயிருக்குப் போராடி, காப்பாற்றுங்கள் என்று அலறுவதற்குள் அவர்கள் உயிர் காக்க, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் அனைத்திலும், ஏற்றவாறு 50 கிலோ மீட்டர் இடைவெளியில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் அவசர விபத்து சிகிச்சை மையமாகும். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இத்திட்டத்தினை முன்னோடித் திட்டமாக ஏற்றுக்கொண்டு, மற்ற மாநிலங்களெல்லாம் செயல்படுத்தினார்கள் என்பதனை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

பொழியும் மழையாய், உருகும் மெழுகாய், ஒன்றாய்ச் சேர்ந்தோர் உயிரில் எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலே ஆதி திராவிட மகளிர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட ரூபாய் 25,000 மானியத்துடன், ரூ. 80,000 வங்கிக் கடனுடன் வழங்கி ஆட்டோ வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த அவையிலே பதிவு செய்கிறேன். ஏழை, எளிய ஆட்டோ ஓட்டுநர்கள் வாழ்வில் ஒளியேற்றிட, கருணை

உள்ளத்தோடும், புகை பனிதனுக்குப் பகை என்பதால் மாசுக் கட்டுப்பாட்டை மனதில் கொண்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ. 25,000 மானியத்துடன்கூடிய L.P. Gas ஆட்டோ ரிக்ஷாக்களை வங்கிக் கடன் உதவியுடன் வழங்கிட உத்தரவிட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த அவையில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இத்திட்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது என்பதற்காகத் தடைப்படுத்தாமல் தாமதப்படுத்தாமல் தொடர்ந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேணடும்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கிவிட்டீர்களா? ஆட்டோ வழங்கியாகிவிட்டதா? ஆட்டோ வழங்குவதாக அறிவித்தீர்கள். (குறுக்கீடுகள்)

***திரு. ஞா. செந்தமிழன்:** உறுப்பினர் கன்னிப் பேச்சுப் பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. செந்தமிழன், இங்கே பார்த்துப் பேச வேண்டும். அமைச்சரைப் பார்த்து நீங்கள் நேராகப் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள் நீங்கள். திரு. செந்தில் பாலாஜி, தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த உன்னதமான திட்டத்திற்கு, 1,200 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு proceedings order வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கன்னிப் பேச்சில் இடையூறு செய்ய வேண்டுமென்ற எண்ணம் அல்ல. தவறான தகவலைத் தருகிறார். 5,000 ஆட்டோக்கள் 25,000 ரூபாய் மானியத்திலே தருவதாக அவர்களுடைய ஆட்சியிலே சொல்லி, ஒரே நாளில், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே அந்த மனுக்களைப் பெற்று, அப்படிப் பெற்ற காரணத்தால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் தடையாணை பெற்று, நீதிமன்றத்திலே என்ன சொன்னார்கள் என்றால், நீங்கள் பொது மக்களிடமிருந்து மனுவைப் பெறுங்கள் என்று சொல்லி, ஒரே நாளிலே 13,500 மனுக்களைப் பெற்று, ஏற்கெனவே பெற்ற மனுக்கள்



5,000, ஆக 18,500 மனுக்கள் இருக்கின்றன. இன்னும் நிலுவையில் இருக்கிறது நீதிமன்றத்தில். யாருக்கும் அது வழங்கப்படவில்லை. 1,200 பேருக்கு proceedings-ம் தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தில் பாலாஜி, பேசுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் ஒரு முக்கியமான கருத்தைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். போக்குவரத்துத் துறை என்பது இன்று தமிழகத்திலே அமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. போக்குவரத்துத் துறை செயல்படாமல், அந்தத் துறை திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், போக்குவரத்துப் பணியாளர்களுக்குப் பணி ஒதுக்கீடு செய்வது திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம் என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, பணி மாறுதல் என்பதையும் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம்தான் செய்து வருகிறது. இந்தத் துறை மொத்தத்தில் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய குறை இருந்தது. என்ன குறை என்றால், கடந்த ஐந்தாண்டு காலம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெரும்பான்மையில்லாத தொழிற்சங்கத் தலைவர்கள், முழு அளவில் போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிகளைக் கட்டுப்படுத்தினார்கள். பல பேர் வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்கினார்கள். அவற்றை மாற்றுவதற்குத் தொ.மு.ச. தொழிற்சங்கம் அப்பொழுதே போராடியது. அதனுடைய தொடர்ச்சியாக, தொ.மு.ச. சொல்வதைக் கேட்க வேண்டிய

நிலைமை இன்றையதினம் நிர்வாகிகளுக்கு ஏற்பட்டிருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம் சொல்வதைக் கேட்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது என்று அமைச்சர் கூறுவது, நான் கூறிய கருத்திற்கும், இதற்கும் வித்தியாசம் எதுவும் இல்லை என்பதை இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முறையாகப் பேசுவது எல்லாமே பதிவாகும். "பதிவு செய்ய விரும்புகிறேன், பதிவு செய்ய விரும்புகிறேன்" என்று சொல்ல வேண்டாம். சீக்கிரம் பேசி முடியுங்கள். விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவாயில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் உங்கள் காலத்திலே அது எப்படி நடந்தது தெரியுமா? நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) யார்? நாங்கள் ஒன்றும் ஒத்துக்கொள்ளாமல் இல்லையே? மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கையில் குறுக்கிடாதீர்கள். பேசாமல் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வள்ளுவர் கோட்டம் அருகிலே ஓர் உண்ணாவிரதப் போராட்டத்திலே இருந்தார்கள். அப்போது அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட காரணத்தால், ஒரு தொழிலாளி பஸ்ஸிலிருந்து இறங்கி, வண்டியை எப்படிச் செலுத்துவது என்று, conductor இறங்கிப் பார்க்கிறார். அப்படி இறங்கிப் பார்த்த ஒரே காரணத்திற்காக, நான்காண்டு காலம் அந்த conductor-ஐ வேலையைவிட்டு நீக்கி, அந்தக் குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்தியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இது எந்தக் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று நான் கேட்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் depot-விலே பணி செய்தவர் சில நாட்களுக்கு முன்பு கும்பகோணம் depot-விற்குப் பணி மாற்றம் செய்யப்பட்டு, அவர் தினமும் கரூரிலிருந்து ஐந்து மணி நேரம் பயணம் செய்து, பணியமரக்கூடிய சூழ் நிலையில், அங்கு அவர் சென்றவுடன், அன்று அவருக்குப் பணி வழங்கப்படுவதில்லை. சென்று நாளை வா என்ற நிலை உருவாகிறது என்பதை இந்த அவையில் கூறிக்கொள்கிறேன்.

பணி ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு pension வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட Pension Fund Trust-க்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசையும், வருமான வரித் துறையையும் பல முறை வலியுறுத்தியும், சிறிதும் கவனம் செலுத்தப்படவில்லை. மத்தியில் கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், மற்றக் கூட்டணிக் கட்சிகள். இந்த Pension Fund Trust-க்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளித்தால் மட்டுமே இந்தத் திட்டம் தொடரப்படும் என்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த அவையில் கூறிக்கொள்கிறேன்.

சென்னை நகரப் பொறுத்தவரை, மூன்று முக்கியப் பிரச்சினைகளைக் கொண்ட நகரம் ஆகும். ஒன்று, குடிநீர்ப் பிரச்சினை. இரண்டு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. மூன்று, போக்குவரத்து நெரிசல். நாட்டிலே மழை இல்லை. நதிகளிலே நீர் இல்லை. ஏரிகளிலே நீர் இருப்பு இல்லை. ஆனால், எங்கள் அம்மா அவர்கள் ஆட்சியில் குடிநீர்ப் பஞ்சமே இருந்ததில்லை. காரணம், புதிய வீராணம் திட்டம் தந்து, சென்னை மக்களின் குடிநீர்த் தாகம் தீர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். கந்து வட்டி, கட்டப் பஞ்சாயத்து, கள்ளச் சாராயம், கொலை, கொள்ளை என்ற கலாச்சாரத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த நாட்டு மக்கள் பாராட்டியதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இன்றோ, முதல்வரின் துணைவியார் வீட்டு அருகே நடந்த கொள்ளை இந்த ஆட்சியரின் சாதனை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் எழுதி வைத்திருப்பதை அமைச்சரிடம் கொடுங்கள். அவர் எல்லாவற்றையும் செய்துவிடுவார்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுங்கள், கொடுங்கள். எழுதியதை வாசிக்க வேண்டாம். எழுதி வைத்திருப்பதை அமைச்சரிடம் கொடுங்கள், செய்து தருவார். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வரின் துணைவியார் வீட்டருகே கொள்ளை நடந்ததாகச் சொல்கிறார். என்னவோ, இவரே போய் அங்கே கொள்ளையடித்ததைப்போலச் சொல்கிறார்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** நான் கொள்ளையடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுதி வைத்து வாசிக்கிறீர்கள். அதை அமைச்சரிடம் கொடுங்கள். செய்து தருவார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவாதம் நடைபெறுகிறபொழுது, மானியத்தின்மீது அந்த விவாதத்திலே எந்த உறுப்பினர் பேசினாலும், எவ்வளவு நேரம் பேசுவது என்று அனுமதிப்பது அவைத் தலைவருடைய தனி உரிமை. ஆகவே, அவர் இப்பொழுது முடிக்க வேண்டும் என்றால், அது அவைத் தலைவருடைய உரிமை. இரண்டாவது, மானியக் கோரிக்கையினுடைய விவாதத்தை எப்பொழுது முடித்து வாக்கெடுப்பது என்பது அவைத் தலைவர் தீர்மானிப்பது. ஆகவே, அதற்கு இடையூறாக வேண்டுமென்றே நேரத்தை எடுத்துக்கொண்டால், பேசுகிறவர்களுடைய பேச்சை நிறுத்துவதற்கும், அமைச்சரை பதில் சொல்லச் சொல்வதற்கும் அவைத் தலைவருக்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.



**திரு. வே. செந்தில் பாலாஜி:** சீக்கிரம் முடித்து விடுகின்றேன். சென்னை போக்குவரத்து அலுவலகங்களில் மட்டும் நாள் ஒன்றுக்கு 600 வாகனங்கள் பதிவாகின்றன. போக்குவரத்து நெரிசல் என்பது நாம் அனைவரும் தினம், தினம் பார்ப்பது. ஆனால், சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மதிநுட்பத்தாலே, தெளிந்த நிர்வாகத்தாலே, சீரிய திறனாலே, தொலைநோக்குப் பார்வையாலே, சென்னை மக்களுக்காக உருவானதுதான் மோனோ ரயில் திட்டம். தேர்தல் என்றால், கிராமங்கள் வேண்டாம். நகரங்கள்தான் வேண்டும். பாதுகாப்பான இடம்தான், அதுவும் சென்னை மாநகரம்தான் மிகவும் பாதுகாப்பான இடம் என்று, போட்டியிடும் தொகுதிகளைத் தேர்வு செய்தவர்களின் கனவுக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து வரலாறு படைத்திட்ட, வரலாற்றின் புதிய தடங்கள் வாழும் இலக்கியமே! எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மக்களுக்கு மிக முக்கியத் தேவையான மூன்றில், குடிநீர், சட்டம் ஒழுங்கு ஆகிய இரண்டில் வெற்றி கண்டுவிட்டார். எங்கே மூன்றாவது பிரச்சினையாக உள்ள போக்குவரத்து நெரிசலை மோனோ ரயில் திட்டம்மூலம் போக்கி, சென்னை மக்களின் ஒட்டுமொத்த ஆதரவினையும் பெற்றுவிடுவாரோ என்ற குறுகிய மனப்பான்மையோடும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மோனோ ரயில், திட்டத்தை மாற்றி மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்த நினைக்காமல், மோனோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டு, நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதிகளில் சென்னையும் ஒன்றாகும் என்ற நிலையில், பூமியைத் தோண்டி சுரங்கப் பாதை அமைத்து, பூமிக்கு அடியில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படுமேயானால் பயணிகளுக்குப் பாதுகாப்பு இருக்காது; சுற்றுச்சூழல் மாசுபடும். மிகவும் அகலமான சாலைகள் தேவை. ஒரு கிலோ மீட்டருக்கு 250 கோடி ரூபாய் செலவாகும். பணிகள் முடிவு பெற 15 ஆண்டுகள் ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டமான மோனோ ரயில் திட்டத்திற்குப் பூமியைத் தோண்டி, சுரங்கப் பாதை அமைக்கவேண்டியது இல்லை. பணிகள் நடைபெறும்போது போக்குவரத்து பாதிப்பும் ஏற்படாது; சுற்றுச்சூழல் மாசுபடாது. பயணிகளுக்கும் பாதுகாப்பானது. ஒரு கிலோ மீட்டருக்கு ஆகக்கூடிய செலவு வெறும் 50 கோடி ரூபாய்தான். இத்திட்டத்தின்மூலம் முதல் கட்டமாக 1½ ஆண்டுகளில் இத்திட்டம் தொடங்கி, இறுதிக் கட்டமாக 5 ஆண்டுகளில் இத்திட்டம் முடிவு பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எல்லாம் அப்படியே ஏற்கெனவே பேசிவிட்டார்கள். புதிதாக ஏதாவது பாயின்ட் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வே. செந்தில் பாலாஜி:** புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு முறை வலியுறுத்தியுள்ளார்கள். மோனோ ரயில் திட்டம் ரத்துச் செய்யப்படுவது என்பது சென்னை மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமையாகும்.

ஒரு நாடு வளம் பெறவும், உயர் நிலை அடைந்திடவும், தாங்கள் பிறந்த பொன்னாடு மேன்மையடைந்திடவும், தங்களது இரத்தத்தை வியர்வைத் துளிகளாக்கி நல் உழைப்பை நல்குபவர்கள் தொழிலாளர்கள். புது உலகை உருவாக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் தொழிலாளர்கள். இத்தகைய தொழிலாளர்களுக்கும், குடும்பங்களுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையிலும், அவர்களது பிள்ளைகள் கல்வி பெற்றிடவும், வாழ்க்கை உயர்ந்திடவும், 1984 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 21–ல் காணப்படும், ஈரோட்டில் உள்ள சாலைப் போக்குவரத்துக் கல்லூரி ஆகும். உண்ணாமல், உறங்காமல் உழைக்கும் வர்க்கத்திற்குரிய தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டதுதான் பெருந்துறை மருத்துவக் கல்லூரி, குரோம்பேட்டை, பர்கூர் மற்றும் திருநெல்வேலி தொழில்நுட்பப் பயிலகங்கள்.

தொழிலாளர்களது குடும்ப நலனில் அக்கறை கொண்டவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த அவையிலே பதிய விரும்புகிறேன். ஆனால், அரசின் கொள்கை விளக்கக் குறிப்பிலே தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்கு எந்தவிதப் புதிய திட்டங்களும் இல்லை என்பதனை இந்த அவையில் பதியக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். இப்போது மணி 1–44. 1–30–க்கு ஆரம்பித்தீர்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு வருகிறேன். கரூர், வெங்கமேடு மேம்பாலப் பணிகள் பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இரண்டு மாதங்களுக்கு முன்பு கரூர் வந்த தேசிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், 10 நாட்களில் இந்தப் பணிகள் தொடங்கப்பெறும் என்று தெரிவித்தார். ஆனால், இன்று வரை எந்த முன்னேற்றமும் இல்லை. மாநில, மத்திய அரசுகள் 3 மாத காலத்திற்குள் கரூர், வெங்கமேடு ரயில்வே மேம்பாலப் பணியினை முடித்து, பொது மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து விட வேண்டும்.



பிற்பகல் 1–45

உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த விவசாயிகளின் விடிவெள்ளி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கரூர் சட்டமன்றத் தொகுதி நொய்யல் ஆற்றில் குகை வழிப் பாதை அமைக்கும் பணிக்குப் பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆகையால், நொய்யல் ஆற்றில் குகை வழிப் பாதை அமைக்கும் பணியை விரைந்து முடிக்க விவசாயிகள் வற்புறுத்துகின்றனர்.

கரூர் நகரம் டெக்ஸ்டைல் நகரமாகும். ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 3,000 கோடி அளவிற்குத் துணி ஏற்றுமதி செய்கின்றனர். ஆகையால், கரூரில் நவீனத் தொழில்நுட்பத்துடன்கூடிய டெக்ஸ்டைல் டிசைனிங் சென்டர், டெக்ஸ்டைல் ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பகம், டெக்ஸ்டைல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மையம், டெக்ஸ்டைல் டிரெயினிங் சென்டர், டெக்ஸ்டைல் டையிங் பயிற்சி மையம் உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, 3,000 கோடி ரூபாய் அளவிற்கு, கரூர் நகரம் வர்த்தகத்தை ஈட்டி வருகிறது. கரூர் நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி ஆகிய நகராட்சிகளை உள்ளடக்கி, மாநகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். 1-30-க்கு ஆரம்பித்து 1-45 ஆகிவிட்டது.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** ஒரேயொரு நிமிடம். இனாம் கரூர் நகராட்சி, வெங்கமேட்டில் காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் கொடுத்துவிடுங்கள் என்று சொல்கிறேன் அல்லவா?

**திரு. வே. செந்தில் பாலாஜி:** அமராவதி ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுக்கும் காலங்களில் விவசாயத்திற்காக நீரைச் சேமிக்க வேண்டிய சணப்பிரட்டி, பாலராஜபுரம் அருகே தடுப்பணை அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எத்தனையோ இலவச மின்சாரத் திட்டங்களை இந்த அவையிலே கூறினீர்கள். கரூர் சட்டமன்றத் தொகுதி உள்ளடக்கிய 7 விவசாயச் சங்கங்கள், வெள்ளியம்பாளையம் சிறு, குறு விவசாயச் சங்கங்கள், காவிரி நீரேற்றுப் பாசனம், வேட்டமங்கலம் விவசாயிகள் சிறு, குறு நீரேற்றுப் பாசனம், புங்கோடை சிறு, குறு நீரேற்றுப் பாசனம், ஓலப்பாளையம் விவசாயிகள் நீரேற்றுப் பாசனம், புகளூர் நதி நீரேற்றுப் பாசனம் கூட்டுறவுச் சங்கம், ஓரத்தைத் திட்டம், புஞ்சைப் புகளூர் திட்டம், கடையனூர் திட்டம் ஆகிய திட்டங்கள் 15 ஆண்டுகளுக்கு முன்பு உயர் மின் அழுத்தத் திட்டத்தின்கீழ், மின் இணைப்புப் பெற்று யூனிட் ஒன்றிற்கு 50 பைசா வீதம் செலுத்தி வருகிறார்கள். மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 1,642. மொத்த விவசாய நிலங்கள் 3,209 ஏக்கர். இத்தகைய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 18 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** கரூர் சட்டமன்றத் தொகுதியில், கரூர் நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி ஆகிய மூன்று நகராட்சிகளுக்கும், காந்தி கிராமப் பகுதிக்கும் முறையே தனித்தனியே, வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பிற்கு நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. காரணம், 10 ஆண்டுகள் கழித்து, கரூர் தொகுதியில் இரட்டை இலைச் சின்னத்திலே போட்டியிட்டு வெற்றி பெற்று, இங்கே சட்மன்றத்தில் பேசக்கூடிய வாய்ப்பைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு மனமார்ந்த, பாதம் பணிந்து நன்றியைக் கூறிக்கொண்டு, பேச அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரணக் குக்கிராமத்திலே விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, ஒரு முறை ஒன்றியப் பெருந்தலைவராகவும், 5 முறை சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டு, மூன்று முறை அமைச்சராகவும் ஆக்கி, என்மீது நம்பிக்கை வைத்து, என்னை ஆளாக்கி, உருவாக்கிய எங்களது குடும்பத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, என்னுடைய உரையை நான் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய வெற்றிக்கும், அரசியலில் எனக்கு ஆதரவாகவும், என்றைக்கும் பாடுபட்டு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி இயக்கங்களைச் சேர்ந்த அத்தனை பேருக்கும், இயக்கத் தோழர்களுக்கும், திருச்சி–2–வது தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் போக்குவரத்து மிக இன்றியமையாத பங்கு வகிக்கிறது என்பது அடிப்படையான உண்மையாக அமைந்திருந்தும், போக்குவரத்துத் துறை என்றும் சிறப்புடன் செயலாற்ற உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–50

பொதுவாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின்கீழ் 1 இலட்சத்து 10 ஆயிரம் பணியாளர்களைக் கொண்டு 15 ஆயிரத்து 571 வழித்தடங்களும்—பேருந்துகளும், 1,558 உபரிப் பேருந்துகளும், ஆக மொத்தம் 17,129 பேருந்துகளைக் கொண்டு, மக்கள் வசதிக்காக இயங்கி வருகின்றன. இதில் நாள் ஒன்றுக்கு இந்தப் பேருந்துகள் 67.37 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. நாள் ஒன்றுக்குத் தமிழ்நாட்டில் 1 கோடியே 76 இலட்சம் பயணிகள் இந்தப் பேருந்துகளிலே பயணம் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே, 1996 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய

ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலத்தில் புதிய பேருந்துகளாக 10,206 பேருந்துகள் வாங்கி இயக்கப்பட்டு, அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தபோது, அவர்கள் 5 ஆண்டு காலத்தில் வெறும் 5,600 பேருந்துகள்தான் வாங்கிய காரணத்தால், ஆண்டாண்டு கழிவு செய்யப்படக்கூடிய பேருந்துகள் கழிவு செய்யப்படாமல் இருந்ததால், இன்றையதினத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, கழிக்க வேண்டிய பேருந்துகள் 9,500 இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த கால ஆட்சியிலே தனியார் பேருந்துகள், 30 ஆண்டு காலம், 40 ஆண்டு காலம் கிராமப் பகுதிகளிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் நீதிமன்ற ஆணையைப் பெற்று நகர்ப்புறங்களுக்கு வந்துவிட்ட காரணத்தால், அந்த வழித்தடங்களிலே, கிராமப்புறங்களிலே மக்களுக்குத் தேவையான பேருந்து வசதிகள் இல்லாமல் இருந்திருக்கின்றன. இப்போதும் அந்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதிகளிலே பேருந்து விடவேண்டுமென்று வேணடுகோள் வைத்த பிறகு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு முன்னுரிமை வழங்கி, அத்தனை இடங்களிலும் நமது அரசுப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று இந்தத் துறைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு, போக்குவரத்துக் கழகங்கள் தேவையான புதிய வழித்தடங்களைத் துவக்கி வருகின்றன இப்பொழுது.

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடந்த காலத்தில் அளித்ததுபோல, 2 புதிய வழித்தடங்களை நாங்கள் துவக்க வேணடுமென்று கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், 2 மட்டுமல்ல, தங்கள் பகுதிகளில் எவ்வளவு தேவை என்றாலும், அந்தப் பகுதிகளில் எல்லாம் புதிய பேருந்துகள் இந்தத் துறையின் சார்பாக இயக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலக அளவிலே பெட்ரோலியப் பொருட்கள் விலை ஏறியிருந்தாலுங்கூட, தொடர்ந்து தேர்தல் நேரத்தில் சொன்னதுபோல, அதே விலைக்கு, கிலோ மீட்டருக்கு அதிகம் பணம் ஏற்றாமல்—பணமே ஏற்றாமல், தொடர்ந்து இந்தத் துறையே ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. அப்படி நடத்துகின்ற காரணத்தால் பெரிய அளவிலே நஷ்டம் வந்து சிரமப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டபோதுதான் நம்முடைய முதலமைச்சர் நமக்குக் கைகொடுக்க வந்தார்கள். அரசாங்கப் பணத்தை,



ரூபாய் 100 கோடியை அளித்து, இன்னும் 1,000 பேருந்துகள் வாங்கவும், அதேபோல, மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குகின்ற அந்தத் தொகைக்காக ரூ. 75 கோடியை உடனடியாகத் தந்தும், டீசல் விலை ஏறி விட்டது, அதற்கு ஈடாக ரூ. 25 கோடியை, ஆக மொத்தம் 200 கோடி ரூபாயை இந்தத் துறைக்கு இன்றைக்கு அரசின் சார்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு 8-வது வகுப்பு வரை இலவச பஸ் பாஸ் அறிவித்தது கலைஞர். அப்போது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 10 ஆம் வகுப்பு வரை படிப்பவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டு, அதுவும் அனுமதிக்கப்பட்டு, மீண்டும ஆட்சிக்கு வந்தபோது 12 ஆம் வகுப்பு வரை இலவச பஸ் பாஸ் அளித்தது நம்முடைய கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணி இப்போது தொடர்ந்து, கடந்த முறை 21 இலட்சம் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ்களும், இப்போது 25 இலட்சம் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதோடுகூட, கடந்த கால ஆட்சியிலே சைக்கிள் வழங்கப்பட்டால், அவர்களுக்கெல்லாம் பஸ் பாஸ் இல்லை என்று சொன்னதை, இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், இலவச பஸ் பாஸ் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுவும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல, இந்தத் துறை ஒரு புறம் போக்குவரத்துத் துறை; இன்னொரு புறம் போக்குவரத்துக் கழகங்கள். சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தை எப்படியாவது நல்ல முறையிலே கொண்டு வர வேண்டும் என்பதற்காக, இங்கு urban development மூலமாக 1,300 கோடி ரூபாய் கடந்த காலத்திலே கடனாகக் கேட்கப்பட்டிருந்தது. பல்வேறு விளக்கங்கள் கேட்கப்பட்டு, அது தரப்படாமலேயே இருந்தது. இப்போது அது இறுதி செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே அந்த 1,300 கோடி ரூபாயைப் பெற்று சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திலே—இப்போது சொன்னார்கள், எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் சொல்கின்றபோது, 2,300 பேருந்துகள் போதாது, 5,000 பேருந்துகள் வேண்டுமென்று சொன்னார்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைமையை வெகு விரைவாக சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திலே

உருவாக்குவோம்; (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பேருந்துகளை நாங்கள் விடுவதற்குரிய முயற்சியை முழுமையாக எடுத்திருக்கிறோம்.

*பிற்பகல் 1–55*

அதேபோல, போக்குவரத்துக் கழகங்கள், விழுப்புரம் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் போக்குவரத்துக் கழகம், சேலம் போக்குவரத்துக் கழகம், இவையெல்லாம் சிறப்பாக, அவரவர்களுடைய நிதியிலே இயங்கக்கூடிய அளவுக்கு தனித் தன்மை பெற்றவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். கோவையும், மதுரையும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன. திருநெல்வேலியிலே அதிகமான அளவிற்கு அங்கு van-கள் ஓடுகின்ற காரணத்தாலும், கோவையைப் பொறுத்த அளவில், நீலகிரி மாவட்டத்தில் பேருந்துகள் இயக்குகின்ற காரணத்தாலும் அவர்கள் அங்கு நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நிவர்த்தி செய்து, அந்தப் பகுதிகளுக்குப் புதிய பேருந்துகளை வழங்கி, சிறப்பாக அந்தப் போக்குவரத்துக் கழகங்களையும் இலாபம் ஈட்டக்கூடிய அளவிற்கு உருவாக்குவதற்கு இந்தத் துறை முன்னோடித் திட்டமாகப் பல திட்டங்களை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அதேபோல இந்தத் துறையிலே, போக்குவரத்துத் துறை என்று இருக்கின்ற தமிழ்நாட்டில், இந்தியாவை எடுத்துக்கொண்டால், பம்பாய்க்கு அடுத்தபடியாக இந்த மாநிலத்தில் மட்டும்தான் மொத்தம் 89 இலட்சம் வண்டிகள் இன்றைக்குப் பதிவாகி இருக்கின்றன. நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் வண்டிகள் பதிவாகின்றன. ஆனால் 1963–லே போடப்பட்ட சட்டத்தின்படி இருக்கின்ற R.T.O.s, Brake Inspectors கடந்த காலத்தில் இருந்ததைப்போலவே குறைவாக இருக்கின்ற காரணத்தால், அதை நல்ல முறையிலே கண்காணிப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு, அதையெல்லாம் விரிவாக்க வேண்டும் என்று நாங்கள் திட்டத்தைத் தந்திருக்கிறோம். வெகு விரைவிலே அதெல்லாம் விரிவாக்கப்படுகின்ற அந்தப் பணியும் நடைபெற இருக்கிறது.

போக்குவரத்துக் கழகங்களிலே குடித்துவிட்டு வண்டி ஓட்டுபவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்தத் துறையின் சார்பாக 100 கருவிகள் Police துறைக்குத் தரப்பட இருக்கின்றன. குடித்துவிட்டு வண்டி ஓட்டுகின்ற அந்த ஓட்டுநர்களையெல்லாம் நல்வழிப்படுத்துவதற்காக 25 கோடி ரூபாய் செலவிலே அவர்களுக்குப்



புதிய திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், 97 இலட்சம் வண்டிகள் இருக்கின்ற இந்தத் துறையிலே, ஒரு ஆண்டுக்கு வருமானம் இந்தத் துறையின் சார்பாக 1,253 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வந்துகொண்டிருக்கிறது. இதை இந்த ஆண்டு கூடுதலாக்க, இன்னும் வரும் ஆண்டிலே ரூ. 2 ஆயிரம் கோடியாக வருவாயை உயர்த்துவதற்காக இந்தத் துறையின் சார்பாக முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, நாள் ஒன்றுக்கு இந்தத் துறையின் சார்பாக 5 ஆயிரம் நபர்களுக்கு Learning Licence, அதாவது கற்கப்படுகின்ற Licence–ம், 3 ஆயிரம் ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் Licence–ம், 2,500 பேருக்கு உரிமங்கள் புதுப்பிக்கின்ற அந்தப் பணியும் நடைபெறுகிறது. நாள் ஒன்றுக்கு 40 அலுவலகங்களிலே 10 ஆயிரம் பேருக்கு இந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனால்தான் இந்தப் பணியை விரிவாக்குவதற்கு, இன்னும் அதிகமான அளவிற்கு R.T.O.-களும், Brake Inspector-களும் நியமிக்கப்பட அரசுக்கு முன்மொழிவு தரப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே பெற்று, இந்தப் பணியை மேலும் நல்ல முறையிலே செய்வதற்கு நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப் போனால், இந்தத் துறையில், இதற்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய 17 நாட்களுக்கு சம்பளம் தர வேண்டுமென்றும், புதிய பேருந்துகள் விடப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அ.தி.மு.க. சார்பில் பேசியவர்கள் எல்லாம் அவர்கள் காலத்தில்தான் அது இலாபகரமாக இயங்கியது, இப்பொழுது நஷ்டமாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அதற்கெல்லாம் அப்போதைக்கப்போதே விளக்கங்கள் தந்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், இங்கே இந்தத் துறையிலே 10 ஆண்டு காலமாக எந்த promotion–ம் யாருக்கும் தரப்படவில்லை. இன்னும் ஓரிரண்டு ஆண்டு காலம் இதே நிலை நீடித்து இருக்குமானால், போக்குவரத்துத் துறையிலே அதிகாரிகளே இருக்கமாட்டார்கள், வெறும் தொழிலாளர்கள்தான் இருந்திருக்க முடியும். முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் காரணமாக, இன்றைக்கு 17 பேர் M.D.-களாகவும், கிட்டத்தட்ட 17, 18 பேர் G.M.-களாகவும் தொடர்ந்து அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும்

இருக்கின்ற J.E., A.E.-களுக்குப் பதவி உயர்வு வழங்க இப்பொழுது பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட காலம், 20 ஆண்டு காலமாகப் பணியாற்றிய conductor, driver-களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் 300 பேர் இன்றைக்குப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். அப்படிப் பதவி உயர்வு பெற்று, இறுதியாக வருகின்றபோது 200 புதிய Engineer-களை இந்தத் துறை இப்பொழுது எடுக்க இருக்கிறது, புதிதாக வேலைக்கு எடுக்க இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நீதிமன்ற அனுமதி கிடைத்த பிறகு புதிதாக ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் எடுக்க இருக்கிறோம். அது அதிக அளவு number ஆக இருக்கும். ஏனென்றால், நீதிமன்றம் எவ்வளவு பேர் எடுக்க வேண்டுமென்று ஆணையிட்ட பிறகு, மீதம் இருக்கின்றவர்களை நேரடியாக நாங்கள் எடுக்க வேண்டும். கிட்டத்தட்ட அதிக அளவு அதையும் நிரப்பச் சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். துறையிலே ஆட்களை நிரப்புவதும், இருக்கிற ஆட்களுக்குப் பதவி உயர்வு தந்து, உற்சாகமாகச் செயல்பட்டு, இந்தத் துறையை மேலும் நல்ல முறையிலே உருவாக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தத் துறையிலிருந்து பல்வேறு திட்டங்களை இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதை உங்களுக்குத் தெரிவிப்பதிலே நான் பெருமையடைகிறேன்.

இங்கே போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்க அரசு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 1,000 புதிய பேருந்துகள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழக வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று இயக்கப்படும். மேலும், நிலுவையிலுள்ள 230 புதிய பேருந்துகளையும் சேர்த்து, மொத்தம் 2,230 புதிய பேருந்துகள் இந்த ஆண்டு இயக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வளர்ந்து வரும் மாநகர எல்லையில், புதிதாக உருவாகி வரும் நகரங்களிலுள்ள பொது மக்கள் பெரிதும் பயன்பெறும் வகையில் சென்னை மாநகரில் தற்போது 40 கிலோ மீட்டர் வரை இயக்கப்படும் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இனி 50 கிலோ மீட்டர் வரை இயக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 2–00

பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அமைச்சர்கள்கூட, சென்னைப் புறநகர்ப் பகுதிகளில், பேருந்து நேரடியாக வர வேண்டும், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னவுடன், 50 கிலோ மீட்டர் வரை நீட்டித்து முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். நகரப் பேருந்துமூலம் கிராம மக்கள் பயன்பெறும் வகையில், சென்னை நீங்கலாக மற்ற நகரங்களில் இயங்கும் பேருந்துகள் 30 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகர மக்களின் தேவையினைக் கருத்தில் கொண்டு, அண்டை மாநிலங்களில் இயக்கப்படும் பேருந்துகள்போன்று, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, எங்கும் நிற்காமல் துரிதமாகப் பயணிகள் செல்லும் வகையில், 'yellow line' எனப் பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லக்கூடிய 'Blue line' என்ற பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2001 ஆம் ஆண்டு போனஸ் கோரி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள்மீதான அனைத்து நடவடிக்கைகளும் கைவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வுத்தரவினைச் செயல்படுத்துவதுடன், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அரசுப் பணியாளர்களின் வேலைநிறுத்தக் காலத்தை பணிக் காலமாக முறைப்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குண்டான பயனையும் அளிக்க ஆணையிட்டதுபோன்று, போனஸ் கோரி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் போராட்டக் காலமான 17 நாட்களையும் பணிக் காலமாக முறைப்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்நாட்களுக்குண்டான ஊதியமும் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு

உறுப்பினர் செங்குட்டுவன் அவாகள் இங்கு தன்னுடைய அடிவயிறறிலிருந்து பேசியதை—அவர் தொ.மு.ச.–வினுடைய தொழிற்சங்கத் தலைவர், தொழிலாளர்களுடைய தலைவர். அவர்கள் கைது செய்யப்பட்டபோது, சிறையில் சென்று நாங்கள் பார்த்திருக்கிறோம். தீபாவளி நேரத்தில், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், மற்றவர்களை ஏற்றிச் சென்று விடுகிற அந்தத் தொழிலாளர்கள் சிறையிலே இருந்த அந்தக் காரணத்தால்தான் அவர் அடிவயிற்றிலிருந்து பேசினார், அவர்கள் பட்ட பாட்டை. அவர் சிறப்பாக, மிக மிகச் சிறப்பாக இங்கே எடுத்துப் பேசியிருக்கிறார்கள்.

அ.தி.மு.க. அரசு, போக்குவரத்துத் துறையில் தாராளமயம் மற்றும் தனியார்மயம் ஆகியவற்றைத் தனது கொள்கையாக அறிவித்த காரணத்தால், தகுதியிருந்தும் அலுவலர்களுக்குக் குறித்த பதவி உயர்வு உரிய காலத்தில் வழங்கப்படவில்லை. இதனால் உரிமையுடன் பெற வேண்டிய பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்காததால், அலுவலர்களிடையே பணியில் தொய்வு ஏற்பட்டிருந்தது. இக்குறையினை நிவர்த்தி செய்ய, இவ்வரசு பதவியேற்றவுடன் மேலாண் இயக்குநர்கள், பொது மேலாளர்கள், நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர்கள் ஆகிய பதவிகளுக்கு ஏராளமான பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதேபோன்று, அனைத்து நிலையிலும் பணிபுரிபவர்களுக்குப் பதவி உயர்வுகள் போன்ற உரிமைகள் வழங்கப்பட உள்ளன. இதன் காரணமாக, இன்றைய நிலையில் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் மூத்த நிலையில் தக்க அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1998–99–ல் ஏற்படுத்தப்பட்ட ஊதிய ஒப்பந்தத்தில் தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக மேற்பார்வையாளர்களின் ஊதிய விகிதம் தனியாகக் கருதப்பட்டு, ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. தற்போது மேற்பார்வையாளர்களின் கூட்டமைப்பினர், தொழிலாளர்களுக்குப் புதிய ஊதிய ஒப்பந்தம் செப்டம்பர் 2005–ல், 1–9–2003 முதல் முன்தேதியிட்டு வழங்கப்பட்ட நிலையில், தங்களுடைய ஊதிய விகிதம் இன்னும் திருத்தப்படாமல் நிலுவையிலுள்ளதைச் சுட்டிக்காட்டி அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இந்தக் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலித்து, அவர்களுக்கு நியாயமான முறையில் ஒரு முடிவை எடுக்கத்தக்க நடவடிககை மேற்கொண்டுள்ளது. பணியாளர் முதல் அலுவலர் வரை, காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



சிறப்பான சேவை
தொலைதூரப் பேருந்துப் பயணிகளுக்குச் சிறப்பான சேவை தொலைதூரப் பேருந்துப் பயணிகளுக்குச் தனியாரிடமிருந்து அதிநவீன செய்திட, அண்டை மாநிலங்கள் தனியாரிடமிருந்து அதிநவீன சொகுசுப் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்குவதுபோன்று, தமிழகத்திலும் அண்டை மாநிலங்களுக்கு இயக்கும் வழித்தடங்களில், பேருந்துகளைத் தனியாரிடமிருந்து திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிமூலம் வாடகைக்கு எடுத்து இயக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருந்த 21 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஏழு போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப்பட்ட பின், நிர்வாக அமைப்பையும் (Organisation Chart) அதற்கேற்றாற்போல் மாற்றி அமைக்க வேண்டியது அவசியமே! எந்தவொரு நிறுவனமும் சிறப்பாகச் செயல்படத் தேவையான மேலாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். இத்தேவையை நிறைவேற்றும் வகையில் போக்குவரத்துக் கழகத்திற்குத் தக்க நிர்வாக அமைப்பை ஆய்ந்து, பரிந்துரைக்கத் தனியாக ஒரு குழுவினை அரசு நியமித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின்பேரில் தக்க நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வோம்.

சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களில் உள்ள விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு, பயணிகளுக்குச் சிறப்பான வசதிகள் செய்து தரப்படும். மேலும், கணினிமூலம் முன் பதிவு வசதி தமிழகத்தின் முக்கிய நகரங்களில் செய்து தரப்படும்.

விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்படும் 900 பேருந்துகள் 1,000 பேருந்துகளாக அதிகரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அதிநவீன மிதவை சொகுசுப் பேருந்துகள் (Ultra Deluxe Air Suspension Bus) இயக்கப்படும். அனைத்துப் புறநகர்ப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூர வழித்தடங்களில் பயணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு அதிநவீன மிதவை சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படும்.

பிற்பகல் 2–05

போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களின் குறைகளை உடனடியாகத் தீர்க்கும்பொருட்டு அரசு, ஓய்வூதிய நம்பகம் மற்றும் போக்குவரத்துக் கழகப் பிரதிநிதிகள் அடங்கிய குழு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத் தலைமை

அலுவலகத்தில் கூடி, ஓய்வூதியதாரர்களை நேரில் சந்தித்துக் குறைகளை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் (I.R.T.) கீழ் இயங்கும் பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் பி.எஸ்சி., செவிலியர் பட்டப் படிப்பு மற்றும் செவிலியர் பட்டயப் படிப்பு என்ற புதிய பாடப் பிரிவுகள் இந்த ஆண்டு தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 20 பணிமனைகள் அனைத்தும் கணினிமூலம் தலைமையகத்துடன் இணைக்கப்படும். இதற்கான புதிய மென்பொருள் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுமூலம் உருவாக்கப்பட்டு, மேற்கூறிய பணி நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்திற்கு, திருச்சி மண்டலம், துவாக்குடியில் புதுப்பிக்கும் பிரிவு அமைப்பதற்காக சிட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 7.66 ஏக்கர் நிலம் உள்ளது. திருச்சி மண்டலத்தில் புதுப்பிக்கும் பிரிவு தற்காலிக இடத்தில் தற்பொழுது இயங்கி வருகிறது. அனைத்து நவீனமயமான இயந்திரங்களுடன் புதிய தொழில்நுட்ப வசதியுடன் ஒரு புதுப்பிக்கும் பிரிவு மேற்படி இடத்தில் ரூபாய் 1.20 கோடி உத்தேச மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தற்சமயம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம், ஏழு வருவாய் மாவட்டங்களில் மூன்று மண்டலங்களாக விழுப்புரம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகரங்களை மண்டலத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 50 பணிமனைகள்மூலம் 2,724 பேருந்துகளை இயக்கி வருகின்றன. வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவையினைப் பூர்த்தி செய்யவும், நிருவாகத் திறனை மேலும் கூட்டும்வண்ணமும், நம்முடைய உணவுத் துறை அமைச்சர் திரு. வேலு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, கூடுதலாகப் புதிய மண்டலம் ஒன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்தின்கீழ் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்திற்குச் சொந்தமான 3.17 ஏக்கர் நிலத்தில் இந்த ஆண்டே சங்கராபுரத்தில் புதிய பணிமனை அமைக்கப்படும். இதனால்,



அருகிலுள்ள கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் பணிமனைகளின் வேலைப் பளு குறையும்.

அனைத்து மாவட்டங்களுக்கும் தலா 250 அனுமதிச் சீட்டுகள் என்ற அடிப்படையில் சென்னை நீங்கலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த மினி பேருந்து அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 7,000. அதில் இதுவரை வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளால் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 3,985. இன்னும் மீதமுள்ள அனுமதிச் சீட்டுகள் 3,015 ஆகும். சில மாவட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 250 அனுமதிச் சீட்டுகள் முடியும் தருவாயில் உள்ளன. எனவே, தேவையுள்ள அம்மாவட்டங்களுக்கு பிற மாவட்டங்களில் பயன்படுத்தப்படாத அனுமதிச் சீட்டுகளை மறு ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் போக்குவரத்து வசதி தேவையுள்ள கிராம மக்களுக்குச் சிற்றுந்து வசதி அளிக்க இயலும். மேலும் அவ்வாறு கூடுதல் ஒதுக்கீடு செய்யப்படும் மாவட்டங்களில் சிற்றுந்து வசதியைப் பரவலாக்கும் வகையில் பஞ்சாயத்து ஒன்றியம் வாரியாக மறு ஒதுக்கீடு செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பேருந்து வசதியுள்ள தடத்தில் 4 கிலோ மீட்டர் வரையும், பேருந்து வசதியில்லாத தடத்தில் மிகக் குறைந்த அளவில் 1 கிலோ மீட்டர் முதல் 4 கிலோ மீட்டர் வரையும் இயக்கப்படும் சிற்றுந்துகளின் எண்ணிக்கை 650 ஆகும். இதுபோன்று அதிகமான சிற்றுந்துகள் போக்குவரத்து வசதியற்ற பகுதிகளில் மிகக் குறைந்த தூரமே இயக்கப்படுவதால், இதனை மேம்படுத்துவதற்காக, பேருந்து வசதியற்ற தடத்தில் குறைந்தபட்சம் 5 கிலோ மீட்டராவது இயக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் பேருந்து வசதியில்லாத தடத்தில் 16 கிலோ மீட்டரும், பேருந்து வசதியுள்ள தடத்தில் 8 கிலோ மீட்டரும், ஆக மொத்தம் 24 கிலோ மீட்டர் அனுமதிக்கப்பட்டுள்ளதுபோல, ஏற்காடு, ஏலகிரி, கொடைக்கானல், வால்பாறை, தாளவாடி, ஆலங்காயம் (வேலூர் மாவட்டம்) போன்ற மலைப் பகுதிகளில் உள்ள போக்குவரத்து வசதியற்ற கிராமங்களுக்குப் பயனளிக்கும் வகையில், பேருந்து வசதியுள்ள தடத்தின் நீளத்தினை 4 கிலோ மீட்டரிலிருந்து 8 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கவும் முடிவு செய்து, அப்பகுதிகளில் சிற்றுந்துகள் இயக்க அனுமதிச் சீட்டுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5,000 புதிய ஆட்டோ ரிக்ஷா அனுமதிச் சீட்டுகள் வழங்குவதற்காகத் தற்போதுள்ள வழிமுறைகள், தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வதற்குத் தெளிவானதாக இல்லாததால், பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகளை விரிவாக மாற்றியமைத்து, அதன்படி 5,000 ஆட்டோ ரிக்ஷா அனுமதிகளை மானியத் தொகையுடன், வேலையில்லாத, ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு ஓட்டுநர் மற்றும் உரிமையாளராக இயக்குவதற்காக வழங்கப்படுவதுடன், 5,000 புதிய அனுமதிச் சீட்டுகளை மானியத் தொகையின்றி பொதுப் பிரிவின்கீழ் பிற விண்ணப்பதாரர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகளுக்கு மாணவர்களை அழைத்து வரும் வாகனங்களான ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள், வேன்கள் ஆகியவற்றில் அதிகமான எண்ணிக்கையில் பள்ளி மாணவர்களை ஏற்றி வருகிறார்கள் என்றும், அதனால் அவ்வாகனங்களுக்கு அடிக்கடி சாலைகளில் விபத்துக்கள் ஏற்பட்டு, பள்ளி மாணவர்களின் உயிர் இழப்பு ஏற்படுகிறது என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, அவ்வாகனங்களில் ஏற்றி வரும் மாணவர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்தவும், அவ்வாகனங்களுக்குத் தக்க போக்குவரத்து நெறிமுறைகளை ஏற்படுத்தவும், அவ்வாகன ஓட்டிகள் சாலை விதிகளை முறையாகக் கடைப்பிடிக்கவும், பள்ளி, கல்லூரிப் பேருந்துகள் அனைத்திற்கும் ஷெல் ஓயிட் நிற ஒதுக்கீடு செய்து, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள நெறிமுறைகளின்படி தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுவதைத் தடுக்கும்பொருட்டு, காவல் துறையினருக்கு 100 புதிய சுவாசப் பரிசோதனைக் கருவிகள் வழங்கப்படும். விபத்தினை ஏற்படுத்திய ஓட்டுநர்களின் விபரங்களைச் சேகரித்து, அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் சரியான ஓட்டுநர் மறு பயிற்சி அளிக்கப்படும்.

பிற்பகல் 2–10

தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் முறையான பயிற்சி அளிக்காததால் தரமான ஓட்டுநர்களின் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு, இதற்குத் தீர்வு செய்யும்வண்ணம், மாநிலம், தேசிய அளவு மற்றும் உலகத் தரம் வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்குவதற்கு ஏதுவாக, சாலைப் போக்குவரத்து



நிறுவனத்தால் (I.R.T.) பயிற்சி அளிப்பதுபோன்று, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தனியார் பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள்மூலமாக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்பெற்று, உலகத் தரம் வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, அண்டை மாநிலம், ஆந்திர மாநிலத்தில், இன்றைக்குப் புதிய ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை உருவாக்கி, கிட்டத்தட்ட மேலை நாடுகளில் 2 இலட்சம் ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்பு இருப்பதாக அறிந்து, அந்தப் பணியைச் செய்திருக்கிறது. அதே பணியை நம் அரசும் மேற்கொண்டு இங்கு நல்ல ஓட்டுநர்களைத் தயாரிப்பதற்காக இதுபோல திட்டத்தை உருவாக்கி இருக்கிறது.

இரவு நேரங்களில் வாகனங்களின் முகப்பு ஒளியினைக் கூட்டவும், குறைக்கவும் வாகனங்களிலே வசதிகள் இருப்பினும், அதனை வாகன ஓட்டுநர்கள் சரிவரப் பயன்படுத்தாததன் காரணமாக ஏற்படும் பெரும் விபத்துக்களைத் தடுக்க, அனைத்து வாகனங்களின் முகப்பு விளக்குகளின் மையத்தில் கருப்பு வண்ணம் பூசுதல் கட்டாயமாக்கப்படும்.

ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்கள் அனுமதிச் சீட்டு ஒப்படைப்பிற்குப் பின், வாகன மாற்றத்திற்குப் பின்பும், நிற மாற்றம் செய்யப்படாமல் கள்ளத்தனமாக இயங்கி வருவதால், பயணிக்கும் பயணிகளுக்கு விபத்து ஏற்படும் காலங்களில் இழப்பீட்டுத் தொகை பெற வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. இந்த இடர்ப்பாட்டிலிருந்து பொது மக்களைக் காப்பாற்ற, மேற்கண்ட வாகனங்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும்பொருட்டு, அவ்வாகனங்களுக்கு நீல நிற வர்ணம் பூசப்பட வேண்டும் என்பதும், அவ்வாகனங்களில் "NOT FOR HIRE" (வாடகைக்கு அல்ல) எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்படும்.

வாகனங்களின் பதிவெண் தகடுகளை மாற்றியமைத்தல்/திருத்துதல் போன்றவற்றைத் தவிர்க்கும் முறை பற்றி மைய அரசின் நெறிமுறைகளின்படி ஆய்வு நடத்திய பின், தேசிய பாதுகாப்பு நலனைக் காக்கும்வண்ணம், புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கும், ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருந்து வரும் வழக்கினைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுத்து, மைய அரசு வெளியிட்டுள்ள

வழிகாட்டு முறைகளைக் கருத்தில் கொண்டு, உயர் பாதுகாப்புப் பதிவெண் பலகையைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு புதிய விரிவான திட்டம் மேற்கொள்ளப்படும்.

திருச்சி, ஈரோடு, திருவாரூர், மதுரை (வடக்கு) மற்றும் சேலம் ஆகிய 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு ரூ. 645 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

தண்டையார்பேட்டையில் இயங்கி வரும் பகுதி அலுவலகம் ரூ.24.82 இலட்சம் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்தப்படும்.

கடலூர், புதுக்கோட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு ரூ.54 இலட்சம் செலவில் ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைக்கப்படும்.

தாம்பரம், பூந்தமல்லி, பட்டுக்கோட்டை, பரமக்குடி, மணப்பாறை ஆகிய 5 நகரங்களில் ரூ.47.40 இலட்சம் செலவில் புதிதாகப் பகுதி அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு 20 தொலைபேசி இணைப்புக்களுடன் இணைந்த நிகரிகள் ரூ.2 இலட்சம் செலவிலும், 15 ஒளிநகல் இயந்திரங்கள் ரூ.9 இலட்சம் செலவிலும் அமைத்துத் தரப்படும்.

இப்படிப் புதிய திட்டங்கள் இந்த அரசின் சார்பாக அறிவிக்கப்பட்டு, இந்தத் துறை மேலும் பலப்படுத்தப்பட்டு, மக்களுக்குப் பயன்படத்தக்க அளவில் இங்கே நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 415 வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். — 457 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். 94 எம்.எல்.ஏ.-க்கள் இவற்றை வழங்கி இருக்கிறார்கள். ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்தையும் நான் படித்திருக்கிறேன். அதிகமான அளவிற்கு, புதிய பேருந்து வழித்தடங்கள் தொடங்கப்பட வேண்டுமென்றும், புதிய பேருந்துகள் வழங்கப்பட வேண்டுமென்றும், அதே நேரத்தில், பள்ளிக்கூட நேரங்களில் அதிகமான அளவிற்குப் பேருந்துகள் விடப்பட வேண்டுமென்றும், தொடர்ந்து இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அனைத்தையும் கருத்தில் கொண்டு, நிச்சயமாக ஒவ்வொரு உறுப்பினரும் கேட்ட அந்தப் பணியை நிறைவேற்றித் தருவோம் என்று உங்களுக்கு உறுதியளித்து, தந்திருக்கின்ற வெட்டுத்



தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு உங்களைக் கேட்டு, அமைகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**• திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார்கள். லாரிகள், பஸ்கள், கார்களில் எல்லாம் நிறைய விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால், முன்னாலே இருக்கின்ற பெரிய விளக்குகளுக்குக் கருப்புப் பொட்டு வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைப் பற்றிய ஒரு குறிப்பு ஏதேனும் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நான் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கின்றேன். அந்தப் பொட்டு வைப்பதை வெளியிலே வைக்காமல், உள்ளேயே, manufacture—லிருந்து, உள்ளேயிருந்து வெளியே வரும்போதே அந்தக் கண்ணாடிக்குள்ளேயே அந்தப் பொட்டை வைத்தால், அதற்கு எந்தவிதமான தடையும் விதிப்பதற்குரிய வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்.

பிற்பகல் 2–15

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு million dollar question. இது கொள்கை முடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்த முடிவைச் சொல்ல முடியாது. எனவே, இந்தக் கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கத் தலைவர்கள், குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் குப்புசாமி போன்றவர்கள், இந்தப் பொதுத் துறை நிறுவனம், அரசுப் பொதுத் துறை நிறுவனம், போக்குவரத்துக் கழகங்கள் நசுக்கப்பட்டதற்கு முழு முதற்காரணம் மினி பேருந்துகளைத் தனியார்மூலமாக இயக்கியதுதான் எங்களுடைய ஆட்சி செய்திருந்தாலும் அது தவறுதான், ஆகவே, அதை நீங்கள் அரசுடைமையாக்க வேண்டுமென்று அவர்

தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இப்போது அவருடைய ஆட்சி இங்கேயிருக்கிற காரணத்தால், இப்போது பேசிய உறுப்பினர்களும் சொன்னார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் செங்குட்டுவன்கூடச் சொன்னார். அரசுத் துறை, பொதுத் துறை நிறுவனங்கள், போக்குவரத்துக் கழகம் நசுக்கப்பட்டது எங்களுடைய ஆட்சிக் காலத்திலே என்று சொன்னார். அது முற்றிலும் தவறானது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மினி பேருந்துகளை–Mini Bus–களைத் தனியார்மூலமாக அறிமுகப்படுத்தியதன் காரணமாகத்தான் அந்தப் போக்குவரத்துக் கழகம் நசுக்கப்பட்டது. பொதுத் துறை நிறுவனம் நலிவுற்றது. ஆகவே, மினி பஸ்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசுவநாதன், கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) விளக்கம் சொல்ல வேண்டியது அமைச்சர். நீங்கள் விளக்கம் சொல்ல வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே பதில் சொல்ல வேண்டுமென்று கேட்ட காரணத்தால், முதலமைச்சர் அவர்கள் சார்பாக நான் முன்னவர் என்ற முறையில் பதில் சொல்கிறேன். Mini Bus-கள் விட்ட காரணத்தாலேதான் அரசாங்கப் போக்குவரத்துத் துறை நிறுவனம் இழப்புக்கு ஆளாக நேரிட்டது, அது நசுக்கப்பட்டது என்ற கருத்தை உறுப்பினர் சொல்கிறார். பொது மக்களுடைய நன்மைக்காக Mini Bus விடுவது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்களுக்கு நன்மையும் செய்து, நஷ்டம் இல்லாமல் நிர்வாகத்தை நடத்துவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தால் முடியும். நேர்மையும், உண்மையும் இருக்குமானால், (மேசையைத் தட்டும் ஒலி) ஊழல் இல்லாவிட்டால், நஷ்டம் இல்லாமல் நடத்த முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பேருந்து அனுமதி திராவிட முன்னேற்றக் கழகத்தால் கொடுக்கப்பட்ட காரணத்தால் போக்குவரத்துக் கழகங்கள்



நசிந்துவிட்டன என்று முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் நான்கு கிலோ மீட்டர்–service area–வை எட்டு கிலோ மீட்டராக்க ஆரம்பித்தார்கள். மினி பேருந்துகளுக்காக service area–விலே நான்கு கிலோ மீட்டர்தான் கொடுக்கலாம் என்பது நம்முடைய சட்டம். எட்டு கிலோ மீட்டர் கொடுக்கலாம் என்று சொன்னது அவர்கள். அது மட்டுமல்லாமல், சென்னை மாநகரம், முழுமையாக அரசுப் பேருந்துகள் ஓடுகின்ற இடம். இந்தச் சென்னை மாநகரத்திலே மினி பேருந்துகளை விடலாம் என்று சொன்னது அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) No cross talk, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலில். அமைச்சர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 25–உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25–உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறபபடுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெடடுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி, அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.51,09,18,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பிற்பகல் 2-20

## (ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன். இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. சுப்ரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.



**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. குமரகுரு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ராணி வெங்கடேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. போஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.283,08,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.101,09,41,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.100,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–8–2006) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பினனர், பேரவை பிற்பகல் 2–22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

42. மானியக் கோரிக்கை எண் 25–உள்துறை–இயக்கூர்திகள் சட்டங்கள்–நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

43. மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

# இணைப்பு I

*(91 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 25 – உள் துறை– இயக்கூர்திகள் சட்டங்கள்–நிருவாகம் கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம்

மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விரைவாகச் செல்வதற்கும், பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்கும் உறுதுணையாக உள்ள சாலைப் போக்குவரத்து, நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நமது நாட்டின் போக்குவரத்து வழிகளான தரை வழி, நீர் வழி மற்றும் ஆகாய வழிப் போக்குவரத்தில் தரை வழிப் போக்குவரத்து பல ஆண்டு காலமாக மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

1990-91 ஆம் ஆண்டில், அனைத்திந்திய அளவில் சரக்குகளைக் கொண்டு செல்வதில் சாலை வழிப் போக்குவரத்து 38 சதவீதமாகவும், இரயில் வழிப் போக்குவரத்து 62 சதவீதமாகவும் இருந்தது. 2004 ஆம் ஆண்டில் சாலை வழிப் போக்குவரத்து வாயிலாக சரக்குகளைக் கொண்டு செல்வது 61 சதவீதமாக உயர்ந்துள்ளதன்மூலம், பிற வகைப் போக்குவரத்தைக் காட்டிலும் சாலைப் போக்குவரத்து பெற்றுள்ள சிறப்பும், முக்கியத்துவமும் தெரிய வருகிறது.

நமது மாநிலத்தில், விரைந்த தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் காரணமாக முன்னேற்றத்திற்குப் புதிய பிரச்சினைகளும், சவால்களும் எழுந்துள்ளன. அவற்றைச் சமாளிப்பதில் சாலைப் போக்குவரத்தின் பங்கு முக்கியமாகிறது. இத்தகைய புதிய சவால்களைச் சமாளிக்கும்வண்ணம் போக்குவரத்துத் துறை தகுந்த வசதிகளைப பெற்றுள்ளதோடு, சிறந்த முறையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் தொழில் துறைகளில் பெருகி வரும் தேவைகளை நிறைவு செய்வதுடன், தன்னிடம் நிலை பெற்றுள்ள சட்டப்படியான அதிகாரங்களையும், சட்டப்படி அல்லாத பிற அதிகாரங்களையும்

[2006 ஆகஸ்ட் 9

பயன்படுத்திப் பொது மக்களுக்குப் பணியாற்றுவதே போக்குவரத்துத் துறையின் தலையாய கடமையாகும். மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இனி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் கீழே சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளன:

## 2. போக்குவரத்துத் துறையின் அமைப்பு முறையும், நிருவாக அமைப்பும்

(i) போக்குவரத்துத் துறை, உள்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையர், போக்குவரத்துத் துறையின் நிருவாகத் தலைவராவார். அவரே மாநிலப் போக்குவரத்து அதிகாரியாகவும்,சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் செயல்படுகிறார். சாலைப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிக்க, இந்திய ஆட்சிப் பணிப் பதவி நிலையில் உள்ள இணைப் போக்குவரத்து ஆணையர் ஒருவர், போக்குவரத்து ஆணையரின்கீழ் செயல்பட்டு வருகிறார். இவரைத் தவிர, இத்துறையில் 4 இணைப் போக்குவரத்து ஆணையர்கள், 9 துணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் 57 வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் பதவியிடங்கள் உள்ளன. மேலும், போக்குவரத்து வாகனங்களைத் தணிக்கை செய்தல் மற்றும் வாகனத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல் போன்ற பணிகளைக் கவனிக்க, 299 மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பதவியிடங்கள் உள்ளன.

(ii) தமிழ்நாட்டில், போக்குவரத்துத் துறையின் களப்பணி மற்றும் ஏனைய அலுவல்கள் அனைத்தையும் ஓர் இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம், 6 துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள், 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 40 பகுதி அலுவலகங்கள் மற்றும் 19 சோதனைச் சாவடிகள் மேற்கொண்டு வருகின்றன.

(iii) சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், இணைப் போக்குவரத்து ஆணையர் (சென்னை மண்டலம்), வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகச் செயல்படுகிறார். 7 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 2 பகுதி அலுவலகங்களும் சென்னை மண்டலத்தில் உள்ளன.

(iv) சென்னை மாவட்டத்தைத் தவிர, 29 மாவட்டங்களில் 39 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் 38 பகுதி அலுவலகங்களும் இயங்குகின்றன. மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். மோட்டார் வாகனச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் அனுமதிச்



2006 ஆகஸ்ட் 9]

சீட்டுக்கான விண்ணப்பங்கள்மீது அவர்கள் ஆணை பிறப்பிக்கின்றனர். வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் மாநிலப் போக்குவரத்து அதிகாரியால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின்மீதான மேல் முறையீடுகளும் மறு ஆய்வு மனுக்களும் சென்னை மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் விசாரணை செய்யப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## 3. வாகனங்களின் வளர்ச்சி

தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 82.22 இலட்சம் ஆகும். அனைத்திந்திய அளவில் மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் நமது மாநிலம், மகாராஷ்டிர மாநிலத்தை அடுத்து, இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கையில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில், வாகனங்களின் வளர்ச்சி ஆண்டொன்றிற்குச் சுமார் 10 சதவீதமாக உள்ளது.

போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என வாகனங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கணிசமாக அதிகரித்து வருகின்றது. 2000-2001 ஆம் ஆண்டு முதல் 2005-2006 ஆம் ஆண்டு வரையான நிதியாண்டுகளில் போக்குவரத்து வாகனங்கள், போக்குவரத்து அல்லாத வாகனங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையைக் காட்டுகிற வரைபடங்கள் வருமாறு:—

**2000-2001 ஆம் ஆண்டு முதல் 2005-2006 ஆம் ஆண்டு வரை வாகனங்களின் எண்ணிக்கை**

| நிதியாண்டு | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்த வாகனங்கள் |
|---|---|---|---|---|
| | | இரு சக்கர வாகனங்கள் | ஏனையவை | |
| 2000-2001 | 4,21,365 | 41,63,002 | 5,77,715 | 51,62,082 |
| 2001-2002 | 4,32,106 | 46,00,565 | 6,25,426 | 56,58,097 |
| 2002-2003 | 4,57,448 | 50,73,643 | 6,77,946 | 62,09,037 |
| 2003-2004 | 4,72,172 | 55,47,755 | 7,32,546 | 67,52,473 |
| 2004-2005 | 4,93,926 | 61,06,057 | 8,03,761 | 74,03,744 |
| 2005-2006 | 5,81,106 | 67,50,328 | 8,90,296 | 82,21,730 |

## போக்குவரத்து வாகனங்களின் வளர்ச்சி




## போக்குவரத்து அல்லாத வாகனங்களின் வளர்ச்சி






## மொத்த வாகனங்களின் வளர்ச்சி




## 1-4-2006 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை

| (அ) போக்குவரத்து வாகனங்கள் | | (ஆ) போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| பயணிப் பேருந்துகள் | | | |
| மாநிலப் போக்குவரத்து கழகங்களால் இயக்கப்படும் வழித்தடப் பேருந்துகள் | 16,443 | மோட்டார் சைக்கிள்<br>ஸ்கூட்டர்<br>மொபெட்டுகள் | 26,91,550<br>10,89,637<br>29,69,141 |
| உற்றுழிப் பேருந்துகள் | 1,192 | இரண்டு சக்கர வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 67,50,328 |
| மொத்தம் | 17,635 | | |
| தனியாரால் இயக்கப்படும் வழித்தடப் பேருந்துகள் | 5,212 | மூன்று சக்கர வாகனங்கள் | 50,976 |
| உற்றுழிப் பேருந்துகள் | 1,548 | | |
| மொத்தம் | 6,760 | மோட்டார் வண்டி | 6,87,488 |
| மொத்தம் | 24,395 | ஜீப்பு | 40,976 |
| வழித்தடச் சிற்றுந்துகள் | 3,985 | உழுவை | 89,960 |
| உற்றுழிச் சிற்றுந்துகள் | 50 | சாலைச் சமன்பொறி | 974 |
| மொத்தம் | 4,035 | ஏனையவை | 19,901 |

[2006 ஆகஸ்ட் 9

| | | | |
|---|---|---|---|
| ஒப்பந்த வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை (ஆ) | 76,40,624 |
| ஆம்னி பேருந்து (மாநில அனுமதி) | 310 | | |
| ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி) | 153 | | |
| மேக்ஸி கேப் | 25,530 | | |
| சுற்றுலா சிருந்து | 49,848 | | |
| சாதாரண வாடகைச் சிருந்து | 1,612 | | |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் | 1,33,889 | | |
| மொத்தம் | 2,11,342 | | |
| தனியார் சேவை வாகனங்கள் | 5,330 | | |
| பள்ளிப் பேருந்துகள் | 8,099 | | |
| அவசர சிகிச்சை நோயாளர் ஊர்தி | * 3,211 | | |
| தீயணைப்பு வாகனங்கள் | 1,419 | | |
| மொத்தம் | 18,059 | | |
| சரக்கு வாகனங்கள் | | | |
| கனரக சரக்கு வண்டிகள் | 1,31,351 | | |
| கனரக சரக்கு வண்டிகள் (தேசிய அனுமதி) | 31,581 | | |
| | | சுருக்கம் | |
| உழுவை மற்றும் இழுவை வண்டிகள் | 50,519 | போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை (அ) | 5,81,106 |
| இலகுரக சரக்கு வண்டிகள் | 1,01,637 | | |
| தொடர் வண்டிகள் | 8,187 | | |
| மொத்தம் | 3,23,275 | போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை (ஆ) | 76,40,624 |
| போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை (அ) | 5,81,106 | வாகனங்களின் பெரு மொத்த எண்ணிக்கை (அ) மற்றும் (ஆ) | 82,21,730 |



2006 ஆகஸ்ட் 9]

## 4. போக்குவரத்துத் துறையின் பணிகள்

1988 ஆம் ஆண்டு மத்திய அரசு மோட்டார் வண்டிகள் சட்டம், 1989 ஆம் ஆண்டு மத்திய அரசின் மோட்டார் வண்டிகள் விதிகள், தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகள், தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகள் மற்றும் இவை தொடர்பானவற்றைப் போக்குவரத்துத் துறை நிருவகிக்கின்றது. இத்துறையின் முக்கியப் பணிகள் வருமாறு:—

(i) மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டுகள் (பெர்மிட்) வழங்குதல், அண்டை மாநிலங்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அம்மாநிலங்களுக்கிடையே பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துகளை இயக்குதல்;

(ii) போக்குவரத்து வண்டிகளின் தகுதியை உறுதி செய்தல், அதற்கான சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், பன்னாட்டு ஓட்டுநர் உரிமங்கள் உட்பட ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், நடத்துநர் உரிமங்கள் வழங்குதல் மற்றும் சாலை விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்;

(iii) வரிகள் மற்றும் கட்டணங்களை வசூலித்தல், வாகனங்கள் வெளியிடும் புகையினால் மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துதல், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல், அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள் அமைப்பதில் துணைபுரிதல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.

## 5. வருவாய்

ஒவ்வோர் ஆண்டும் போக்குவரத்துத் துறை கூடுதலாகச் சராசரியாக 14 சதவீத வருவாயை ஈட்டுகிறது. இத்துறை 2005-2006 ஆம் நிதியாண்டில், ரூ.1130.14 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது கடந்த நிதியாண்டைவிட (2004-2005) ரூ.112 கோடி கூடுதலாகும். 2006-2007 நடப்பு நிதியாண்டிற்கு இத்துறைக்கு ரூ.1253 கோடி இலக்கினை அரசு நிர்ணயம் செய்துள்ளது.

மேலும் இத்துறையின் வருவாயைக் கூட்டுவதற்கு, செயலாக்கப் பிரிவு தீவிரமாகச் செயல்பட்டு, வாகனங்களைச் சோதனை செய்து, அனுமதிச் சீட்டு இல்லாதவர்கள், ஓட்டுநர் உரிமம் இல்லாதவர்கள், அதிகச் சுமை ஏற்றுபவர்கள் போன்றவர்களிடமிருந்து அபராதம் வசூலிப்பதுடன், வரி

செலுத்தத் தவறியவர்களிடமிருந்து இணக்கக் கட்டணம் மற்றும் பிற அபராதம் வசூலிக்கப்பட்டு, அரசுக்குக் கூடுதல் வருவாய் ஈட்டப்படுகிறது. மேலும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உள்ள ஆன் லைன் டேட்டா (on-line data) மூலம் வரி ஏய்ப்போரின் பட்டியல் பெறப்பட்டு, குறிப்பிடத்தக்க அளவு வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துத் துறையின் செயலாக்கப் பிரிவும், சோதனைச் சாவடிப் பணியாளர்களும், வாகனங்களின் அனுமதிச் சீட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு வாகனங்கள் இயக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வரிகள் மற்றும் கட்டணங்கள் வாயிலாக இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் குறித்த விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

**போக்குவரத்துத் துறையின் வருவாய் வளர்ச்சி**




**8. வரி விதிப்பு**

தமிழ்நாட்டில் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம் மற்றும் 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளின்கீழ் வாகன வரி வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு



வகையான வாகனத்திற்கும் எந்த அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறது என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்குகிறது. வரி விதிப்புக் கொள்கையில் அரசு கையாளும் முறை எளியது மற்றும் சீரானது.

| வாகன வகை | வரி விதிப்பு முறை |
|---|---|
| பயணிப் பேருந்துகள்<br>பெருநகரப் பேருந்து<br>நகரப் பேருந்து<br>புறநகர்ப் பேருந்து<br>விரைவுப் பேருந்து<br>மாற்றுப் பேருந்து<br>சிற்றுந்து<br>ஒப்பந்த ஊர்திகள்<br>ஆம்னி ஊர்திகள்/மேக்சி கேப் வண்டிகள்<br>தனியார் வண்டிகள்<br>கல்வி நிலையப் பேருந்துகள் | இருக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் காலாண்டுக்கு ஒரு முறை |
| சரக்கு வண்டிகள்<br>உழுவை, இழுவை இணைந்த வண்டிகள் | வண்டியின் மொத்த எடையின் அடிப்படையில் காலாண்டுக்கு ஒரு முறை |
| உழுவை வண்டிகள் | வெற்று வாகன எடை அடிப்படையில் காலாண்டுக்கு ஒரு முறை |
| ரிக் வண்டிகள் மற்றும் கட்டடம் கட்டும் உபகரண வண்டிகள் | ஆண்டு வரி – நிர்ணயிக்கப்பட்ட தொகை அடிப்படையில் |
| நான்கு சக்கர வாகனங்கள் (சொந்தப் பயனுக்கானவை) | ஆயுட்கால வரி – வண்டியின் விலையின் அடிப்படையில் |
| இரு சக்கர வாகனங்கள் ஆயுட்கால வரி | விசைத் திறன் அடிப்படையில் |
| சுற்றுலா சிருந்துகள்<br>வாடகைச் சிருந்துகள்<br>ஆட்டோ ரிக்ஷாக்கள் | அனுமதிக் காலத்துடன் தொடர்புடைய 5 ஆண்டுகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட வரி |
| பசுமை வரி – போக்குவரத்தல்லாத வாகனங்கள் | முதலில் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை |
| பசுமை வரி – போக்குவரத்து வாகனங்கள் | முதலில் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 7 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்கள் ஆண்டுக்கு ஒரு முறை |

தமிழ்நாட்டில் மோட்டார் வண்டிகள் மீதான வரி விதிப்பு விவரங்கள் பின்வருமாறு:–

| வண்டியின் வகை | வரி விதிப்பு முறை | திருத்தப்பட்ட வரி வீதம் | –ஆம் தேதியிலிருந்து |
|---|---|---|---|
| சிற்றுந்து | பயணி இருக்கை அடிப்படையில் | சமவெளிப் பகுதிகளில் ரூ.200/–(**) (மேல் வரி உட்பட) மலைப் பகுதிகளில் ரூ.125/– (**) (மேல் வரி உட்பட) | 1-10-2004 |
| பயணிப் பேருந்துகள் | | | |
| பெருநகரப் பேருந்து | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.100/– (**) (மேல் வரி உட்பட) | 1-4-2003 |
| நகரப் பேருந்து | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.357.50/–(**) (மேல் வரி உட்பட) | 1-4-2003 |
| புறநகர்ப் பேருந்து மற்றும் விரைவுப் பேருந்து | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.500/– (**) (மேல் வரி உட்பட) | 1-4-2003 |
| ஆம்னி பேருந்து | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.3,000/– (**) | 1-12-2001 |
| மேக்சி கேப் | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.275/–(**) | 1-1-2006 |
| தனியார் பணி வாகனம் | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.150/–(**) | 1-4-2003 |
| கல்வி நிறுவன வாகனம் | பயணி இருக்கை அடிப்படையில் | ரூ.150/–(**) | 1-8-2003 |
| ஆட்டோரிக்ஷா | அனுமதிச் சீட்டு நடப்பிலுள்ள 5 வருட காலத்திற்கும் ஒட்டுமொத்தமாக நிர்ணயிக்கப்பட்ட வரி | ரூ.1400/– | 1-4-1999 |
| சாதாரணச் சீருந்து | | ரூ.4000/– | 1-12-2001 |
| சுற்றுலா சீருந்து | | ரூ.6500/– | 1-12-2001 |
| சரக்கு வண்டி | பதிவு செய்த சுமையுடன் வாகனத்தின் எடை | வாகனத்தின் அனுமதிக்கப்பட்ட மொத்தச் சுமை எடையின் அளவு 3,000 கிலோ கிராம் முதல் 15,000 கிலோ கிராம் வரை ரூ.600/– முதல் ரூ.2,500/– வரையும் மற்றும் 15,000 கிலோ கிராமிற்கு மேல் ஒவ்வொரு 250 கிலோ கிராமிற்கு (அல்லது) அதன் பகுதிக்கு ரூ.75/–வீதமும் வசூலிக்கப்படுகிறது. | 1-12-2001 |
| சரக்கு வண்டி– தொடர்ச்சி | பதிவு செய்த சுமையுடன் வாகனத்தின் எடை– தொடர்ச்சி | 15000 கி.கி. எடை கொண்ட பல அச்சு கொண்ட சரக்கு வாகனங்களுக்கு ரூ.2300/–ம் அதற்கு மேல் கூடுதலான 250 கிலோ கிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.50/– வீதமும் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. | 1-4-2003 |
| இரு சக்கர வண்டிகள் 50 சி.சி.க்கும் குறைவான வண்டிகள் | இயந்திரக் கொள்ளளவுத் திறனை அடிப்படையாகக் கொண்டு | ரூ.1000/– ஆயுட்கால வரி | 22-2-2002 |
| 50 சி.சி.க்கு மேல் 75 சி.சி.க்குள் உள்ள வண்டிகள் | இயந்திரக் கொள்ளளவுத் திறனை அடிப்படையாகக் கொண்டு | ரூ.1,500/– ஆயுட்கால வரி | 1-4-2003 |
| 75 சி.சி.க்கு மேல் 170 சி.சி.க்குள் உள்ள வண்டிகள் | இயந்திரக் கொள்ளளவுத் திறனை அடிப்படை யாகக் கொண்டு | ரூ.2,500/– ஆயுட்கால வரி | 1-4-2003 |
| 170 சி.சி.க்கு மேல் உள்ள வண்டிகள் | இயந்திரக் கொள்ளளவுத் திறனை அடிப்படை யாகக் கொண்டு | ரூ. 3,000/– ஆயுட்கால வரி | 1-4-2003 |
| சீருந்து | வாகனத்தின் மொத்த விலையின் அடிப்படையில் | வாகனத்தின் மொத்த விலையில் 6 சதவீதம் | 1-8-2003 |
| மோட்டார் சைக்கிள் (போக்குவரத்து அல்லாத வாகனங்கள்) | வண்டி பதிவு செய்யப்பட்ட நாளி லிருந்து 15 ஆம் ஆண்டு முடிவடை கையில் | பசுமை வரி–ரூ.500/– (ஐந்து வருட காலத்திற்கு) | 1-8-2003 |
| இதர மோட்டார் வாகனங்கள் (போக்குவரத்து அல்லாத வாகனங்கள்) | வண்டி பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15ஆம் ஆண்டு முடிவடை கையில் | பசுமை வரி–ரூ.1,000/– (ஐந்து வருட காலத்திற்கு) | 1-8-2003 |

[2006 ஆகஸ்ட் 9

| | | | |
|---|---|---|---|
| போக்குவரத்து வாகனம் | வண்டி பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டு முடிவடைகையில் | பசுமை வரி – ரூ.500/– (ஆண்டொன்றுக்கு) | 1-8-2003 |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் | வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டு முடிவடைகையில் | பசுமை வரி – ரூ.200/– (ஆண்டொன்றுக்கு) | 10-6-2005 |

(**) ஓர் இருக்கைக்கு ஒரு காலாண்டுக்கு -

## 7. போக்குவரத்துத் துறை – அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்

### (i) மண்டல அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் மொத்தம் 7 மண்டல அலுவலகங்கள் முறையே சென்னை, விழுப்புரம், சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் கோவை, திருநெல்வேலி ஆகிய இரு மண்டல அலுவலகங்கள் மட்டும் இத்துறைக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 5 மண்டல அலுவலகங்களுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.

### (ii) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்

தற்போது தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 24 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 22 அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.

### (iii) பகுதி அலுவலகங்கள்

இத்துறையிலுள்ள 40 பகுதி அலுவலகங்களில் கோவில்பட்டி பகுதி அலுவலகம் மட்டும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. மீதமுள்ள 39 பகுதி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.



2006 ஆகஸ்ட் 9]

### (iv) ஓட்டுநர் தேர்வு தளம்

விண்ணப்பதாரர்களின் திறமையினைச் சோதித்து, திறமையான ஓட்டுநர்களைத் தெரிந்தெடுத்து ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப் போக்குவரத்துத் துறைக்குத் தேர்வு தளங்கள் இன்றியமையாதவையாகும். 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 40 பகுதி அலுவலகங்கள் ஆகியவற்றில் 19 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் மட்டும் தற்போது ஓட்டுநர் தேர்வு தளம் செயல்படுகின்றது. இதர அலுவலகங்களுக்கு நிலம் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

### (v) சோதனைச் சாவடிகள்

இத்துறையின்கீழ் மொத்தம் 19 சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. அவற்றில் 18 சோதனைச் சாவடிகள் அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி மாநில எல்லைகளின் அருகில் செயல்படுகின்றன.

### (vi) சுற்றுக் கண்காணிப்பு நிழற்படக் கருவிகள்

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்களின் தலையீட்டைத் தடுத்து, பொது மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும்பொருட்டு, சுற்றுக் கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் ரூ.7.00 இலட்சம் செலவில் சென்னை கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் மையம் ஆகிய நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கருவியில் உள்ள அகண்ட அலை வரிசைகள், போக்குவரத்து ஆணையர், இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலைப் பாதுகாப்பு) மற்றும் சென்னை-23, 'இணைப் போக்குவரத்து ஆணையர் ஆகியோர் அலுவலகத்தின் அறைகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டியுடன் இணைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள சென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் நடப்பு ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 8. போக்குவரத்துத் துறையினைக் கணினிமயமாக்குதல்

போக்குவரத்துத் துறையைக் கணினிமயமாக்குதல்மூலம் பொது மக்களுக்கு விரைவான, திறமையான சேவையை அளிக்க ஏதுவாகும். இதனால் போக்குவரத்து அலுவலகங்களில் பொது மக்கள் காத்திருக்கும் நேரம் தற்போது கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகன விவரங்களும், ஓட்டுநர்

[2006 ஆகஸ்ட் 9

உரிமம் பெற்றவர் விவரங்களும் கணினிப் பதிவில் இடம் பெறுவதால், போலியான உரிமங்கள்/சான்றிதழ்கள் பெறும் சாத்தியக்கூறு ஒழிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிகாரிகள் வாகன வரி வசூல் விவர அறிக்கைகளை உடனுக்குடன் தயாரிக்க முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, இம்முறையின்மூலம் ஒளிவுமறைவற்ற பணி உறுதிப்படுத்தப்படுகிறது. இக்குறிக்கோளை எய்தும்பொருட்டு, போக்குவரத்துத் துறையின் அனைத்து அலுவலகங்களையும் கணினிமயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக மாநிலப் போக்குவரத்து அதிகாரி அலுவலகம், 13 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 3 பகுதி அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. பின்பு, 32 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 8 பகுதி அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டன.

7 மண்டலப் போக்குவரத்து அலுவலகங்கள், 29 பகுதி அலுவலகங்கள் மற்றும் மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றங்கள் ஆகியவற்றைக் கணினிமயமாக்க ரூ.7.00 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் 2006 டிசம்பர் இறுதிக்குள் முடிக்கப்படும்.

**இணையதளம்**

பொது மக்கள் இத்துறையின் பணியைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வகையில் இணையதளம் ஒன்று "http:\\tn.gov.in\sta" உள்ளது. இந்த இணையதளம்மூலம் பொது மக்கள் பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம், பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றை எளிதாகப் பெறுவதற்கான நடைமுறையினை அறிந்துகொள்ளலாம். இது தவிர, குடிமக்கள் சாசனம், புள்ளியியல் விவரம், வரி விவரம், அலுவலக அமைவிடம் ஆகியவற்றைப் பற்றியும் இந்த இணையதளம்மூலம் அறிந்து கொள்ளலாம்.

பொது மக்கள் தங்கள் குறைகளை/புகார்களை இணையதள முகவரி "http:\\stahelpline.tn.nic.in" மூலம் அனுப்பலாம். 48 மணி நேரத்திற்குள் குறைகளைக் களைவதற்குப் போக்குவரத்துத் துறையின் சம்பந்தப்பட்ட அலுவலகங்களால் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## 9. சாலைப் பாதுகாப்பு

சாலை விபத்துக்களைக் கணிசமான அளவிற்குக் குறைப்பதும், விபத்துக்கள் குறிப்பிடத்தக்க அளவு ஏற்படாமல் தவிர்ப்பதும், பொது



2006 ஆகஸ்ட் 9]

மக்களுக்கு சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி எடுத்துரைப்பதும் அரசின் முக்கியப் பணியாக உள்ளது.

சாலைப் பாதுகாப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதி தமிழக அரசு 2000 ஆம் ஆண்டில் "சாலைப் பாதுகாப்பு நிதி" ஒன்றினை உருவாக்கியது. விபத்துக்களைத் தடுப்பதற்காக சாலைச் சந்திப்புகளை மேம்படுத்தல், தானியங்கி சமிக்ஞை விளக்குகளை நிறுவுதல், புதிய போக்குவரத்து சைகைப் பலகைகளை நிறுவுதல் போன்ற பல திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. மேலும், வாகன ஓட்டுநர்களுக்கு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகப் பயிற்சி அளிக்கப்படுவதுடன் மாவட்டந்தோறும் வாகன ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை மற்றும் உடல் நலம் குறித்த மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இத்துறையின் செயலாக்க அலுவலர்கள் சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கண்டிப்புடன் செயல்படுத்துகின்றனர். சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் ஏனைய திட்டங்கள் பல்வேறு அரசுத் துறைகள், அரசு சாரா அமைப்புகள், ஆட்டோ மொபைல் அசோசியேசன் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகின்றன. போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் தகவல் மையம் ஒன்றை அமைக்கக் கருதப்படுகிறது. இது பலதரப்பட்ட மக்களும் இத்துறையைப் பற்றி அறிந்துகொள்வதற்கான களஞ்சியமாக விளங்கும்.

வாகனங்களின் அதிவேகமும், குடிபோதையில் வாகனங்களை ஓட்டுவதுமே விபத்துக்களுக்கு முக்கியக் காரணங்கள் என்று துறை அண்மையில் நடத்திய ஆய்விலிருந்து தெரிய வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தும்பொருட்டு, திறன் வாய்ந்த விழிப்புணர்ச்சி முகாம் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. இத்துறையின் செயலாக்கப் பணியாளர்கள், தேசிய நெடுஞ்சாலை ரோந்துப் பணியாளர்களுடன் இணைந்து பணியாற்றி, அதிவேகமாகச் செல்லும் வாகனங்களைத் தடுத்து நிறுத்தி, தக்க தண்டனை வழங்குவதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழக அரசின் உள் துறைச் செயலாளரின் தலைமையின்கீழ் பல்வேறு துறைத் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பல்வேறு துறைகளுக்கிடையேயான குழு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இக்குழு, சாலைப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை நல்குவதுடன் சாலைப் பாதுகாப்புத் திட்டத்தையும் கண்காணிக்கிறது.

**சாலைப் பாதுகாப்புப் பணிகள்**

- ⇨ இம்மாநிலத்தில் அரசு பின்பற்ற வேண்டிய சாலைப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்.
- ⇨ மாநில சாலைப் பாதுகாப்புக் குழுவின் முடிவுகளைச் செயல்படுத்துதல்.
- ⇨ அனைத்து மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல்.
- ⇨ சாலை விபத்து குறித்து புள்ளிவிவரங்களைச் சேகரித்து ஆய்வு செய்து சாலை விபத்துக்கான காரணங்களைக் கண்டறிந்து சாலையை மேம்படுத்துவதற்காக நிவாரண நடவடிக்கைகள் எடுக்குமாறு தொடர்புடைய முகவரமைப்புகளுக்கு ஆலோசனை கூறுதல்.
- ⇨ போக்குவரத்து விளக்குகளை நிறுவுதல், தேவைப்படுமிடங்களில் சாலையின் நடுவே தடுப்புகள் அமைத்தல் போன்ற பணிகளைச் செய்தல்.
- ⇨ தங்குதடையற்ற போக்குவரத்துக்காக, சாலைத் தடுப்புகள், பிரதிபலிப்பான்கள் மற்றும் போக்குவரத்து சைகைப் பலகைகள் நிறுவுதல்.
- ⇨ . ஓட்டுநர்களுக்கு மேம்படுத்தப்பட்ட முறையில் பயிற்சியளித்து சோதனை செய்தல், சாலைப் பாதுகாப்புக் கல்வி முகாம்கள் தொடர்பாகத் திட்டங்கள் தயாரித்தல், அவற்றின்மூலம் சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வைப் பொது மக்களிடம் ஏற்படுத்துதல்.
- ⇨ இந்நோக்கத்திற்காக தேசிய நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்களை அமைத்து, ரோந்துப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வையிடுதல்.
- ⇨ குறிப்பிட்ட சாலையில் பாதுகாப்புத் திட்டங்களைத் தெரிவித்து, அவற்றை நிறைவேற்ற சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் நிதியுதவி வழங்குதல்.
- ⇨ சாலைப் பாதுகாப்புப் பணிகளில் அரசு சாரா அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து அவர்களின் பங்கேற்பையும், ஏனைய அரசுத் துறைகள் மற்றும் செயல் அலுவலர்களின் பணிகளையும் ஊக்குவித்தல்.



- ⇨ விபத்தில் காயமுற்றோர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் துரித நிவாரணம் வழங்குவதற்கு, மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயத்தில் உள்ள வழக்குகளை வேகமாகத் தீர்வு செய்தல்.
- ⇨ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், காவல் மற்றும் போக்குவரத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, வாகனங்களால் மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்தி, அது குறித்துப் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## 10. சாலைப் பாதுகாப்பு நிதி

சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்க சாலைப் பாதுகாப்பு நிதியை அரசு ஏற்படுத்தியுள்ளது. போக்குவரத்து மற்றும் காவல் துறையினரால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம், அபராதத் தொகை ஆகியவற்றிலிருந்து ஒவ்வோராண்டும் இதற்கு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த நிதியானது உள் துறைச் செயலாளர் தலைமையின்கீழ் அமைந்த துறைகளுக்கிடையிலான குழுவால் நிருவகிக்கப்படுகின்றது.

இந்நிதியிலிருந்து இதுவரை சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரம் வருமாறு:—

| நிதியாண்டு | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2001 - 2002 | 3.75 |
| 2002 - 2003 | 5.00 |
| 2003 - 2004 | 5.00 |
| 2004 - 2005 | 5.00 |
| 2005 - 2006 | 6.00 |
| 2006 - 2007 | 6.00 |

இது தவிர சாலைப் பாதுகாப்பு நிதி உதவியுடன் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் வாரமான சாலைப் பாதுகாப்பு வாரத்தின்போது ஓட்டுநர்களுக்குக் கண் பரிசோதனை செய்யப்படுவதுடன் பொது மக்கள், கல்லூரி/பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் பின்புறத்தில் சாலைப் பாதுகாப்பு வாசகங்களை எழுதி வைப்பதற்காக சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது.

## 11. சாலைப் பாதுகாப்புக் குழு

1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 215 ஆம் பிரிவின்கீழ் தமிழ்நாட்டில் "சாலைப் பாதுகாப்பு ஆலோசனைக் குழு" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்டச் சாலைப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள் உள்ளாட்சிக்குட்பட்ட பல்வேறு சாலைப் பாதுகாப்பு சம்பந்தமான பணிகளைக் கண்காணித்து, செயல்படுத்தி வருகின்றன.

## 12. விபத்து– அவசர சிகிச்சை மையங்கள்

அதிகரித்து வரும் வாகனப் பெருக்கம் மற்றும் சாலை விபத்துக்களைக் கருத்திற்கொண்டு, விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்கும் நோக்குடனும், விபத்துக்குள்ளானவர்கள் அல்லது அவர்களது உறவினர்கள் விரும்புகின்ற மருத்துவமனைகள்மூலம் மேல் சிகிச்சை அளிக்கும் நோக்குடனும் தேசிய நெடுஞ்சாலைகள்/மாநில நெடுஞ்சாலைகள் அனைத்திலும், ஒவ்வொரு 50 கி.மீ. இடைவெளியில் விபத்து அவசர சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களைத் தொடர்புகொள்ள வசதியாக, பிஎஸ்என்எல். நிறுவனத்தினர் கட்டணம் இல்லாத் தொலைபேசி எண் "1073"-ஐ வழங்கியுள்ளனர்.

ஒப்பளிக்கப்பட்ட 100 அவசர சிகிச்சை மையங்களில், தற்போது 87 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது செயல்பட்டு வரும் 87 மையங்களில், 50 மையங்கள் முற்றிலும், தனியார் மருத்துவமனைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் (NGO) ஆகியவற்றால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 37 மையங்களுக்கும் மையம் ஒன்றுக்கு அரசால் மாதந்தோறும் அதிகபட்சம் ரூ.40,000/-வரை அல்லது உண்மையில் ஏற்படும் செலவு, இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை அரசு, மாதாந்திர தொடரினச் செலவாக அளித்து வருகிறது. இந்த விபத்து அவசர சிகிச்சை



மையங்களின் சேவைகள்மூலம் இதுவரை 34,426 நபர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

**விபத்துக்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கிடையிலான ஒப்பீட்டு விவர அறிக்கை**

| ஆண்டு | தமிழ்நாட்டில் சாலை விபத்துக்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை | | | மொத்த வாகனங்களின் எண்ணிக்கை | விபத்துக் களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | மொத்த விபத்துக்கள் | உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள் | இறந்தவர்களின் எண்ணிக்கை | | |
| 2001 | 51,978 | 8,579 | 9,571 | 55,59,731 | 0.93 |
| 2002 | 53,503 | 9,012 | 9,939 | 60,41,312 | 0.89 |
| 2003 | 51,025 | 8,393 | 9,275 | 65,91,224 | 0.77 |
| 2004 | 52,508 | 8,733 | 9,507 | 72,05,847 | 0.73 |
| 2005 | 51,152 | 8,358 | 9,215 | 79,66,200 | 0.64 |
| 2006 ஏப்ரல் வரை | 22,973 | 4,054 | 4,374 | 82,21,730 | 0.28 |

## 13. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு

சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களது வயது, சம்பாதிக்கும் திறன், விபத்துக்கான காரணம் ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீடு வழங்க, 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம் வகை செய்கிறது. தவறு யார் செய்திருந்தாலும் விபத்துக்குள்ளானவர்களுக்குக் குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை வழங்க இச்சட்டம் மேலும் வகை செய்கிறது. சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து வருவாய்க் கோட்டாட்சியர்மூலம் கீழ்க்காணும் அளவில் நிதியுதவி வழங்கப்படுகிறது:

| வ.எண் | பாதிப்பின் தன்மை | இழப்பீட்டுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | இறப்பு | 10,000 |
| 2. | நிரந்தரச் செயலிழப்பு | 6,000 |
| 3. | ஒரு கண் அல்லது ஓர் உறுப்பு இழப்பு | 4,000 |
| 4. | இதர இனங்கள் (சிறு காயங்கள்) | 500 |

மாநிலமெங்கும் நிறுவப்பட்டுள்ள மோட்டார் வண்டிகள் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்மூலம், பாதிக்கப்பட்டவர்களின் இழப்பீட்டுக் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.

தவிரவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளின் அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிரிழப்பிற்கு ஆளான நபர்களுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. போக்குவரத்துக் கழகப் பேருந்துகளினால் ஏற்பட்ட சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கும், பிற வாகனங்களால் ஏற்பட்ட விபத்தினால் உயிரிழந்த தகுதியுடையவரின் (deserving cases) குடும்பத்திற்கும் உதவித் தொகையாகத் தலா ரூ.50,000/-ம், கடுமையாகக் காயம் அடைந்தவர்களுக்கு ரூ.15,000/-ம் வழங்கப்படுகிறது.

## 14. மாசுக் கட்டுப்பாடு

காற்று மாசுபடுவதற்கு வாகனங்கள் வெளியேற்றும் புகை ஒரு முக்கியக் காரணமாகும். 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளில் ஒவ்வொரு வகையான வண்டியும் வெளியேற்றக்கூடிய அனுமதிக்கத்தக்க புகையின் அளவு விவரங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வண்டிகளின் எண்ணிக்கை அபரிமிதமாக உயர்ந்துள்ளதால் ஏற்படும் வாகன மாசுவின் விகிதம் வெகுவாக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் சென்னை உட்பட 9 மாநகரங்கள் வாகனங்களின்மூலம் அதிக மாசுபடும் மாநகரங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளன. எனவே, வாகனத்தால் ஏற்படும் மாசு அளவைக் குறைக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்போது தமிழ்நாட்டில் கணினிமயமாக்கப்பட்ட 263 தனியார் வாகனப் புகை சோதனை மையங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரத்தில் இயக்கப்பட்டு வரும் ஆட்டோ ரிக்ஷாக்களில் படிப்படியாக மாற்று எரி பொருளாகப் பெட்ரோலிய திரவ எரிவாயு உபயோகிப்பதற்கான நடவடிக்கைகளும் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன. தற்போது சென்னை மாநகரில், ஏறத்தாழ 23 பெட்ரோலிய திரவ எரிவாயு நிரப்பும் நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் சென்னையில் உள்ள அரசுத் துறை வாகனங்களுக்கும் பெட்ரோலிய திரவ எரிவாயு அமைப்பைப் பொருத்தும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும் பெட்ரோலிய திரவ எரிவாயு அமைப்பை வாகனங்களில் பொருத்துவதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி வண்டிகளைட்





பயன்படுத்துவோருக்குப் பயிற்றுவிக்க விழிப்புணர்வு இயக்கம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும் 7 மண்டல அலுவலகங்களுக்கும், 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் வாகனங்கள் வெளியேற்றும் புகையின் மாசுத் தன்மையைக் கண்டறியவும், திடீர் வாகன சோதனை மேற்கொள்ளவும் ஏதுவாக, மாசுக் கட்டுப்பாடு உபகரணங்களை மத்திய அரசின் உதவியுடன் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 15. புதிய திட்டங்கள்

### (i) போக்குவரத்துத் துறையில் பொதுச் சேவையை மேம்படுத்த நடவடிக்கைகள்

பழகுநர் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், உரிமங்களைப் புதுப்பித்தல் மற்றும் புதிய ஓட்டுநர் உரிமங்கள் வழங்கக் கோரும் விண்ணப்பதாரர்களுக்கு விரைந்து காலதாமதமின்றி உரிமங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் போக்குவரத்துத் துறை முனைப்புடன் செயல்படுகிறது.

இந்த இன்றியமையாப் பணிகளை விரைந்து முடிப்பதற்கும், போக்குவரத்துத் துறை அலுவலகங்களிலிருந்து இடைத்தரகர்களைக் களைவதற்கும் அலுவலக நடைமுறைகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கு மேற்கூறிய உரிமங்களை விரைந்து வழங்குவதற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் சிறப்பு முகப்புகள் (counters) அமைக்கப்பட்டுள்ளன. பழகுநர் உரிமங்கள் பெற வருபவர்களுக்கு வகுப்பு நேரம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. 2005-2006-ல் ஒவ்வோர் இனத்தின் மீது வழங்கப்பட்ட உரிமங்கள் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (அ) பழகுநர் ஓட்டுநர் உரிமங்கள் | - | 10,09,920 |
| (ஆ) ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பித்தல் | - | 5,92,125 |
| (இ) புதிய ஓட்டுநர் உரிமங்கள் | - | 6,95,104 |

ஒவ்வோராண்டும் உரிமங்கள் பெற வருவோரின் எண்ணிக்கை தோராயமாக 10 சதவிகிதம் அதிகரிக்கிறது என்று மேற்கூறிய புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. லேமினேட் செய்யப்பட்ட ஓட்டுநர் உரிமங்களைப் பொது மக்களுக்கு விரைந்து வழங்குவதற்காக வட்டாரப்

[2006 ஆகஸ்ட் 9

போக்குவரத்து அலுவலகங்களுக்குக் கணினிகள், டிஜிட்டல் கேமராக்கள் மற்றும் செயல்முறை அலகுகள் (Process units) வழங்கப்பட்டுள்ளன.

பொது மக்களுக்குப் பழகுநர் ஓட்டுநர் உரிமங்களை விரைந்து வழங்குவதற்கான செயற்பாடுகள் மேலும் எளிதாக்கப்பட்டுள்ளன. இந்நடைமுறையினால் உரிமங்கள் கோரி விண்ணப்பிப்பவர்கள் கீழ்க்கண்ட சிறப்பு முகப்புகளில் உரிமங்களுக்கான கட்டணங்களைக் கட்ட இயலும். அதன் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| முகப்பு எண் 1 - | பழகுநர் ஓட்டுநர் உரிமங்கள் |
| முகப்பு எண் 2 - | ஓட்டுநர் உரிமங்களை புதுப்பித்தல் |
| முகப்பு எண் 3 - | புதிய ஓட்டுநர் உரிமங்கள் |

**(ii) பழகுநர் உரிமங்கள்**

பழகுநர் உரிமங்கள் வழங்குவதற்காகவே அமைக்கப்பட்ட சிறப்பு முகப்பு எண் 1, காலை 9-30 மணி முதல் செயல்படுகிறது. மனுதாரர்கள், பழகுநர் உரிமங்களை விரைந்து பெறுவதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பயிற்சி வகுப்புகள் மற்றும் தேவையான சாலைப் பாதுகாப்பு தொடர்பான அறிவுரைகள் மோட்டார் வாகன ஆய்வாளர்களால் காலை 9-45, 10-00, 10-15 மற்றும் 10-30 மணி என குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்படுகின்றன.

**(iii) ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பித்தல்**

சிறப்பு முகப்பு எண் 2-ல் ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பிப்பதற்கான கட்டணங்கள் பெறப்படுகின்றன. இப்பணி காலை 10-00 மணி முதல் தொடங்குகிறது. இம்மேம்பாட்டுப் பணியினால் ஓட்டுநர் உரிமங்கள் 30 நிமிடத்திற்குள் புதுப்பிக்கப்படுகின்றன.

**(iv) புதிய ஓட்டுநர் உரிமங்கள்**

புதிய ஓட்டுநர் உரிமங்களுக்கான விண்ணப்பதாரர்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகப்பு எண் 3-ல் கட்டணங்களைச் செலுத்தலாம். இவர்களது வாகன ஓட்டும் திறமையைத் தேர்வு தளங்களில் காலை 10-00 மணி முதல் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆய்வு செய்கின்றனர். தற்போதுள்ள எளிய முறையினால் ஓட்டுநர் திறனாய்வுத் தேர்வு பெற்றவர்கள் ஒவ்வொருவரும் 45 நிமிடத்திற்குள்



2006 ஆகஸ்ட் 9]

லேமினேட் செய்யப்பட்ட புதிய ஓட்டுநர் உரிமங்கள் பெற இயலும். இந்த நடைமுறையினால், புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குவது தொடர்பான பணி முழுவதும் முறையாக முடிக்கப்பட்டு, உரிமம் 45 நிமிடத்திற்குள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது.

**(v) பள்ளி / கல்லூரி வாகன விபத்தினைத் தவிர்க்கும் வழிமுறைகள்**

பள்ளிகளுக்கு மாணவர்களை அழைத்து வரும் வாகனங்களான ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள், வேன்கள், பேருந்துகள் ஆகியவற்றில் மிக அதிகமாக மாணவர்களை ஏற்றி வருகிறார்கள் என்றும், அவ்வாகனங்கள் விபத்துக்களுக்குள்ளாகி பள்ளி மாணவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, அவ்வாகனங்களில் ஏற்றி வரும் மாணவர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்தவும், அவ்வாகன ஓட்டுநர்கள் சாலைப் பாதுகாப்பு விதிகளை முறையாகக் கடைப்பிடிக்கவும், பள்ளி, கல்லூரிப் பேருந்துகள் அனைத்திற்கும் தனி வண்ணம் ஒதுக்கி, கல்வி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகளைப் பிறப்பிக்கவும், உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள நெறிமுறைகளின்படி தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

**(vi) உயர் பாதுகாப்புப் பதிவெண் பலகை**

குற்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக, வாகனங்களின் பதிவெண் தகடுகளை மாற்றியமைத்தல்/திருத்துதல் போன்றவற்றைத் தவிர்க்கும்பொருட்டு, மைய அரசின் நெறிமுறைகளின்படி, தேசிய பாதுகாப்பு நலனைக் கருத்தில் கொண்டு, புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கும், ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கும் உயர் பாதுகாப்புப் பதிவெண் தகடுகள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**(vii) பயணத் தடம் மற்றும் பயண நடை குறைப்பு செய்யப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் போக்குவரத்து வசதி**

பயணத் தடங்களும், பயண நடைகளும் குறைக்கப்பட்டதால் தனியார் பேருந்துகளைப் பொறுத்தவரையில் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள், சிற்றுந்துகள், அரசுப் பேருந்துகள் இயக்குவதன்மூலம் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, களையப்படும்.

[2006 ஆகஸ்ட் 9

**(viii) சொகுசுப் பேருந்துகளை வாடகைக்கு அமர்த்துதல்**

பயணிகளின் வசதிகளை மேம்படுத்த மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் தனியாரிடமிருந்து சொகுசுப் பேருந்துகளை வாடகைக்கு அமர்த்தி, இயக்குவதற்கான செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(ix) குடிபோதையில் வாகனம் ஓட்டும் ஓட்டுநர்களின்மீது நடவடிக்கை**

மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுவதைத் தடுக்கும்பொருட்டு, காவல் துறையினருக்கு 100 புதிய சுவாசப் பரிசோதனைக் கருவிகள் வழங்கப்படும். இச்சுவாசப் பரிசோதனைக் கருவிகளைப் பயன்படுத்தி, குடிபோதையில் வாகனம் ஓட்டிய ஓட்டுனர்களைச் சோதனை செய்து, மோட்டார் வாகனச் சட்டத்தின் விதித் துறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**(x) ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சி அளித்தல்**

விபத்தினை ஏற்படுத்திய ஓட்டுநர்களின் பெயர், முகவரி மற்றும் ஓட்டுநர் உரிம எண் போன்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையினை மாதந்தோறும் காவல் துறைத் தலைவரிடமிருந்து போக்குவரத்து ஆணையர் பெற்று, அவ்வாகன ஓட்டுநர்களுக்கான மறு பயிற்சி ரூ.25 இலட்சம் செலவில், காவல் துறையினருடன் இணைந்து மாவட்ட நிர்வாகம்/போக்குவரத்துத் துறை அலுவலர்கள்/அரசு சாரா நிறுவனங்கள்/கல்லூரிகள் ஆகியவற்றின்மூலம் நடத்தப்படும்.

**(xi) வாகனங்களின் முகப்பு விளக்குகளின் மையப் பகுதியில் கருப்பு வண்ணம் பூசுதல்**

இரவு நேரங்களில் வாகனங்களின் முகப்பு ஒளியினைக் கூட்டவும், குறைக்கவும் வாகனங்களிலே வசதிகள் இருப்பினும், அதனை வாகன ஓட்டுநர்கள் சரிவரப் பயன்படுத்தாததன் காரணமாக ஏற்படும் பெரும் விபத்துக்களைத் தடுக்க, அனைத்து வாகனங்களின் முகப்பு விளக்குகளின் மையப் பகுதியில் கருப்பு வண்ணம் பூசுதல் கட்டாயமாக்கப்படும்.

**(xii) கள்ளத்தனமாக இயக்கப்படும் ஆட்டோக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்களைக் கட்டுப்படுத்துதல்**

பெர்மிட்டை சரண் செய்த பின்னரும், வாகனத்தை மாற்றி வண்ணத்தை மாற்றாமலும் ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ஷேர்



2006 ஆகஸ்ட் 9]

ஆட்டோக்கள் கள்ளத்தனமாக இயங்கி வருகின்றன; இதனால், இந்த வாகனங்களில் பயணம் செய்கின்ற பொது மக்கள் விபத்து நோகையில் இழப்பீட்டுத் தொகையைப் பெற முடிவதில்லை. இந்த இடர்ப்பாட்டிலிருந்து பொது மக்களைக் காப்பாற்ற, மேற்சொன்ன வாகனங்களைத் தீவிரமாகக் கண்காணித்து, கடும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

**(xiii) சிற்றுந்து (Mini Bus)**

(i) சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களுக்கும், ஒரு மாவட்டத்திற்கு 250 சிற்றுந்து அனுமதி (பெர்மிட்) என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த சிற்றுந்து அனுமதிகளின் (பெர்மிட்) எண்ணிக்கை 7,000 ஆகும். அதில் இதுவரை வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளால் வழங்கப்பட்ட பெர்மிட்களின் எண்ணிக்கை 3,985 ஆகும். இன்னும் வழங்க வேண்டிய பெர்மிட்களின் எண்ணிக்கை 3,015 ஆகும். சிற்றுந்து பெர்மிட்டுகளைப் பயன்படுத்தாத மாவட்டங்களிலிருந்து அவற்றைப் பெற்று, 250 பெர்மிட்களுக்கும் அதிகமாக பெர்மிட்கள் தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்படுகிற பெர்மிட்களும் ஊராட்சி ஒன்றியம் வாயிலாகப் பரவலாக்கப்பட்ட அடிப்படையில் வழங்கப்படும்.

(ii) பேருந்து வசதியுள்ள தடத்தில் அதிக அளவாக 4 கி.மீட்டர் வரையிலும் பேருந்து வசதியில்லாத தடத்தில் மிகக் குறைந்த அளவாக 1 கி.மீ முதல் 4 கி.மீ. வரையிலும் இயக்கப்படும் சிற்றுந்துகளின் எண்ணிக்கை 650 ஆகும். இதுபோன்று அதிகமான சிற்றுந்துகள் போக்குவரத்து வசதியற்ற பகுதிகளில் மிகக் குறைந்த தொலைவே இயக்கப்படுவதால், இதனை மேம்படுத்துவதற்காகப் பேருந்து வசதியற்ற தடத்தில் குறைந்தபட்சம் 5 கிலோ மீட்டர் தொலைவுக்காவது இயக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) ஏற்காடு, ஏலகிரி, கொடைக்கானல், பழனி, தாளவாடி, ஆலங்காயம் (வேலூர் மாவட்டம்) போன்ற பேருந்து வசதியற்ற மலைப் பகுதிகளில் வாழும் கிராம மக்கள் பயனடைவதற்காக, நீலகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே அனுமதியளிக்கப்பட்டிருப்பதைப் போன்று, பேருந்து வசதியுள்ள தடத்தில் 4 கிலோ மீட்டர் முதல் 8 கிலோ மீட்டர் வரையில் வழித்தட நீளத்தை நீட்டித்து 24 கிலோ மீட்டர்

[2006 ஆகஸ்ட் 9

வரையிலான வழித்தடத்திற்கு மலைப் பகுதிகளில் சிற்றுந்து பெர்மிட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## பகுதி–2 திட்டங்கள், 2006–2007

### (xiv) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குப் புதிதாகச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

(i) திருச்சிராப்பள்ளியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடம் ரூ.145 இலட்சம் இறுதிச் செலவிலும் (தொடரா இனச் செலவு), 2006-07 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 50 இலட்சம் செலவிலும் கட்டப்படும்.

(ii) ஈரோட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடம் ரூ.125 இலட்சம் இறுதிச் செலவிலும் (தொடரா இனச் செலவு), 2006-07 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 50 இலட்சம் செலவிலும் கட்டப்படும்.

### (xv) புதிய ஓட்டுநர் தேர்ச்சிதளம் அமைத்தல்

ஓட்டுநர் உரிமம் கோரும் மனுதாரரின் வாகனம் ஓட்டும் திறனைச் சோதனை செய்ய ஏதுவாக ஒரு தேர்ச்சி தளம் கடலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ரூ.27 இலட்சம் இறுதிச் செலவிலும் (தொடரா இனச் செலவினம்), 2006-07 வரவு-செலவுத் திட்ட மதிபபீட்டில் ரூ.10 இலட்சம் செலவிலும் கட்டப்படும்.

### (xvi) தொலைபேசி இணைப்புகளுடன் நிகரிகள் (Fax) வழங்குதல்

போக்குவரத்துத் துறையின் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு இந்த நிதியாண்டில் ரூ. 2 இலட்சம் செலவில் (தொடரா இனச் செலவினம்), தொலைபேசி இணைப்புகளுடன் இணைந்த 20 நிகரிகள் வழங்கப்படும்.

### (xvii) ஒளி நகல் இயந்திரங்கள் (Xerox)

இந்த நிதியாண்டில் போக்குவரத்துத் துறையின் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு 15 ஒளி நகல் (Xerox) இயந்திரங்கள் ரூ.9 இலட்சம் (தொடராச் செலவினம்) செலவில் வழங்கப்படும்.



2006 ஆகஸ்ட் 9]

### (xviii) புதிய சீருந்து வாங்குதல்

போக்குவரத்து ஆணையரின் பயன்பாட்டிற்காக ஒரு புதிய சீருந்து (car) இந்த நிதியாண்டில் ரூ.5 இலட்சம் (தொடராச் செலவினம்) செலவில் வாங்கப்படும்.

### (xix) சுற்றுக் கண்காணிப்பு நிழற்படக் கருவி பொருத்துதல் (Closed Circuit Camera Monitoring System)

சென்னை மாநகரிலுள்ள மூன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகியவற்றில் இந்த நிதியாண்டில் ரூ.10 இலட்சம் (தொடராச் செலவினம்) செலவில் சுற்றுக் கண்காணிப்பு நிழற்படக் கருவி பொருத்தப்படும்.

## 16. முடிவுரை

இத்துறை, பொது மக்களுக்குப் பாதுகாப்பான, தொலைநோக்குத் திட்டத்துடன்கூடிய போக்குவரத்து வசதியை விரைந்து செய்து வருகிறது.

வாகனங்களைச் சோதனையிடுதல், மோட்டார் வாகன வரியை வசூலித்தல், இது தொடர்பான ஏனைய பணியுடன் மட்டும் போக்குவரத்துத் துறையின் பணி நின்றுவிடவில்லை. பொது மக்களுக்குத் திறமையான, விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வசதி செய்து தருவதுடன், போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பதற்கும், நம் மாநிலத்திற்குள் இயக்கப்படும் வாகனங்களுக்கு உயரிய தரம் வாய்ந்த சாலைப் பாதுகாப்பை எய்துவதற்கும் போக்குவரத்துத் துறை உறுதி பூண்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 9

# இணைப்பு II

(91 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. முன்னுரை

எந்த நாடும் சரியான வேகத்தில் முன்னேறுவதற்கு, காலத்திற்கு ஏற்ற நவீன, திறமையான போக்குவரத்து, அடிப்படையான உள்ளமைப்பாக அமைந்திருக்க வேண்டும். சரித்திரத்தை முழுமையாக நோக்கும்போது, எந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும், பொருத்தமான விரிவான ஆற்றல் மிக்க சாலைப் போக்குவரத்தே முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. தேசிய மற்றும் உலக நாடுகளைச் சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களின் பல்வேறு ஆய்வறிக்கைகளில் ஒரு பகுதி அல்லது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்களால் பெரிதும் விரும்பக்கூடிய சாலைப் போக்குவரத்து வசதியே முக்கிப் பங்களிக்கும் காரணக்கூறாக அமைவதாக சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, பயணம் செய்யும் இலட்சக்கணக்கான பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இத்தகைய சாலைப் போக்குவரத்து வளர்ச்சியில் அதிக முயற்சி எடுத்து வருகிறது. போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இயங்குகின்றன. போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முக்கியப் பங்கு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகள் வாங்குவதற்கு நிதி உதவி அளிப்பதும், மூலதனக் கடன்களை வழங்குவதுமாகும். இது தவிர, பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு (லிமிடெட்), சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை ஆகியவையும் அரசின் போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையில் செயல்படுகின்றன.

தென்னக ரயில்வே அவ்வப்போது மாநிலத்தில் தற்போதுள்ள இருப்புப் பாதைகளை அகலப்படுத்துவது அல்லது புதிய இருப்புப் பாதை அமைப்பது போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதேபோன்று, தபால் மற்றும் தொலைத் தொடர்புத்



2006 ஆகஸ்ட் 9]

துறைகளும், இந்திய அரசின் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகமும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட மத்திய அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் மாநில அரசின் முகவராகப் போக்குவரத்துத் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

### 2 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

**2.1** போக்குவரத்து இயக்கம் ஆரம்ப காலத்திலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பின்னர், 1956 ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர், அரசு 1976-ல் பட்டாபிராமன் குழு மற்றும் 1990-ல் தில்லைநாயகம் குழு என இரண்டு வல்லுநர் குழுக்களை, போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களை முழுமையாக ஆராய்ந்து, அவற்றைச் சீரமைப்பதற்கான வழிமுறைகளைத் தெரிவிப்பதற்காக அமைத்தது. மேற்படி இரு வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகளும் முடிந்த வரை செயல்படுத்தப்பட்டன.

### 2.2 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்

போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களைச் சீரமைத்து, அதன்மூலம் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவினைக் குறைக்கவும், மற்றும் போக்குவரத்துக் கழகங்களிடையே பேருந்து இயக்கத்தில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும் முதல் படியாக 21 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன. மாநிலத்தில் போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய ஒருங்கிணைக்கப்பட்ட நிலை சிக்கனமானதாகவும், திறமையானதாகவும் அமைந்துள்ளது.

**2.3** 30–6–2006 ஆம் நாள் நிலவரப்படி அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல் திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| சென்னை மாநகரப் பேருந்துகள் | 2,554 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 5,633 |
| புறநகர்ப் பேருந்துகள் | 6,065 |
| விரைவுப் பேருந்துகள் மாநிலத்திற்குள் | 522 |

[2006 ஆகஸ்ட் 9

| | |
|---|---|
| விரைவுப் பேருந்துகள் வெளி மாநிலங்களுக்கு | *273* |
| மலைப் பகுதிப் பேருந்துகள் | *524* |
| மொத்தப் பேருந்துகள் | *15,571* |
| உபரிப் பேருந்துகள் | *1,558* |
| **மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை** | ***17,129*** |

**பேருந்து இயக்கச் சாதனை**

2005–2006 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த இயக்க தூரம் 240.70 கோடி கி.மீ. ஆகும். முந்தைய ஆண்டுடன் இதனை ஒப்பிடுகையில் 3.74 கோடி கி.மீ. அதிகம் இயங்கியுள்ளது. 2004–2005-ல் 102.58 சதவீதமாக இருந்த மொத்த கி.மீ. செயல்பாட்டுத் திறன், 2005–2006-ல் 103.07 சதவீதமாக உயர்ந்தது. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் 15–5–2006 அன்று அதிகபட்ச ஒரு நாள் வருமானமாக ரூ. 12.90 கோடி ஈட்டியுள்ளன.

**2.4 செயல்பாட்டுத் திறன்**

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து சிறந்த செயல் திறன்களுக்காக, குறிப்பாக இயக்கப் பயன்பாட்டில் சிறந்த செயல் திறன், கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன், பயணிகளின் அடர்வு, எரிபொருள் சிக்கனம் முதலியவற்றில் தேசிய அளவில் விருதுகளைப் பெற்று வருகின்றன. பல்வேறு கடினமான சூழ்நிலைகளிலும் மேலே குறிப்பிடப்பட்ட விருதுகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

| | | |
|---|---|---|
| 1. | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (கி.மீ. இலட்சத்தில்) | 67.37 |
| 2. | நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 176 |
| 3. | பேருந்துகளின் உபயோகம் | 92.01% |
| 4. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகள் நீங்கலாக) | 97.32% |
| 5. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகளையும் சேர்த்து) | 103.26% |



2006 ஆகஸ்ட் 9]

| | | |
|---|---|---|
| 6. | பயணிகளின் பயன்பாடு | |
| | (அ) மாநகரம் மற்றும் நகரம் | 67.25% |
| | (ஆ) புறநகர் | 97.56% |
| | (இ) விரைவுப் பேருந்து | 90.39% |
| | (ஈ) மலைப் பகுதி | 103.34% |
| | மொத்தத்தில் | 83.67% |
| 7. | பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.11 |
| 8. | விபத்துக்கள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.31 |
| | மொத்த விபத்துக்கள் | 1,870 |
| | உயிரிழப்பு விபத்துக்கள் | 325 |
| | இறந்தவர்களின் எண்ணிக்கை | 376 |
| 9. | எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) | |
| | (அ) மாநகரம் மற்றும் நகரம் | 4.7 |
| | (ஆ) புறநகர் | 5.15 |
| | (இ) விரைவு | 5.25 |
| | (ஈ) மலைப் பகுதி | 3.85 |
| | சராசரியாக | 4.94 |
| 10. | 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்சின் ஆயில் | 6.37 லிட்டர் |
| 11. | கழிவு செய்யப்பட்ட உருளையின் ஓட்டம் | 1.54 இலட்சம் கி.மீ. |
| 12. | புதுப்பிக்கப்பட்ட உருளைப் பட்டையின் விகிதம் | 3.75 |
| 13. | ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் (தொழிற்கூடப் பணியாளர்கள் உட்பட) | 6.46 |

**3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை**

**3.1** போக்குவரத்துக் கழகங்களின் பல்வேறு குறியீடுகளின் செயல்பாட்டுத் திறன் சிறப்பாக அமைந்தபோதிலும், நிதிநிலையில் நெருக்கடி நிலவுகிறது. நிர்வாக மற்றும் இயக்கச் செலவுகள் அதிகரித்ததாலும், நாட்டிலேயே கிலோ மீட்டருக்கான மிகக் குறைந்த பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்படுவதனாலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்தச் செலவு அதிகரித்தது. இதனால் 2005–2006-ல் ரூ.397.36 கோடி நட்டம் (தணிக்கைக்கு முன்)

ஏற்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.513 கோடி நட்டம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.2 அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாடு

அதிவேக டீசல் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் பயன்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக ஒரு லிட்டர் அதிவேக டீசலுக்கு 4.72 கி.மீ.-ல் (ஜூன் 2005 முடிய) இருந்து 4.94 கி.மீ. (ஜூன் 2006 முடிய) ஆக உயர்ந்துள்ளது. டீசல் இயக்கத் திறன் மேம்பாடு காரணமாக ஏப்ரல் முதல் ஜூன் 2006 வரை சுமாராக ரூ.19 கோடி சேமிக்கப்பட்டுள்ளது. என்ஜின் ஆயில் உபயோகம் 10,000 கி.மீ. இயக்கத்திற்கு 7.27 லிட்டரிலிருந்து 6.37 லிட்டராகக் குறைந்துள்ளது (ஜூன் 2006 வரை).

### 3.3 டீசல் விலை அதிகரிப்பு

உலக அளவில் பெட்ரோலிய எண்ணெய்ப் பொருட்களின் விலையின் அடிப்படையில், டீசல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை மைய அரசு மாற்றி அமைக்கின்றது. ஆனால், அவ்விலை உயர்விற்கேற்ப, தமிழகத்தில் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை. அடிக்கடி பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வின் காரணமாக 2004–2005 ஆம் ஆண்டில் ரூ. 1,354 கோடியாக இருந்த டீசல் செலவினம், 2005–2006 ஆம் ஆண்டில் ரூ. 1,566 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது, கூடுதல் செலவினம் ரூ.212 கோடி ஆகும். இச்செலவினம் இந்த நிதியாண்டில் மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.4 நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள்

தொடர்ந்து ஏற்பட்டு வரும் நட்டங்களின் காரணமாகப் போக்குவரத்துக் கழகங்கள் 30-6-2006 அன்று பின்வரும் கடன் பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது:–

| விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் | 82.83 |
| உதிரிப் பாகங்கள், உருளிகள், மற்றவை வழங்கியவர்களுக்குச் செலுத்த வேண்டியது | 26.31 |
| விபத்து இழப்பீடாக நீதிமன்றங்களில் செலுத்த வேண்டியது | 119.77 |
| சட்ட ரீதியாகச் செலுத்தப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 501.56 |
| பணியாளர்கள் சிக்கனச் சங்கம் | 51.78 |
| இதர இனங்கள் | 33.85 |
| மொத்தம் | 816.10 |



### 4. பழைய பேருந்துகளைக் கழிவு செய்தல் மற்றும் புதிய பேருந்துகள் வாங்குதல்

போக்குவரத்துக் கழகங்களில் 1,000 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதற்காக அரசு நடப்பாண்டில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, போக்குவரத்துக் கழகங்களால் 2006–2007 ஆம் ஆண்டில் மேலும் 1,000 புதிய பேருந்துகள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திலிருந்து கடனுதவி பெற்று அறிமுகப்படுத்தப்படும். பழைய பேருந்துகளைக் கழிவு செய்து, புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தும் திட்டம் முறையாக எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும்.

### 5. மற்ற மாநிலங்களில் உள்ள பேருந்துப் பயணக் கட்டண அமைப்புடன் ஒப்பீடு

கிலோ மீட்டருக்கான பேருந்துக் கட்டணம் நாட்டிலேயே தமிழகத்தில்தான் மிகக் குறைவானதாகும். புறநகர்ச் சேவைக்கான தமிழ்நாட்டின் தற்போதைய பேருந்துக் கட்டண விகிதம் அண்டை மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு, அதன் விவரம் பின்வருமாறு:–

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6-12-2001 | 28 | - | 32 | 38 |
| ஆந்திரப் பிரதேசம் | 8-2-2006 | 38 | 44 | 49 | [illegible] |
| கேரளா | 25-11-2005 | 48 | 55 | 60 | 70 |
| கர்நாடகம் | 11-6-2006 | 37.50 | 48.50 | 60 | 67 |

பயணிகளின் நலன் கருதி தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணம் டிசம்பர் 2001–க்குப் பிறகு உயர்த்தப்படவில்லை.

### 6. சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களைத் தவிர்த்தல்

போக்குவரத்துக் கழகங்கள் வழங்க வேண்டியுள்ள விபத்து இழப்பீட்டுத் தொகை 1991–92 ஆம் ஆண்டில் ரூ.16.03 கோடியாக இருந்தது.

[2006 ஆகஸ்ட் 9

2005–2006 ஆம் ஆண்டில் (தணிக்கைக்கு முன்) ரூ.116 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்குப் பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை அளிப்பதில் அரசு தீவிரக் கவனம் செலுத்துகிறது. விபத்துக்களைத் தடுப்பதில் ஓட்டுநர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். முறையான புத்தொளிப் பயிற்சி, யோகா பயிற்சி, பாதுகாப்பு மருந்தகங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்பு குறித்து அறிவுறுத்தும் வகுப்புகள், பாதுகாப்பான ஓட்டுதலுக்குப் பரிசுத் திட்டங்கள், தொடர்ந்து 10 ஆண்டு காலத்திற்கு விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வு முதலியன விபத்தினைத் தவிர்த்து பாதுகாப்பாக ஓட்டுநர்கள் இயக்குவதை உறுதி செய்யும்பொருட்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்த சில நடவடிக்கைகளாகும். பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற, திறமை வாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல் மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிரப் பயிற்சிகளை சாலைப் போக்குவரத்து நிறுவனம் அளிக்கின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகளில் இப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய குறைந்தபட்ச கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பிலிருந்து, எஸ்.எஸ்.எல்.சி./பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சில போக்குவரத்துக் கழகங்களில் நெடுந்தூரப் பேருந்துகளில் இரவுப் பணியில் ஈடுபடும் ஓட்டுநர்களின் சிரமத்தினையும், பயணிகளின் பாதுகாப்பினையும் கருதி, தேவையான தடங்களில் இரண்டு ஓட்டுநர்களைப் பணியில் ஈடுபடுத்தும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

## 7. பயணிகளுக்கான வசதிகள்

சென்னையிலும், இதர முக்கிய நகரங்களிலுமுள்ள பேருந்து நிறுத்தங்களிலும், பேருந்து நிலையங்களிலும் இரவு நேரப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி மின்னொளி விளம்பரப் பலகைகள் [illegible]ருத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர வாகனங்களை பேருந்து நிலையங்களில் நிறுத்தி, பேருந்துப் பயணத்தைத் தொடர்வதற்கு இயலும் வகையில், சில பேருந்து நிலையங்களில் போதுமான இடங்களை



2006 ஆகஸ்ட் 9]

மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது. சென்னையிலிருந்து புறநகர், வெகுதூரப் பேருந்துகள் இயக்கம், புதிதாகக் கோயம்பேட்டில் அமைக்கப்பட்ட சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பயணிகளின் நலன் கருதி, புதிய பேருந்து நிலையத்தை சென்னையிலுள்ள அனைத்துப் பகுதிகளுடன் இணைக்கும் வகையில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பல புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதுவரை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி போக்குவரத்துக்கு இடையூறாக சாலைகளில் நிறுத்தப்பட்டிருந்த மாநகரப் பேருந்துகள் அனைத்தும், பழைய வெளியூர் பேருந்து நிலையத்திற்குள் நிறுத்தப்பட்டு, பயணிகளின் பாதுகாப்பும், நலனும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த அளவு குறைக்கப்பட்டுள்ளது.

## 8. பயணச் சலுகைகள்

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய பின்வரும் தரப்பினருக்கு பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன:

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்றம், சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள்.
2. மாணவர்கள்.
3. அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள்.
4. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் எல்லை/மொழிப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர் மற்றும் வாரிசுதாரர்கள், தமிழ் மொழியினைக் காக்கும்பொருட்டு மொழிப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக அரசிடமிருந்து மொழிக் காவலர் நிதி உதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் வயதடையாத வாரிசுதாரர்கள்.
5. புற்று நோயாளிகள், உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் பார்வையற்றவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்.
6. நாடகக் கலைஞர்கள்.

[2006 ஆகஸ்ட் 9

## 8.1 மாணவர் பயணச் சலுகை

அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் நோக்குடனும், அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்திற்கு உண்மையான பொருள் கொடுக்கும் நோக்குடனும், முதல் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கும், பள்ளியிலிருந்து வீட்டிற்கும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய இலவசப் பேருந்து பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இலவசப் பேருந்துப் பயணச் சீட்டுகள், எல்லா விடுமுறை நாட்களும் உட்பட அனைத்து நாட்களுக்கும் செல்லுபடியாகும். இதேபோன்று, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் வீட்டிலிருந்து கல்லூரிக்கும், தொழில்நுட்பப் பயிலகம், தொழிற்பயிற்சி நிலையம், தனியார் கலைக் கல்லூரிக்கும், பின் அவ்விடத்திலிருந்து வீட்டிற்கும், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய 50% சலுகைக் கட்டணப் பேருந்துச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகை, விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும் பொருந்தும். மேலும், சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்குப் பயணிக்க 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வரை வழங்கப்படுகின்றன.

மாணவர் பயணச் சலுகையினால் 2005-2006 ஆம் ஆண்டில் 25 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர். இத்திட்டத்தின்கீழ் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு அளிக்க வேண்டிய உதவித் தொகை ரூ.279 கோடியாகும். இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பயணச் சீட்டுக் கட்டணத்தின் முகமதிப்பு முழுமையாக அரசால் ஈடு செய்யப்படுகிறது. புறநகர்ப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, சலுகைப் பயணக் கட்டணத்தின் மதிப்பு, அரசு மற்றும் போக்குவரத்துக் கழகம் 56:44 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது.

## 8.2. பயணிகளுக்குச் சலுகைகள்

பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுப் பயணிகளின் நலன் கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்குப் பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர, குறிப்பிட்ட



2006 ஆகஸ்ட் 9]

நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில் 40 நடைகளுக்குரிய கட்டண விகிதம் மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

## 8.3 விருப்பம்போலப் பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள்

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம்போல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி நகர, மாநகரப் பகுதிகளில் எங்கு வேண்டுமானாலும் பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுப் பயணம் செய்யலாம்:-

| | | | |
|---|---|---|---|
| (1) | ஒரு நாள் பயணச் சீட்டு | - | ரூ. 30 |
| (2) | வாராந்திரப் பயணச் சீட்டு | - | ரூ. 160 |
| (3) | மாதாந்திரப் பயணச் சீட்டு | - | ரூ. 600 |

## 8.4 குழுவினருக்கு முன்பதிவுக் கட்டணச் சலுகை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 8 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் கொண்ட குழுவினர் முன் பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.

## 8.5 மூத்த குடிமக்களுக்குப் பயணச் சலுகை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 60 வயது நிரம்பியவர்கள் பயணம் செய்ய, முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.

## 9. தொழிலாளர் நலத் திட்டங்கள்

போக்குவரத்துக் கழகங்கள், அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலம் பேண, கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:-

1. பணி அடிப்படையிலான சிறப்பு சம்பள உயர்வு.
2. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசப் பயண அனுமதிச் சீட்டு வழங்குதல்.
3. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதிகள்.
4. கல்விப் படிகள்.
5. ஊதியம் சார்ந்த படிகள்.

6. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
7. சீருடைகள்
8. குடும்ப நல நிதி
9. திருமணக் கடன்
10. திருப்பான் படி (Steering Allowance)
11. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
12. விடுப்புப் பயன்கள்
13. விடுமுறை விடுதி
14. சிறப்பு நல நிதித் திட்டம்
15. ஊழியர்களின் பிள்ளைகளுக்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள்
16. போக்குவரத்து ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
17. தொழிலாளர் ஓய்வு கால சேம நல நிதித் திட்டம்
18. இறுதிச் சடங்கு செலவுகள்

**10. மக்கள் நீதிமன்றம்**

விபத்து இழப்பீடு வழங்குவதால் ஏற்படும் செலவினைக் குறைக்கவும், விரைவாக இழப்பீடு வழங்கவும், மக்கள் நீதிமன்றம் முறையில் இரு தரப்பினரும் சம்மதித்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் காரணமாக அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் கணிசமான அளவு செலவினம் குறைந்துள்ளது. 2005–2006 ஆம் வருடத்தில் போக்குவரத்துக் கழகங்கள் மக்கள் நீதிமன்றம்மூலமாக 389 வழக்குகளைத் தீர்வு செய்து, அதன்மூலம் ரூபாய் 315.64 இலட்சம் செலவினம் குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை 137 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு, ரூபாய் 91.23 இலட்சம் செலவினம் குறைந்துள்ளது.

**11. லெபனான் நாட்டிலிருந்து வெளியேறிய இந்தியர்களின் மறுவாழ்வில் போக்குவரத்துக் கழகங்களின் பங்கு**

மாநகரப் போக்குவரத்துக் கழகமும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகமும் ஜூலை மாதம் 21, 22 மற்றும் 25 ஆம்



நாட்களன்று லெபனான் நாட்டிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்த 620 இந்தியர்களை மாநிலத்தின் தென் மாவட்டங்களுக்குப் பாதுகாப்பாகவும், விரைவாகவும் அனுப்ப 19 பேருந்துகளை அனுப்பியது. மேலும் பல குழுவினர் திரும்பி வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களைத் தென் மாவட்டங்களுக்கு அனுப்ப அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தகுந்த முறையில் செயல்படும்.

**12. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்**

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் துவக்கப்பட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குதல், அதன்மீது கூண்டு கட்டுதல், பணிமனைகள் நிறுவுதல் மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கு நீண்ட கால நிதி உதவியைப் பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன்மூலம் பூர்த்தி செய்து வருகின்றது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாகப் பதிவு செய்து தவணைக் கொள்முதல் நிறுவனமாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

**நிதிச் செயல்பாடு**

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டிலும் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஈட்டிய ஆதாயம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டித் தள்ளுபடிக்கு முந்தைய ஆதாயம் | வட்டித் தள்ளுபடி செய்தது | வட்டித் தள்ளுபடிக்குப் பின்பும், ஆனால் வருமான வரிக்கு முன்பும் ஆதாயம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|---|---|
| 2003–2004 | 2,897.42 | 2,400.00 | 497.42 | 200.72 | 296.70 |
| 2004–2005 | 1,796.16 | 1,200.00 | 596.16 | 136.33 | 459.83 |
| 2005–2006 | 2,439.58 | 1,904.00 | 535.58 | 181.61 | 353.97 |

30–6–2006 ஆம் நாளன்று இந்நிறுவனத்திலுள்ள வைப்புத் தொகை ரூ.621 கோடியாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 30–6–2006 வரை ரூ.6,198.75 கோடி நிதி உதவி அளித்திருக்கிறது. போக்குவரத்துக் கழகங்கள், கடன் தொகைத் தவணைகளைக் காலதாமதமின்றித் திரும்பச் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக, "சிறந்த நுகர்வோர்" விருது ஏற்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

## 13. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.5 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும், ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும் தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2000 ஆம் ஆண்டு மே மாதம் இந்நிறுவனத்திற்காகச் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 இலட்சமாகவும் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 இலட்சமாகவும், உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது அரசால் நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் குழுவின் மேற்பார்வையில் இயங்குகிறது. இப்பணிக் குழு முழு நேர தொழில் முறை நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 11 மட்டும்தான்.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, கணினி மென்பொருள் தயாரித்தல், நிர்வாகச் சேவை, போக்குவரத்துப் பணி, தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளிலும் ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம் அந்தந்தத் துறைகளில் தகுதியும், அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர்களின் ஆதரவோடு இயங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் தனது தொழில்நுட்பச் சேவையை, சிறந்த தேர்ச்சி பெற்ற வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும், சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து ஆலோசனையைத் தனது பணித்தன்மைக்கேற்ப தேர்ந்தெடுத்துக்கொள்வதோடு, அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்கள்/விரிவுரையாளர்களின் சேவையையும் பயன்படுத்தி செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி, அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அனுபவம் மிக்க அலுவலர்களையும் தேவைக்கேற்றபடி இந்நிறுவனம் ஈடுபடுத்திக்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்து



ஆலோசனைப் பணிக் குழு, புதிய பணிகளைப் பெறுவதற்காக முன்னனுபவமும், திறமையும் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாகப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்று வருகிறது.

போட்டிகளுக்கிடையேயும் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு தனது தொடக்க காலமான 1984 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக முன்னேறி வந்துள்ளது. கணினிமயமாக்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிர்வாகச் சேவை போன்ற துறைகளில் பணிகளை விரிவாக்க நல்ல வாய்ப்பு உள்ளது. பல்வேறு தடைகளுக்கிடையேயும் இந்நிறுவனத்தின் செயலை விரிவாக்கவும், வருவாயை அதிகரிக்கவும், மிகப் பெரிய அளவில் பணிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விலை மதிப்பு அதிகமான உயர்வான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதற்கு ஏதுவாக, பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுவிற்குச் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

## 14. சாலைப் போக்குவரத்து நிறுவனம்

சாலைப் போக்குவரத்து நிறுவனமானது, சங்கங்களின் பதிவுச் சட்டம் 1860–ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் 2005–2006 ஆண்டில் தனது 30–வது ஆண்டுப் பணியில் அடியெடுத்து வைத்து, தொடர்ந்து பணி செய்து வருகின்றது. மேலும், சாலைப் போக்குவரத்து தொடர்புள்ளவற்றைப் பற்றி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டிற்காகப் பரிசோதித்து மதிப்பீட்டறிக்கை தருவது மற்றும் பலதரப்பட்ட பயிற்சி அளிக்கப்படுவதில் மிகப் பெரிய அளவில் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி எனும் தானியங்கி ஆராய்ச்சி சார்ந்த பொறியியல் கல்லூரி 1984 ஆம் ஆண்டில் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இதுவரை 4,150 பொறியாளர்கள் (பி.இ.), 15 முதுநிலைப் பொறியாளர்கள் (எம்.இ.), மற்றும் 275 கணினிப் பயன்பாட்டியலில் முதுகலைப் பட்டம் (எம்.சி.ஏ.) பெற்றவர்களும் இந்தப் பொறியியல் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில்

[2006 ஆகஸ்ட் 9

இந்த வருடம் இயந்திரவியல் பிரிவில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் (Ph.D) வழங்க அண்ணா பல்கலைக்கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது. இக்கல்லூரியில் நடத்தப்படும் கட்டடவியல், இயந்திரவியல் மற்றும் ஊர்தியியல் துறைகளுக்கு தரச் சான்று (Accreditation) பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெருந்துறை மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ், 1992–93 ஆம் கல்வியாண்டிலிருந்து பெருந்துறையில் சொந்த வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை இக்கல்லூரி 770 மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. இது தவிர, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்பப் பயிலகங்கள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992–93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வழங்கிய வட்டியில்லாக் கடனை வைப்புத் தொகையில் வைத்து, அதன்மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தில் அனைத்துக் கல்வி நிறுவனங்களும் இயங்கி வருகின்றன். மேலும் மேற்கண்ட அனைத்துக் கல்லூரிகளுக்கும் தேவையான மூலதனச் செலவு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் சிறப்புப் பங்குத் தொகையைக் (Special Contribution) கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்காக கும்மிடிப்பூண்டியில் ஒன்று, திருச்சியில் ஒன்று மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து மதுரை, சேலம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய இடங்களில் உள்ள 3 வட்டார பயிற்சி மையங்கள்மூலமாகவும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை அளித்து வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டு வரை 40,309 மாணவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இரு சக்கர வாகன ஓட்டுநர் மற்றும் சிறு வாகன ஓட்டுநர் பயிற்சி மையம், சென்னை தரமணியிலும், திருச்சிராப்பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கியப் பொரு'ட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், பயணச் சீட்டு அச்சிடல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படைப் பொருட்கள், பிஸ்டன் அசெம்பிளி, மசகெண்ணெய் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனம் முகமை நிறுவனமாகச் செயல்படுகிறது.



2006 ஆகஸ்ட் 9]

## 15. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, அரசுத் துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளை மேற்கொண்டு வரும் ஒரு சேவை புரியும் துறையாகும். இத்துறையின் பராமரிப்புக் கட்டுப்பாட்டில் வரும் அரசுத் துறை வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகும். இத்துறையில் இப்பணிக்கென மாவட்டத் தலைநகரங்களில் 20 தானியங்கிப் பணிமனைகளும், சென்னை, தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு சேவை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேலும் இச்செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று மண்டலத் துணை இயக்ககங்கள், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

அரசுத் துறை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும்பொருட்டு சென்னையில் இரண்டு எரிபொருள் வழங்கு நிலையங்கள் (நந்தனத்திலும், சென்னை, தலைமைச் செயலக வளாகத்திலும்) மற்றும் தஞ்சாவூர், மதுரை, சேலம், கோவை, திருச்சி, தருமபுரி, கடலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒரு எரிபொருள் வழங்கு நிலையம் என மொத்தம் பத்து எரிபொருள் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

## 16. சென்னை விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம்

கடந்த சில ஆண்டுகளில் சென்னை நகரம் தானியங்கி மோட்டார் வாகனங்கள், மின்னணுவியல் வன்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம். முதலியவற்றின் உற்பத்தி மற்றும் பழுதுபார்ப்புச் சேவை போன்ற துறைகளில் வெளிநாட்டினர் நேரடியாக முதலீடு செய்யும் ஆதார மையமாக வளர்ந்துள்ளது. இதுபோன்ற முதலீடுகள் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர, ஹுண்டாய், செயின்ட் கோபைன், மோட்டரோலா, நோக்கியா போன்ற அயல் நாட்டு முதலீட்டாளர்கள் சென்னையைத் தங்கள் உற்பத்திக்கு அடித்தளமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். தமிழகம், சுற்றுலாப் பயணிகளின் முக்கிய இலக்காக அமைந்துள்ளது. சமீப ஆண்டுகளில் சென்னை விமான நிலையம், பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு இயக்கம் இரண்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, சென்னை விமான நிலையத்தை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம், நமது எதிர்காலத் தேவைகளைச் சிரமமின்றி எதிர்கொள்ளலாம்.

[2006 ஆகஸ்ட் 9

## 17. ராஜீவ் காந்தி விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி நிறுவுதல்

இந்திய விமானத் துறையில் தற்போது வணிக ரீதியாக விமானங்களை இயக்குவதற்குப் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளுக்குக் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விமான ஓட்டிகளுக்குத் தேவையான பயிற்சிகளை அளிப்பதற்கு நாட்டில் ஒரு சில பயிற்சி நிறுவனங்களே உள்ளன. அதே நேரத்தில், இந்திய அரசின் திறந்த வான்வெளிக் கொள்கையின் காரணமாக, அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையின் அடிப்படையில், தனியார் விமான நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் விமானங்களை இயக்க ஆரம்பித்துள்ளன. இதனால் திறமையான விமான ஓட்டிகளின் தேவை அதிகரித்துள்ளது. விமானவியல் அறிவியல் அடிப்படையாகக் கொண்டு பயிற்சி அளிப்பதின்மூலம் விமான ஓட்டிகளின் திறமையைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்க இயலும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு மறைந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் பெயரின் நினைவாக சென்னைக்கு அருகில் உள்ள திருப்பெரும்புதூரில் ராஜீவ் காந்தி விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி என்ற ஒரு நிறுவனத்தை நிறுவ முடிவு செய்துள்ளது. இதன் தொடர்பாக, தமிழக அரசு மத்திய அரசுடன் ஏற்கெனவே தொடர்பு கொண்டுள்ளது.

## 18. சென்னை விமானப் பறக்கும் குழாம்

சென்னை விமானப் பறக்கும் குழாம் 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகளாக மாணவ, மாணவியர்களுக்கு விமானம் பறக்கும் பயிற்சி மற்றும் விமானம் பராமரிக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இக்குழாமில் பயிற்சி பெற்ற பல விமானிகளும், பொறியாளர்களும் விமானப் போக்குவரத்துத் துறையில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழக அரசு, சென்னை விமானப் பறக்கும் குழாமிற்கு நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையாக ஓர் ஆண்டிற்கு ரூ.3.80 இலட்சமும், விமான எரிபொருள் உதவித் தொகையாக ஓராண்டிற்கு ரூ. 3.72 இலட்சமும் வழங்குகிறது.



2006 ஆகஸ்ட் 9]

### மானியக் கோரிக்கை எண் 48

### போக்குவரத்துத் துறை

### வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு, 2006–2007

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 252,78,82 | 101,00,07 | 100,00,00 | 453,78,89 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 30,29,57 | 9,34 | – | 30,38,91 |
| | மொத்தம் | 283,08,39 | 101,09,41 | 100,00,00 | 484,17,80 |

### மானியக் கோரிக்கை எண் 48

### போக்குவரத்துத் துறை

### வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு, 2006–2007

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | | | | |
| | திட்டத்தில் சேராதது | 252,78,82 | – | – | 252,78,82 |
| | மாநிலத் திட்டம் | – | 101,00,07 | 100,00,00 | 201,00,07 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | | | | |
| | திட்டத்தில் சேராதது | 30,29,57 | 1 | – | 30,29,58 |
| | மாநிலத் திட்டம் | – | 9,33 | – | 9,33 |
| | மொத்தம் | 283,08,39 | 101,09,41 | 100,00,00 | 484,17,80 |

[2006 ஆகஸ்ட் 9

## 2006–2007 ஆம் ஆண்டு பகுதி இரண்டின்கீழான புதிய திட்டங்கள்

### திட்டப் பணிகளின் விவரம்

| | 2006-07-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| **தலைமைச் செயலகம்** | |
| 1. போக்குவரத்துத் துறையின் கணினி மையத்திற்குக் கூடுதலாகக் கணினிகள் வாங்குதல் | 4.00 |
| 2. போக்குவரத்துத் துறைக்கு ஒரு நகலெடு சாதனம் வாங்குதல் | 1.20 |
| **மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை** | |
| 3. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்ககம் மற்றும் 20 சார்நிலை அலுவலகங்களிலும் கணினிகள், லேப்–டாப் மற்றும் துணை சாதனங்கள் அமைத்தல் | 20.20 |
| 4. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை தொழில்நுட்பப் பணியாளர்களுக்குக் கைக்கருவிகள், உபகரணங்கள் மற்றும் புது வகை வாகனங்களுக்கான சிறப்பு கைக்கருவிகள் வாங்குதல் | 8.00 |
| 5. மதுரை, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் அரசு தானியங்கிப் பணிமனைகளில் சுத்திகரிப்பு மேடை, ஆழ்துளைக் கிணறு போன்ற கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல் | 9.30 |
| 6. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறைப் பணியாளர்களுக்குத் தண்ணீர் சுத்திகரிப்பு சாதனம், தண்ணீர் குளிரூட்டி, காற்றோட்ட சாதனம், காற்று வெளியேற்ற சாதனம், ஜெனரேட்டர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் | 6.80 |
| 7. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்ககத்தில் மின்னணு விவா வகைப்பாட்டுப் பிரிவு அமைத்தல் | 2.00 |
| 8. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் | 15.00 |
| மொத்தம் | 66.50 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227422
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.